விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு + 32

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 05 சனிக்கிழமை (20.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 001

நல்ல செய்தி கொண்டு வருபவன்
துணிவோடு கதவைத் தட்டுவான்
-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## 15ஆவது அகவையை நிறைவு செய்யும் இவ்வேளையில்...

எம் இனிய தமிழ் நெஞ்சங்களுக்கு பல்கோடி வணக்கம். உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை 15 நிறைவு.

15 ஆண்டுகள் இந்த மண்ணில் வேரூன்றி விருட்சமாகப் பரந்து நிற்கும் இவ்வேளையில் வலம்புரி எனும் பெரு விருட்சத்தைக் காப்பாற்றி வளர்த்தெடுத்த உங்கள் அத்தனை பேரையும் இருகரம் கொண்டு வணங்கி மகிழ்கின்றோம்.

கம்சன் எனும் அரக்கனிடம் இருந்து குழந்தை கிருஷ்ணனைக் காப்பாற்ற கோகுலம் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. அரக்கனை வதம் செய்யவந்த இறைவனுக்கு அதைச் செய்வது கடினம் இல்லையாயினும் அரக்கத்தனம் அழிதல் வேண்டும் என்பதை முதலில் மக்கள் உணர வேண்டும். அத்தகையதொரு உணர்தல் நிலையிலேயே அறத்தைக் காப்பாற்ற முடியும். அந்த வகையில் 20.12.1999 ஆம் ஆண்டு இந்த மண்ணில் பிறப்பெடுத்த வலம்புரிக் குழந்தையை அறம் வெல்வதற்காக நீங்கள் கண்ணீரால் வளர்த்தீர்கள்.

இறையருளும் குருவருளும் தமிழ் நெஞ்சங்களின் விசுவாசமான ஆசியும் வாழ்த்தும் இன்று 15 ஆவது அகவையை வலம்புரி பூர்த்தி செய்து 16 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றான்.

இந்தச் செய்தி நிச்சயம் உங்கள் இதயங்களை மகிழ்விக்கும். ஆம்! எம் இனிய தமிழ் நெஞ்சங்களே! எங்கள் இனம் பட்ட துயரங்கள் கொஞ்சமல்ல. அந்தத் துயரங்களால் எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் தங்களின் வளமான வாழ்வைத் தொலைத்து விட்டனர்.

இந்தத் துயரங்கள் சாதாரணமானவையல்ல. இந்தத் துயரங்கள் துடைக்கப்பட வேண்டும்; ஆற்றுப்பட வேண்டும் என்பதில் உங்கள் வலம்புரி என்றும் உறுதியோடு உள்ளதென்பதை இந்த இனிய நாளில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இன்றைய உலகில் ஊடகங்களின் வகிபாகம் மிகவும் உயர்வானது. எங்கள் இனத்தின் உரிமை தொடக்கம் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் வரை அனைத்திலும் ஊடக வகிபாகம் உயர்வு பெற்று உள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் ஊடகங்கள் பொறுப்பற்ற வகையில் செயற்படும் போது அதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தி விடும்.

அதிலும் குறிப்பாக சமூகப் பிறழ்வு சார்ந்த செய்திகள் எங்கள் குடும்ப உறவுகளை; தாய், தந்தை, பிள்ளை, சகோதரம் என்ற பாசப்பிணைப்புகளை வேரறுக்க வல்ல ஆயுதங்களாக பிரயோகிக்கப்படுவதை காண முடிகின்றது.


இத்தகைய போக்கு தடுக்கப்பட வேண்டும். இந்தப் பணியில் உங்கள் வலம்புரி என்றும் உங்களோடு நின்று பணிபுரியும் என்பதை இவ்விடத்தில் உறுதிபடக்கூறுகின்றோம்.

இவற்றுக்கு மேலாக, எங்கள் மக்களின் உரிமைக்காக, எங்கள் மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக அறத்தின்பால் நின்று பத்திரிகைத் தர்மத்தோடு தன் பணியை வலம்புரி செம்மையாக ஆற்றுவான் என்பதை மனம் மொழி மெய்களால் உறுதியிட்டுக் கூறுகின்றோம்.

வலம்புரி என்றும் நடுவுநிலைமைப் பண்போடு பணி புரிய உங்களின் மேலான ஆசியும் இறையருளும் என்றும் எங்களோடு இருப்பதாக.

# வலம்புரி யாழ்ப்பாணத்தின் இன்னொரு பல்கலைக்கழகம்

## பேராயர் ஜெபநேசன் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மண்ணில் வெளிவரும் வலம்புரி யாழ்ப்பாணத்திற்குக் கிடைத்த இன்னொரு பல்கலைக்கழகம் எனப் புகழாரம் சூட்டியுள்ளார் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் பேரறிஞர் எஸ்.ஜெபநேசன்.

வலம்புரி நாளிதழின் 15 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அவர் வழங்கிய வாழ்த்துச் செய்தியிலேயே வலம்புரி ஒரு பல்கலைக்கழகம் எனப் புகழ்ந்துள்ளார்.

பேராயர் எஸ். ஜெபநேசன் விடுத்த அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வலம்புரி மடந்தைப் பருவத்தை அடைந்து நம்நாட்டில் ஒய்யாரமாக உலவி வருவதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தொடக்க காலத்தில் இருந்த தடைகள், போட்டிகள், குழப்பங்கள் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்து வலம்புரி வெற்றி நடைபோடுவது தமிழ் மக்கள் அனைவருக்குமே மகிழ்ச்சி அளிப்பதாகும்.

ஜே.பேற்றன் என்ற அறிஞர் "பத்திரிகைகள் தான் சாதாரண மக்களின் பல்கலைக் கழகங்கள்; சாதாரண மக்கள் பத்திரிகைகளைத் தவிர வேறு எதனையும் வாசிப்பதில்லை" என்று கூறினார்.

வலம்புரியின் வளர்ச்சியைக்கண்டு, நாம் யாழ்ப்பாணத்திற்கு இன்னொரு பல்கலைக்கழகம் அமைந்து விட்டதென்று குதூகலமடைகின்றோம்.

மக்களுக்கு சகல துறைகளிலும் அறிவூட்டும் பணியை வலம்புரி சிறப்பாகச் செய்து வருகின்றது.

வலம்புரி தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு அறிவூட்டும் பணியைசெய்யவேண்டும்என வாழ்த்துகின்றேன் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (எ)

# 100 நாளில் புதிய தேசம்!

## மைத்திரிபாலவின் விஞ்ஞாபனம் வெளியீடு

(கொழும்பு)

புதிய ஜனநாயக முன்னணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின், 100 நாட்களுக்குள் புதிய தேசம் எனும் தொனிப்பொருளில் வடிவமைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

21 ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் பிரசாரத்தில் இராணுவத் தளபதி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினர் மத்தியில் படைத்தளபதி லெப். ஜெனரல் தயா ரத்நாயக்க தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய

24 ஆம் பக்கம் பார்க்க....

## சண்மாஸ்டரின் மனைவி கைது

(கொழும்பு)

இந்தியாவிற்கு செல்ல முற்பட்ட மூவர் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலைய

24 ஆம் பக்கம் பார்க்க....

## கட்அவுட் விழுந்து 6 பேர் படுகாயம்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி ஹிஸ்புல்லா அரங்கை சுற்றி கட்டப்பட்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்

21 ஆம் பக்கம் பார்க்க....

## சட்ட விரோத முறையில் ஆளுநர் பதவி வகிப்பு

### முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 5 வருடங்களாக வடக்கு மாகாண ஆளுநரும் பிரதம செயலரும் சட்ட விரோதமான முறையிலேயே பதவியிலிருந்ததாக வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் 2015 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் விவாதம் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண பிரதம செயலர்மற்றும்ஆளுநருக்கும்

21 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்ச்செல்வனின் கொலைக்கு பிரபாவின் பாதுகாவலரே காரணம்

### தகவல் வெளியிட்டது விக்கிலீக்ஸ்

(அமெரிக்கா)



விமானப் படையினரின குண்டு வீச்சில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனும், ஏனைய தலைவர்களும் கொல்லப்பட்டமைக்கு, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் முன்


21 ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படை படகு மோதி மீனவர் உயிரிழப்பு!

## எழுவைதீவில் சம்பவம்



(எழுவைதீவு)

எழுவைதீவு கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த் மீனவரின் படகுடன் கடற்படையின் படகு மோதியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 5.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதில் எழுவைதீவினைச் சேர்ந்த அலெக்சாண்டர் அன்ரனி யேசுதாசன் (வயது 60) என்பவரே உயிரிழந்தவராவார்.

வேகமாக வந்த கடற்படைப் படகு பிரஸ்தாப மீனவரின் படகுடன் மோதிவிட்டு சென்றதாகவும் இதில் படுகாயமடைந்த அவர் வைத்திய சாலைக்கு எடுத்து வரும் வழியில் உயிரிழந்ததாகவும் எழுவைதீவு தோமையர் கடற்தொழிலாளர் சங்கத்தால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இவர் இச் சங்கத்தின் உப தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.(எ)

# பிற்போடப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த கலைஞர்களுக்காக நாளை நடைபெற விருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான செய்தி 20-ம் பக்கம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (எ-277)

# குடும்பஸ்தரை மோதிய ரயில்

(யாழ்ப்பாணம்)

புகையிரதப் பாதையில் நடந்து சென்ற குடும்பஸ்தரை புகையிரதம் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகம் அருகா மையிலுள்ள புகை யிரத கடவைக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கொழும்புத்துறை சேர்ந்த சிவக் கொழுந்து ஞான ராசா (வயது 59) என்பவரே இவ் விபத்துச் சம்ப வத்தில் உயிரிழந்த வராவார்.

யாழ்.புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதம் மோதிய திலேயே குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

புகையிரதம் சென்று கொண்டிருக்கும் போது குறித்த குடும்பஸ்தவர் தண்டவாளத்தின் மீது நடந்து சென்றதாகவும் இச் சம்பவம் தற்கொலையாக இருக்கலாம் எனவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-4)


## அமைதியின் சொற்கள்
WORDS OF PEACE

டிசம்பர் மாதம் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30-9.00 மணிவரை மக்கள் T.Vயில் (இந்தியன் சனல்) “அமைதியின் சொற்கள்” நிகழ்ச்சி நடைபெற உள்ளது. கண்டு ஆனந்தியுங்கள்

(8823)


## கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடல்

21.12.2014-ல் நடைபெற இருந்த மேற்படி ஒன்றுகூடல் தவிர்க்க முடியாத காரணங்களினால் 25.01.2015-ம் நாளிற்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை பழைய மாணவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**இ.நிசாந்தன்** -செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

(சி-9426)

## கண்ணீர் அஞ்சலி



உதயம் 21.06.1954 — அஸ்தமனம் 19.12.2014

**நாகலிங்கம் ஜெயக்குமார்**

எமது பாடசாலை அதிபர் செல்வி நா.ஜெயராணி அவர்களின் அன்புச் சகோதரன் திருவாளர் நாகலிங்கம் ஜெயக்குமார் அவர்கள் பிரான்சில் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


பாடசாலைச் சமூகம்
யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்

(8822)

## கண்ணீர் அஞ்சலி

**நாகலிங்கம் ஜெயக்குமார்**

மலர்வு 21 - 06 - 1954 — உதிர்வு 19 - 12 - 2014



எமது குடும்ப நண்பர் திருவாளர் நாகலிங்கம் ஜெயக்குமார் இறைவனடி சேர்ந்தமை குறித்து ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா இலுப்பைத் தாழ்வு முருகனின் பாதகமலங்களை சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி நித்தியானந்தக்குருக்கள் குடும்பத்தினர்**
**சிவானந்த பவனம், சங்கானை.**

(8822)

## நின் இதம் கலந்த இன்குரலின் பதங்கள் ஒலிக்கிறது...



அமரர் சொக்கலிங்கம் பகீரதன் அவர்கள்

[அதிபர், யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்]

மலர்வு:-27-04-1959

உதிர்வு:-17-12-2014

குறிப்பறிந்து கல்விதனை நெறிப்படுத்திப் புகட்டிய
தத்துவ நூல் நெறியுணர்ந்த வித்தகனே!
வளம்மிகு வணிகப்பட்டதாரியானாய்!
நாட்டமுடன் வேலணைக் கோட்டத்தின் பேர் பெறு பணிப்பாளராய்
பக்குவமிக்க நல் அதிபராய் மலர்ந்தனன்
கொஞ்சு தமிழ்ப் பாவலனே! விஞ்சுபுகழ் முதல்வனே!
வஞ்சமில்லா உள்ளமே! நெஞ்சம் நெகுளுதைய! நின் பிரிவு!

அன்னாரின் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
பிரிவுத் துயரில் பங்கு கொள்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!!!

கோட்டக் கல்வி அலுவலகம், வேலணை. (8820) கோட்டக் கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், அலுவலக அலுவலர்கள்


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

SPEED LANKA EXPRESS

வெளிநாடுகளுக்கான

தபால் பொதி விநியோக சேவை

பண்டிகை கால விசேட விலை சலுகை




- உள்நாட்டு வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்

Speed Lanka Express (Pvt) Ltd
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0772931062, 0776217926 www.speedlanka.net


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலம்புரி

## 15வது ஆண்டு நிறைவு விழா



## 20.12.2014

இடம்:- இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபம், நீராவியடி.
காலம்:- 20.12.2014 (சனிக்கிழமை) பி.ப. 2.30 மணி
தலைமை:- உயர் திரு. சிவஞானம் வெற்றிவேலாயுதம் (நிர்வாக இயக்குநர், வலம்புரி)
பிரதம விருந்தினர்:- பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்)

### ஆசியுரைகள்

* ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் (ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்)
* சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் (தலைவர், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்)
* அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் (குரு முதல்வர்- யாழ். மறை மாவட்டம்)
* அதிவண. பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் (முன்னாள் பேராயர், தென்னிந்தியத் திருச்சபை)
* அல்ஹாஜ் ஏ.எம்.ஏ அஸீஸ் மௌலவி (காஸிமி) (தலைவர், யாழ், கிளிநொச்சி மாவட்ட உலமா சபை)
* கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

### வாழ்த்துரைகள்

* உயர்திரு. எஸ். தட்சணாமூர்த்தி (இந்திய பிரதித் துணைத்தூதுவர்- யாழ்ப்பாணம்)
* பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா (ஓய்வு நிலை தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)
* பேராசிரியர் தி.வேல்நம்பி (பீடாதிபதி, வணிக முகாமைத்துவபீடம்,யாழ். பல்கலைக்கழகம்)

### நிகழ்ச்சி நிரல்

* மங்கல இசை (நல்லூர் பி.ரஜீவன் குழுவினர்)
* மங்கல விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* வரவேற்பு நடனம் (மாணவிகள், கலைத்தூது அழகியல் கல்லூரி, திருமறைக்கலாமன்றம்)
* வரவேற்புரை: திரு.சி.ஜி.திருமாலழகன் (வலம்புரி)
* தலைமையுரை
* ஆசியுரைகள்
* வாழ்த்துரைகள்
* பிரதம விருந்தினர் உரை
* சிறப்புரை:- ந.விஜயசுந்தரம் (வலம்புரி)
* கௌரவிப்பு : உயர்திரு. க.லோகநாதன் (மூத்த ஊடகவியலாளர்)
* வாழ்த்துப்பா : மாவை.நா.கஜேந்திரன் (பொது முகாமையாளர்- வலம்புரி)
* இசைக் கச்சேரி
  பாட்டு :- ஆசிரியை திருமதி ஜெயபாரதி கௌசிகன் (இயக்குநர், அமிர்தவாஹினி இசைமன்றம்)
  வயலின்:- திரு. ஏ.ஜெயராமன்
  மிருதங்கம்:- திரு. சதா வேல்மாறன்
  தபேலா:-திரு.எஸ்.விமல்சங்கர்
  ஓகன்:- திரு.ஜி.சத்தியன்
* நன்றியுரை:- திரு. க.சதீபன் (செய்தி ஆசிரியர்,வலம்புரி)
* நிகழ்ச்சி நெறியாள்கை: திரு. ச.லலீசன் (உப அதிபர் , ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

**உங்கள் அனைவரையும்**
**இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்**

**15 வருட ஊடகப் பணியில் எம்மோடு தோள் கொடுத்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்**


இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

**வலம்புரிக் குடும்பம்**




YARL BABY NEEDS & PHARMACY
யாழ்.பேபி நீட்ஸ் அன் பார்மசி

* குழந்தைகளுக்கான பருத்தி உடுப்பு, சூட்வகைகள், நப்கின், பம்பஸ் வகைகள், யோன்சன் பேபி தயாரிப்புக்கள், வோக்கர், கட்டில், விளையாட்டுப் பொருட்கள், பால்மா வகைகள், அன்பளிப்பு பொருட்கள்.
* பிரசவத் தாய்மார்களுக்கான அனைத்து பொருட்கள்
* ஆங்கில மருந்து வகைகள்



இல. 388, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 222 8013



SUN RISE MEDI CLINIC
சன்றைஸ் மெடி கிளினிக்

யாழ். நகர மத்தியில் சகல வசதிகளுடனும் உயர்ந்த வைத்திய சேவையை வழங்கும் ஓர் நிறுவனம்



* வைத்திய நிபுணர் சேவை : சத்திரசிகிச்சை, பொது மருத்துவம் என்பு முறிவு, நெரிவு, கண், காது, மூக்கு, தொண்டை, கர்ப்பிணி சிகிச்சை, தோல் சிகிச்சை, பல் சிகிச்சை.
* டிஜிற்றல் எக்ஸ்றே : துல்லியமான X.Ray படங்களை கணப்பொழுதில் பெற்றுத்தரும் - நவீன உபகரணம் (இலங்கை அணுசக்தி அதிகாரசபை அங்கீகாரம் பெற்றது)
* ECG - ஈ.சீ.ஜீ
* நவீன ஆய்வுகூடம் (Lab) : சர்வதேச தரத்திலான இயந்திரங்கள் மூலமான இரத்த, சிறுநீர் பரிசோதனைகள்.
* அல்ட்ரா சவுண்ட் ஸ்கானிங் (Ultra Sound Scan) : Full body Checkup
* எக்கோகார்டியோகிறம் - (ECHO) : இதயத் தொழிற்பாட்டையும், இதய குறைபாடுகள் கண்டறியும்.
* Foreign Medical / Driving Licence Medical
* Indoor Pharmacy (மருந்தகம்)

சன்றைஸ் மெடி கிளினிக்.
N0. 388, 1st Floor, Hospital Road, Jaffna.
T.P : 021 222 6069


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் வகுப்பு முதல் ! பட்டப்படிப்பு வரையான !!



சகல புத்தகங்களையும் 2015 ஆம் ஆண்டுக்கான புதிய பதிப்பு ந.சந்திரகுமார் (மட்டக்களப்பு) அவர்களின் தரம் 1 முதல் 5 வரை யான சகல பாடப் புத்தகங்களும் வெளிவந்து விட்டன.

மற்றும் இலங்கையின் பிரபல ஆசிரியர் ஏ.எஸ்.ஜௌபர் அவர்களின் எழுத்துருவாக்கத்தில் உருவான பாடப்புத்தகங்கள் 2015 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாண வர்களுக் கான விசேட கற்றல் வழிகாட்டி நூல்கள்.

ENGLISH MEDIUM BOOKS AND MODEL PAPERS
GRADE 6 TO 11 INTERNATIONALSCHOOL BOOKS
GEADE - 1 TO 5

சகல விதமான கொப்பி வகைகளும் 2015 ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள், டயறிகள் என்பவற்றையும் பாடசாலையில் வழங் கப்படும் SCHOOL LIST இற்கு தேவையான சகல பொருள்களும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறக்கப்படும்.
அன்னை புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
021 222 9881

## N MOBILE



Dealers in Wholesale & Retail
Mobile Phone, Accessories & Repairing
No. 11, (UP. Stairs) New Market,
Hospital Road, Jaffna.

Tel : 021 222 0875

Dialog airtel M HUTCH etisalat

## இந்தியத் திருத்தல யாத்திரை

இந்த யாத்திரைகள் அனைத்தும் 25.01.2000 ஆண்டு நாட்கள் 15 மாநிலங் களுக்கான யாத்திரை ஆரம்பம் 25.01.2015 யாத்திரீகர் 10பேர் மலைக் கோட்டை,விநாயகர் திருப்பதி, பஞ்சபூததலங்கள் மேல் மருவத்தூர், ஆறு படை வீடுகள், 9 நவக்கிரக ஆலயங்கள், மதுரை மீனாட்சி, குருவா யூர் ,மைசூர் சாமூண்டிஸ்வரி, பிள்ளையார் பட்டி தஞ்சாவூர், குன்றக் குடி பிரம்மா கோவில் பிருந்தாவனம் காடின் ஐயப்பசாமி சென்னைச் சீரடி பாபா, மேல் மருவத்தூர், வட பழனி மாங்காடு உட்பட 60 இற்கு குறை யாத ஆலயங்களை தரிசிப்பதுடன் மைசூர், பிருந்தாவனம், பாண்டிச் சேரி, மெரீனா பீச், மணக்குழவிநாயகர் பீச் ஆகியவையும் காணலாம்.

எமது சேவை

இரு வழி விமான..., மூன்று வேளை உணவு, சுத்தமான சைவக் ஹோட்டல்களில் தரமான தங்குமிடங்கள், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை (சுடுதண்ணீருடன் உள்ள அறைகள் எடுத்து தங்க வைக்கப்படுவீர்கள்). AC வாகனவசதி 1லீற்றர் மினரல் வோட் டர் ,4 மணி காப்பி, ரீ இவை அனைத்தும் தங்கள் கட்ட ணத்துள் அடங்கும். இதைத் தவிர ஆலயங்களில் எடுக்கும் 50 புகைப்படங்கள் இலவசமாக (அன்பளிப்பாகத்தரப்படும் ). முக்கிய மான 5 ஆலயங்கள் மற்றைய ஆலயங்கள் தவிர, சகல ஆலயங்களுக்கும் நுழைவுக்கட்டணங்கள் (ஆலய நுழைவுக் கட்டணங்கள் மட்டும் எமது பொறுப்பு) இவை அனைத்தும் எமது தனிப்பட்ட சேவை . விருப்பமுடையவர்கள் விபரம் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். மேலும் 25.12.2014 க்கு பின் தொடர்பு கொள்ளவும்.

விபரங்களுக்கு
கலாநிதி T .ஸ்ரீரெங்கநாதன்,39/3/6 செட்டியார்தெரு,
கொழும்பு.11 T.P.0777680102



சகல பாமசி & குறோசறீஸ்
பொருட்களையும், குளோன் வகைகளையும்,
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள.

## றூபா பன் முக வர்த்தகம்

தொ.பே.இல. 021 222 2479
இல.104 A,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

## அசோகா நகை அகம்


ASOKA JEWELERS

நம்பிக்கை நாணயம்
உத்தரவாதம்
22 கரட் தங்க
நகைகளுக்கு

இல:111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 6290



வலம்புரி வெற்றி ஆண்டுகளின் தொடர்ச்சியில்
மகிழ்ச்சியுடன் நாங்களும் வாழ்த்தி
இணைகிறோம்



## வாழ்த்துவோர்

GUNAA BEST PC

2 மணித்தியாலத்தில்
கணனி திருத்தம் | கணனிகள் விற்பனை


பாவித்த லப்டொப் வாங்குதல் | புதிய பாவித்த லப்டொப்கள் விற்பனை

உங்கள் வீடுகள், அலுவலகங்களுக்கு
வந்து கணனிகள், லப்டொப்கள்
திருத்தி தருகிறோம்

அழையுங்கள் – 077 9086 737

Gunaa Best Pc
52, Hospital Road,
Jaffna.

Computer Repair Within Two Hours
Used Laptop, PC Purchase
Computer, Laptop Sale



SINGER

## அதி விசேட கொடுப்பனவுகள்


கடன் அட்டைகளுக்கு 24 மாதங்கள் வரை 0% வட்டி

10 வர்த்தக நாமங்களை கொண்ட 50 மாதிரிகள்

SINGER SAMSUNG HITACHI SHARP PHILIPS
SONY TCL GRUNDIG UMC Skyworth

வட்டி இல்லா கொடுப்பனவு மற்றும் ரூ.4000/- பரிசு கூப்பன்

மாற்றீடு கழிவு ரூ.55,000/- வரை




இக்கொடுப்பனவு 2014 டிசெம்பர் 31 வரை மட்டுமே.

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 021-2225408 | சங்கானை | 021-2251100 |
| நெல்லியடி | 021-2264937 | சுன்னாகம் | 0212240555 |
| பருத்தித்துறை | 021-2263411 | முல்லைத்தீவு | 021-2290180 |
| சாவகச்சேரி | 021-2270197 | கொடிகாமம் | 077-6433888 |
| மானிப்பாய் | 0215100280 | கிளிநொச்சி | 021-2280199 |

011 5 400 400 http:// www.singersl.com

நிபந்தனைகளுக்குட்பட்டது

கிடைக்குமிடங்கள்
SINGER Plus Approved Dealers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை உப தபாலகத்தை வலி.வடக்கு எல்லைக்குள் மாற்றுக

## பிரதேச சபை அமர்வில் தீர்மானம்

எமது வலி.வடக்கு பிரதேசம் தற்போது துரிதகதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்ற ஒரு பிரதேசம். இங்கு சகல கட்டுமானங்களும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. காங்கேசன்துறை உப தபாலகம் இணுவில் பகுதியில் காணப்படுவதால் எமது பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். அதனை உடனடியாக எமது பிரதேச எல்லைக்குள் மாற்றுதல் வேண்டும்.

இவ்வாறு தீர்மானம் ஒன்றை முன்வைத்தார் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன். வலி.வடக்கு பிரதேச சபையின் டிசெம்பர் மாதத்துக்கான கூட்டம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது. சபை அமர் வின்போதே அவர் மேற்கண்ட தீர்மானத்தை முன்வைத்தார். இந்தத் தீர்மானத்தை உறுப்பினர்களான மயூரதன் முன்மொழிய, திருஞானம் வழி மொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாவிட்டபுரம், கீரிமலை என்று பெருமபாலான பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியேறியுள்ளனர். இவர்கள் தமக்குரிய தபால்களைப் பெறுவதற்காகத் தினந்தோறும் இணுவில் பிரதேசத்துக்குச் சென்று பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப் படுகின்றது. இதனால் அந்தப் பிரதேச மக்கள் பெரிதும் விசனமடைகின்றனர்.

தற்போது காங்கேசன்துறை வரை புகையிரதம் செல்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. காங்கேசன்துறை, தெல்லிப்பழை புகையிரத நிலையங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. தபாலகம் எமது பிரதேசத்தை அண்மித்து அமைந்தால் இரவு மெயிலில் உடனுக்குடன் தபால்களை அனுப்புவதற்கு இலகுவாக இருக்கும்.

ஆகவே, காங்கேசன்துறை உப தபாலகத்தை வலி.வடக்கு பிரதேச எல்லைக்குள் பிரதேச மக்களின் நலனுக்காக உடன் மாற்றியமைக்குமாறு தீர்மானத்தை இந்த அவையின் முன் சமர்ப்பிக்கின்றேன் என்று அவா மேலும் தெரிவித்தார். (இ-78)

# குருதிக்கொடை நிகழ்வு நாளை

(துனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சமமேளத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெற வுள்ளது.

எனவே குருதிக்கொடை வழங்க விரும்பும் இளைஞர் யுவதிகளை சமுகமளிக்குமாறு சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ச.மதியுகன் கேட்டுள்ளார். (இ-37)

# மக்கள் வாக்களிக்கக்கூடிய பின்னணியை அரசாங்கம் உருவாக்க வேண்டும்

(கொழும்பு)

சதந்திரமாக மக்கள் வாக்களிக்கக்கூடிய பின்னணியை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஆறு ஆண்டுகளுக்கான அரசாங்கமொன்றை தெரிவு செய்வதற்கான தீர்மானமிக்கதொரு தேர்தலில், நாட்டின் அனைத்து பிரஜைகளும் சுயாதீனமான முறையில் வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தேர்தல் வன்முறைகளினால் நாட்டில் பாரியளவில் பிரச்சினைகள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

சட்டவிரோத செயற்பாடுகளுக்கு அடி பணியாது மனச்சாட்சிக்கு விரோதமின்றி மக்கள் வாக்களிக்க வேண்டும். இன்னும் சில நாட்களில் பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

அவற்றை இன நல்லிணக்கத்துடன் மிகவும் சிறந்த முறையில் வரவேற்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சுயாதீன தேர்தல் தொடர்பில் அண்மையில் நடைபெற்ற சர்வமதத் தலைவர்கள் சந்திப்பில் பங்கேற்ற போதே அவர் இதனைக் தெரிவித்துள்ளார். (இ-5)


# மரண அறிவித்தல்

## சந்திரசேகரம் பிறைசூடி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ச.பிறைசூடி அவர்கள் (18.12.2014) வியாழக்கிழமை அன்று சிவபதமெய்தினார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் குருமன்காட்டில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருமன்காடு வவுனியா

தகவல் எட்மண்ட் குடும்பத்தினர்

(9433)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தும் சீனா!

**இவ்வாறு அமெரிக்காவை தளமாகக்கொண்ட 'Stars and Stripes' ஊடகத்தில் Wyatt Olson எழுதியுள்ள ஆய்வுக்கட்டுரையின் மொழியாக்கம்....**

கிறிஸ்தோபர் கொலம்பஸ் மாலுமியாக இருந்த சான்ரா மரியா கப்பலை விட 200 இற்கும் மேற்பட்ட மிகப் பெரிய கப்பல்களை சீனாவை ஆண்ட செங்க் ஹீ என்கின்ற ஆட்சியாளர் வைத்திருந்தார். பல சிறிய படகுகள் இணைக்கப்பட்ட இவ்வாறான 50 கப்பல்கள் 27,000 வரையான வீரர்களை ஏற்றிக் கொண்டு தென்கிழக்கு ஆசியாவான இந்திய உபகண்டம், மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டன. இது சீனாவின் ஆக்கிரமிப்பிற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

கடந்த பத்தாண்டுகளில் முதன் முதலாக இந்த ஆண்டு சீனா தனது பாதுகாப்புச் செலவீனத்தை 131 பில்லியன் டொலராக உயர்த்தியுள்ளதாக இதன் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அமெரிக்காவுக்கு அடுத்ததாக இராணுவத் துறைக்காக அதிக நிதியை ஒதுக்கும் நாடாக சீனா விளங்குகிறது.

கடந்த ஆண்டைவிட சீனா இந்த ஆண்டு 12 சதவீதத்தால் தனது பாதுகாப்புச் செலவீனத்தை அதிகரித்துள்ளது. குறிப்பாக தென்சீன மற்றும் கிழக்கு சீனக் கடற்பகுதியின் ஊடாக ஆசியாவைச் சேர்ந்த சில தீவுகளின் இறையாண்மையை உரிமை கோருவதாலேயே சீனாவின் பாதுகாப்புச் செலவீனமானது தற்போது மிகவும் அதிகரிததுள்ளது.

சீனா தனது கடந்தகால வரலாற்றில் மேற்கொண்டதுபோன்று பல நாடுகளின் இறையாண்மையை உரிமை கோருவதன் மூலம் ஒரு சக்திமிக்க நாடாகத் தன்னை மாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சீனத் தத்துவவாதியான கொன்பியூசியசின் கருத்துக்கள் மற்றும் சீனப் பெருஞ்சுவர் கட்டப்பட்டமை போன்ற வரலாற்று சார் நிகழ்வுகள் சீனா முன்னர் அதிகாரம் மிக்க ஒரு நாடாக விளங்கியதை உறுதிப்படுத்துவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான வரலாற்று நிகழ்வுகள் சீன கம்யூனிசக் கட்சியானது தனது அயல் நாடுகளின் கோபத்தைத் தணிப்பதற்கும் உள்நாட்டு அபிப்பிராய பேதங்களைக் களைவதற்காகவும் பயன்படுத்திவரும் மிக முக்கிய கருவியாகக் காணப்படுகின்ற போதிலும் உண்மையில் இவை சீன வரலாற்றில இடம்பெற்ற அசாதாரண விடயங்கள் என ஆசிய வல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சீனா தனது உச்சக்கட்ட அதிகாரத்தைக் காண்பிப்பதற்காக தனது இராணுவப் பலத்தைப் பயன்படுத்துவதாக இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

"சீனா பிராந்திய ரீதியாகவும் கடல்சார் ரீதியாகவும் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்காக இவ்வாறான புராணக் கதைகள் மற்றும் வரலாற்றுச் சம்பவங்களைப் பயன்படுத்தி வருகிறது. இவ்வாறான சம்பவங்களைச் சுட்டிக்காட்டி நீரிலும் நிலத்திலும் மேலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட சீனா முற்படுகிறது" என பாதுகாப்புக் கற்கைகளுக்கான ஆசிய-பசுபிக் மையத்தின் சீன வல்லுனரான மோகன் மலிக கடந்த ஆண்டு வெளியிட்ட ஆக்கம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.



"சீனாவின் பாடப் புத்தகங்களில் மத்திய இராச்சியத்தில் சனாவால் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றம் தொடர்பாகவும் மற்றும் தென் மற்றும் கிழக்கு ஆசியாவில் சீனாவின் செல்வாக்குக்கு உட்பட்ட நாடுகள் சீனாவை மதிக்க வேண்டும் என்கின்ற கருத்தியல் உட்சேர்க்கப்பட்டுள்ளது" என மோகன் மலிக் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் கடந்தகால வரலாறானது சீனாவின் கம்யூனிசக் கட்சியின் வெளியுறவுக் கோட்பாட்டில் முதன்மைப்படுத்தப்படடுள்ளது. இது சீனாவின் தற்போதைய அதிபர், சீன கம்யூனிசக் கட்சியின் தலைமை மற்றும் மத்திய இராணுவ ஆணைக்குழுவின் தலைமை போன்றவற்றுக்கு மிகவும் முக்கியமானதாகும்.

தற்போதைய சீன அதிபர் கி.மு 500 இல் வசித்த ஆசிரியரும் தத்துவவாதியுமான கொன்பியூசியசின் கருத்தியலை வலியுறுத்தி வருகிறார். "சீனாவின் வரலாற்றுப் பாரம்பரியங்கள் நல்லாட்சிக்கும் திறமையான ஆட்சிக்கும் நன்மையை வழங்கும்" என செப்ரெம்பரில் பீஜிங்கில் இடம்பெற்ற கொன்பியூசியஸ் மன்றத்தில் சீனப் பிரதமர் தெரிவித்திருந்தார்.

"சீனாவின் கடந்த காலமானது இதன் எதிர்காலத்திற்கான ஒரு திட்டமாகக் காணப்படுகிறது" என மலிக் தனது நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். பிராந்திய ஒழுங்கிற்கும் அதன் பாதுகாப்பிற்கும் மிகப் பெரிய சவாலாகக் காணப்படுகின்ற கம்யூனிசக் கட்சியின் வரலாற்றுப் பார்வையை சீனா தனது கடல்சார் செல்வாக்கை அதிகரிப்பதற்குப் பயன்படுத்துகிறது. "இங்கு வரலாறு என்பது ஒரு விவாதத்திற்குரிய ஒன்றாகக் காணப்படுகிறது. யாருடைய வரலாற்றுப் பார்வை துல்லியமானது?" என மலிக் மேலும் கேள்வியெழுப்பியுள்ளார்.

"மாக்சிய மற்றும் லெனினிசக் கருத்தியல்கள் முறிவடைந்ததால் தற்போது சீனா அதன் கம்யூனிசக் கட்சியில் தங்கியிருக்க வேண்டிய நிலையை ஏற்படுததியுள்ளது. அதாவது 1989 இல தினமென் படுகொலை இடம்பெற்றதிலிருந்து சீனாவில் தேசப்பற்றுக் கல்வி என்பது ஊட்டப்பட வேண்டும் என சட்டமாக்கப்பட்டுள்ளது. இது சீனாவின் ஆட்சியை நியாயப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது" என மலிக் குறிப்பிடடுள்ளார்.

"சீனா ஒரு பிராந்திய சக்தியாக வளர்வதையே அதன் வெளியுறவுக் கோட்பாடு மிகப் பலமாக வெளிப்படுத்தி வருகிறது. இதனை சீன வரலாறு தொடர்பான ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. சீனா அதிகார சக்தியாக மாறியபோது அது மிகவும் ஆக்கிரமிப்பு மிக்க நாடாக விளங்கியது. இதேவேளையில் சீனாவின் அதிகார சக்தி குறையும்போது இது தன்னைத் தானே அதிகம் பாதுகாத்துக் கொண்டுள்ளது. இது சீனாவின் வரலாற்றின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது" என மேற்குலக மிச்சிக்கன் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் மற்றும் பொது விவகார, நிர்வாகக் கற்கைகளுக்கான திணைக்களத்தின் உதவிப் பேராசிரியரும் 'Harmony and War: Confucian Culture and Chinese Power Politics' என்கின்ற நூலின் ஆசிரியருமான யுவான் காங்க் வொங்க் குறிப்பிட்டுள்ளார்.

கொன்பியூசியசின் நீதி, சமூக மற்றும் தலைமைத்துவ தத்துவவியல்கள் கி.பி 960 தொடக்கம் 1644 வரையான காலப்பகுதியில் இராணுவத் தீர்வில் செல்வாக்குச் செலுத்தியதாக வாங் தெரிவித்தார். "சீனாவின் ஆக்கிரமிப்புக்கள் அதிகரித்த வேளையில் கொன்பியூசியசின் கருத்துக்கள் இதில் செல்வாக்குச் செலுத்தியதற்கான எவ்வித சாட்சியங்களும் காணப்படவில்லை. சீனா தனது இராணுவப் பலத்தை உபயோகிப்பது எனத் தீர்மானித்தபோது சீனா மற்றும் இதன் சவால்மிக்க நாடுகளுக்கு இடையிலான வலுச் சமநிலை தொடர்பான உண்மையான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு கொன்பியுசியசின் தத்துவங்கள் பயன்படுத்தப்பட்டன. சீனா பலவீனமாக இருந்தபோது தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளை அதிகம் மேற்கொண்டது" என வாங் குறிப்பிடுகிறார்.

1470 களில் சீனா தனது அதிகாரம் குறைவதாகக் கருதியபோது சீனப் பெருஞ்சுவரை கட்டத் தொடங்கியதாக வாங் தெரிவித்தார். 20 ஆண்டுகாலம் சீனாவின் மிங் படைகளால் வியட்நாம் ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டிருந்த காலத்தில் சீனப் பெருஞ்சுவரைக் கட்டுவதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டது.

கிறிஸ்தோபர் கொலம்பஸ் மாலுமியாக இருந்த சான்ரா மரியா கப்பலை விட 200 இற்கும் மேற்பட்ட மிகப் பெரிய கப்பல்களை சீனாவை ஆண்ட செங்க் ஹ என்கின்ற ஆட்சியாளர் வைதத்திருந்தார். பல சிறிய படகுகள் இணைக்கப்பட்ட இவ்வாறான 50 கப்பல்கள் 27,000 வரையான வீரர்களை ஏற்றிக்கொண்டு தென்கிழக்கு ஆசியாவான இந்திய உபகண்டம், மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டன. இது சீனாவின் ஆக்கிரமிப்பிற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும். சீனாவின் இத்தகைய நடவடிக்கை சமாதான நடவடிக்கையை நோக்காகக் கொண்டதெனில் ஏன் இவ்வளவு பெருந்தொகையான சீன இராணுவ வீரர்கள் அந்தக் கப்பல்களில் பயணித்தனர் என வாங் கேள்வியெழுப்புகிறார்.

இலங்கைத் தீவைச் சேர்ந்த ஒரு அரசன் சீனர்களால் சிறைப் பிடிக்கப்பட்டு சீனாவுக்குக கொண்டு செல்லப்பட்டார் எனவும் இவர் சீனாவின் ஆக்கிரமிப்பை உணர்ந்துக் கொள்ளத் தவறியமையே இதற்குக் காரணம் எனவும் வாங் குறிப்பிடுகிறார். இதேபோன்று சீனாவின் கடற்படையால் ஆதரவளிக்கப்பட்ட தற்போதைய இந்தோனேசியாவில் உள்நாட்டு யுத்தம் ஒன்று இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

சீனா கடந்த காலத்தில் அதிகாரம் மிக்க செல்வாக்கு மிக்க இராச்சியங்களைக் கொண்டிருந்தது என்பதற்கும் இதனை சீன ஆட்சியாளர்கள் மேலும் விரிவுபடுத்துவதற்காக ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டனர் என்பதையும் சீனாவின் திரைப் படங்கள் மற்றும் தொலைக் காட்சி நாடகங்கள் மூலம் உறுதிப்படுத்துவதாகவும் ஆனால் சீன அதிபர் சீனா வரலாற்று ரீதியாக நோக்கில் அதிகாரம் மிக்கதாகக் காணப்பட்டாலும் அமைதியை நிலைநாட்டிய நாடாகக் காணப்பட்டதாகக் குறிப்பிடுவது முரண்பாட்டைத் தோற்றுவிப்பதாக. நோற்றே டாம் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை உதவிப பேராசிரியர் விக்ரோரியா ரின்-போர்-கூய் தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஆசிய அயல்நாடுகள் சீனாவின் அதிகரித்துவரும் இராணுவப் பலம் தொடர்பாகக் கவலை கொள்வதுடன், எதிர்காலத்தில் சீனா தனது இராணுவப் பலத்தை தமக்கெதிராகப் பயன்படுத்துமோ என அச்சப் படுவதாக வாங் குறிப்பிட்டுள்ளார்.

*-நித்தியபாரதி-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா நோக்கிய ஊடகப் பயணத்தில்...

## தன்னிகரில்லா சேவையாளர்



வலம்புரி நாளிதழின் பதினைந்து ஆண்டு கால வளர்ச்சியில் உள் நாட்டு கலவரங்கள், போட்டி நிறுவனங்களின் கழுத்தறுப்பு நிகழ்வுகள் போன்ற தடைக் காரணிகள் காணப்பட்ட நிலையில் எமது நிறுவனத்துடன் இணைந்த நாள் முதல் லோகநாதன் ஐயா அவர்கள் கடமையில் நேரம் தவறாத வருகை, தன் பணியில் தன்னிகரில்லா, சேவை நிறுவனத்தின் மீது அதிகமான விசுவாசம், குறை சொல்லாத மனப்பக்குவம் போன்ற நற்பண்புகளை தன்னகத்தே கொண்டு நிறுவனத்தின் பணியாளர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கி வருகின்றார்.

பல பட்டங்களை தேடி அலையும் இக்காலத்தில் எந்தப் பட்டங்களும் பெறாத இவர் தமிழில் மிகவும் புலமை வாய்ந்தவர். இலக்கணமாகவோ அல்லது இலக்கியமாகவோ இருப்பினும் அதில் எந்த விளக்கத்தை கேட்டாலும் உடனுக்குடன் சரியான பதிலை நிதானமாகத் தெரிவிக்கையில் இவரின் ஆழ்ந்த அறிவும் ஆற்றலும் இவரது அடக்கமும் ஆடம்பரமில்லாத வாழ்க்கை முறையாலும் பிரபல்யமடையவில்லை. ஆனாலும் இவர் எமது நிறுவனத்தின் முதுபெரும் சொத்தாக விளங்கி வருகின்றார்.

பல வருடங்களாக வலம்புரி குடும்பத்தில் இணைந்து சேவையாற்றி வரும் லோகநாதன் ஐயா அவர்கள் இன்னும் பல வருடங்கள் குடும்பத்தில் நிறைவான வாழ்க்கை வாழ எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்பிகையானவள் தனது அருட்கடாட்சத்தினை தொடர்ந்தும் வழங்க வேண்டுமென வேண்டுவதுடன் இன்றைய நாளில் இவரின் சேவையின் மகத்துவத்தினை மனதார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.சி.ஜி.திருமாலழகன்
( ஆலோசகர், வலம்புரி)

## தொடரட்டும் ஊடகப்பணி



வலம்புரிக் குடும்பத்தின் மூத்த ஊடகவியலாளர் தி.லோகநாதன் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். ஊடகத்துறையில் அவரது அனுபவம் எனது வயதைவிட அதிகமானது. நான் எனது ஊடகப்பணியை தொடரும் போது அவரது அனுபவங்களை தெரிந்து கொண்டேன். அவரது சகோதரர்கள் அனைவருமே ஊடகவியலாளர்கள் என்பது இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய விடயமாகும். தி.லோகநாதன் அவர்கள் தமிழை வளர்ப்பதற்காக எம்மண்ணில் அவதரித்தவர். தமிழிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்குமான கருத்துக்களை கேட்ட உடனேயே சொல்லக்சுவடிய ஆற்றல் உடையவர்.

தனது தமிழ்மொழி ஆற்றலினால் யாழ். குடா நாட்டில் இயங்கிய பல பத்திரிகைகளையும் ஊடகவியலாளர்களையும் வளர்ச்சியடைய செய்த பெருமை லோகநாதன் அவர்களையே சாரும்.

பத்திரிகைத்துறை நவீனமயப்படுத்தப்படுவதற்கு முன்னதாக அச்சுக் கோர்ப்பு முறை இருந்த காலத்தில் அனுபவம் மிக்க ஒப்பு நோக்குநராக இருந்து தமது பணியை இவர் திறம்பட மேற்கொண்டிருந்தமை நினைவுகூரத்தக்க விடயமாகும். ஒரு பத்திரிகை வாசகர் மட்டத்தில் நல்ல இடத்தைப்பிடிக்க வேண்டுமாயின் நல்ல மொழி வளம் இருத்தல் வேண்டும். அந்த மொழி வளத்தை தாங்கியதாக எமது பத்திரிகை வெளிவருகின்றது என்றால் அதற்கு லோகநாதன் அவர்களின் பங்கு முக்கியமானதாகும்.

வலம்புரியின் இன்றைய 15 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கௌரவிக்கப்படும் திரு. லோகநாதன் அவர்கள் தொடர்ந்தும் நீண்டகாலம் தனது பணியை திறம்பட மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அவர் நீண்ட ஆயுளுடன் சிறப்பாக வாழ்வதற்கு இறைவனை வேண்டிநிற்கிறேன்.

ச.க.சதீபன்
செய்தி ஆசிரியர், வலம்புரி.



## உயர்திரு க.லோகநாதன்
## (மூத்த ஊடகவியலாளர்)

ஊடகப் பயணத்தில்...
1985-1989-முரசொலி
1990-1996-ஈழநாதம்
1999-வலம்புரி

## எண்ணம், செயலில் உயர்ந்தவர்
## திரு திருலோகநாதன் அவர்கள்



அச்சமற்ற மனமும் அறிவு உரிமையும் உண்மையின் ஆழ்ந்த அடிப்படையிலிருந்து சொற்கள் பிறக்கின்ற தன்மையும் சலியாத உழைப்பும் பகுத்தறிவெனும் தெளிந்த நீரோடை விரிந்து நோக்கும் எண்ணத்திலும் செயலிலும் திகழ்கின்ற பெரியார் உயர் திரு. க.லோகநாதன் அவர்கள் வலம்புரி ஆரம்பித்த நாள் முதல் சேவையாற்றி வலம்புரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியமை கௌரவித்து பாராட்டி வாழ்த்துவதற்கும் கடப்பாடு உடையோம். அவர் தம் துணையுடன் நீடு காலம் சுகதேகிகளாக வாழ்ந்து ஊடகத்துறைக்கு தன் அனுபவமிக்க பங்களிப்பை தர தில்லைகூத்தர் பெருமானை யாசித்து அமைகிறேன்.

சி.வெற்றிவேலாயுதம்
(நிர்வாக இயக்குநர், வலம்புரி)

## ஊடகத்தின் மகுடம்

பொன் வுண்டு முதலாகப் புலர்ந்து வந்த
பொங்கிவரும் சிந்தனைகள் போற்றி யாவும்
தன்முயற்சி தளராத உழைப்பு மற்றும்
தணியாத பேரார்வம் தகைமை யோங்க
எண்ணியதை திண்ணியதாய் நெஞ்சில் கொண்டு
எழுத் துலகில் கால்பதிக்கும் எழுச்சி யோடு
அண்டமெங்கும் அணிந்தொலிக்கும் நேரிய சீர்
வந்தேகிநீர் வழும் நிறை நம் நாட்டினிலே
தின்னத் தெவிட்டாத தேனமு தாய்
இன்பத் தமிழ்ப்பாற் கடலில் மூழ்கி
காணக் கிடைக்காத அரு மருந்தாய்
எம் கண்ணில் தென்பட்ட பெரு விருந்தே!
கண்ணில் எண்ணெய் தனை விட்டு வைத்து
நல்கருமம் நிறைவேற்றி முழு நிறைவுகண்டு
புன்னகை மலர்ந்தேகி நம் மனதில் நின்றாய்
பேருவகை அடைகிறோம் இப் பெருவிழாவில்
லோகங்கள் ஏழாக இருந்து மிங்கே
அந்தலோகத்தில் முதலாய் மிளிர்ந்து நிற்கும்
திரு லோகம் என்கின்ற
திரு லோக நாதனே நீ வாழி!
ஈழ மண் பெற்றெடுத்த திரு முத்தே!
வலம்புரி கண்டெடுத்த தனி முத்தே!
பல்லாண்டு பல்லாண்டு நீர் வாழ
பணிகின்றோம் அவன் தாள் திருவடியை

மாவை நா.கஜேந்திரன்
(பொது முகாமையாளர் வலம்புரி)

## திறமை மிகு ஒப்புநோக்குநர்
## லோகநாதன் வாழ்க!



வலம்புரியின் வளர்ச்சியும் ஆசிரியத்தலையங்கங்களின் அருமைப்பாடும் எனக்கு இனிய விருந்தாக இதமளித்து வரும் நிலையில் அதன் பதினைந்து ஆண்டு அகவையினை விழாவாகக் கொண்டாடும் செய்தி பெருமகிழ்ச்சியளிக்கிறது.

அவ்விழாவிற்கு எழில் ஊட்டுவது போல் வலம்புரியில் நீண்டகாலம் பணியாற்றிய மூத்த ஒப்பு நோக்குநரான திரு.லோகநாதன் அவர்களின் சேவையினைப் பாராட்டுவது வலம்புரி குடும்பத்தின் பண்பின் உன்னதத்தைக் காட்டுவதாக என் உள்ளத்தில் உவட்டா உவகை ஊற்றெடுக்கின்றது. ஒப்புநோக்குநருக்கு தெளிந்த மொழி அறிவு இருத்தல் வேண்டும். அத்துடன் அரசியல், இலக்கியம் முதலிய பல்வேறு துறைகள் குறித்த தகவல்களை அவர் அறிந்திருத்தல்வேண்டும். ஆசிரியர் குழுவில் உள்ளோர் செய்திகளைக் கொடுப்பதற்கு வேகமாகப் பணியாற்றும் நிலையிலே அவர்களை அறியாமலே சில வேளைகளில் சிறு தவறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதவை. அவற்றைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டோருக்குத் தெரிவித்து செப்பனிடுவது ஒப்புநோக்குநரின் கடமை. எனவே தான் ஒப்புநோக்குநர் பல்வேறு துறைகள் பற்றிய அறிவும், கூர்மையான அவதானிப்பும் தனது பணியிலே பத்திரிகையின் சிறப்பு பற்றிய அசையாத ஆர்வமும் விசுவாசமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

இத்தகைய சிறப்புக்கள் நண்பர் லோகநாதனை அனுபவம் வாய்ந்த மகத்தான ஒப்பு நோக்குநராக அணி செய்கின்றன என்பதை நான் அறிவேன். வலம்புரி குடும்பத்தில் நானும் அவருடன் பணியாற்றியிருக்கிறேன். அந்தக் குடும்ப பாசம் என்றும் என்னிடம் இருக்கும். அவருடன் வேறு பத்திரிகைகளிலும் பணிபுரிந்திருக்கிறேன். அந்த இனிய காலங்களை நினைத்து மனம் இனிக்க இதனை எழுதுகின்றேன்.

அவர் பண்பாளர், இனியவர். அவர் சுகநலத்துடன் தொடர்ந்து வலம்புரியில் பணிபுரியவும், வலம்புரி மக்கள் குரலாக மேலும் வளர்ந்து அவர்கள் நலன் காத்து வரலாற்றுப் புகழ் பெறவும் முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் நல்லூர் முருகப் பெருமான் அருள் பாலிக்க இறைஞ்சுகிறேன்

நவாலியூர் நடேசன்

## இன்னும் நிலைபெற இறைவா அருள்க!

வலம்புரி நாளிதழ் குடும்பத்தின் மூத்தவர்-என்
வழிக்கொளி அமைத்த லோகண்ணை அவர்கள்
பலம் பொருந்திய ஒரு பத்திரிகை ஊடகம் -அவரைப்
பாராட்டிக் கௌரவிப்பது நிச்சயம் இது தகும்.
துலங்கிய ஆளுமை அவர் தனில் கண்டே- செய்த
தொண்டினைக் கருதி வாழ்த்துதல் நன்றே
நிலமது எங்கும் அவர் புகழ் நிலைக்க -இன்று
நேரிடைகவியாய் வாழ்த்துறேன் வாழ்க!

ஊடகப்பணியில் உயர்ந்தவர் இவரே - அவரின்
உழைப்பினுள் உறைந்தது உண்மையின் நிழலே
பாடவும் போற்றவும் பற்பல உண்டு -இப்
பாரினில் இவர் போல் யாரெவர் சொல்லு!
சீடனாய் இவர் கீழ் செய்தொழில் புரிந்த- அந்த
சிறப்புறு நாட்கள் பெருமைதான் எனக்கே!
கூடவே என்னுடன் அந்த நினைவினை - காலம்
குறித்தது தன்னுள் அழிவிலாப் பதிவாய்.

ஒப்பு நோக்கையில் உதாரண மனிதர் -பார்வை
ஊடுருவும் பொழுதில் பிழைகளோ விலகல்
தப்பது நேர்கையில் வார்த்தையில் கண்டிப்பு - பின்னர்
தடவிடும் மனதினை கனிவுடன் மன்னிப்பு
எப்பவும் என்னுடன் இயல்புடன் மொழிநடை - நட்பு
இன்று வரையிலும் பிரிந்திடா சமநிலை
அப்பனாய் அம்மையால் அன்றுமே இன்றுமே- நல்
அறிவினைக் கூறிடும் அண்ணரே நீர் வாழ்கவே!

சீறல் சினப்பென எவரும் செப்பியதில்லை -இவரின்
சிரித்த முகத்தினுள் வஞ்சகம் இல்லை
கூறல் பொய்கள் குரோத சிந்தனை - நெஞ்சுள்
குந்தியதாக யான் அறிந்ததுமில்லை
தூறல் மழையும் துல்லிய வெயிலும் -நாளும்
தூசென மிதித்தே தம்பணி செல்வார்
தேறல் மிக்க ஆளுமை உண்டு-எங்கும்
தேடினும் கிடையா இவர்போலிங்கு

தலைமை நிலைக்கு தரங்குன்றாப் பொருத்தம் -கடமை
தவறிடா நேர்மை ஒழுங்காய் இருக்கும்
நிலைத்த தொழிலில் நீண்ட வருடம் -இன்னும்
நிலைபெற வேண்டும் இறைவா அருள்க!
மலையென பணிசுமை முன்நின்ற போதும் -உடன்
மனமது தளர்ந்திடா தொடர்ந்தவர் கண்டேன்
அலையென ஆயிரம் சோதனை நிலைத்தும் -என்
அண்ணரோஅசைந்திடா நேரிலே பார்த்தேன்.

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நல்லிணக்கத்திற்கான கல்விமான்களின் பங்களிப்பு?

சமுதாய இருப்பும் வளர்ச்சியும் அதன் பிரிக்க முடியாத கூறுகளாகவுள்ள குடும்பங்கள், நிறுவனங்கள், தனிநபர்கள் சார்ந்த அமைதி, நல்லிணக்கம், ஒற்றுமை, கூட்டுச் செயற்பாடுகள் என்பவற்றிலேயே தங்கியுள்ளன.

அமைதியும் இணக்கப்பாடும் குடும்பங்களின் அங்கத்துவர்களிடையே இயல்பாகவே வளர்க்கப்படல் வேண்டும்.. அவை பற்றிய தெளிவும் அவற்றின்மீது உள விருப்பமும், கல்வியினால் உருவாக்கப்படல் வேண்டும்.

இதேபோல் அரசு, அரசுசாராத அமைப்புகள், உயர் தொழில் அமைப்புகள், சமூக தலைவர்கள், தொழிலாளர் அமைப்புகள், தொடர்புச் சாதனவியலாளரது அமைப்புகள், சமய தலைவர்கள், தொழில் நிறுவனங்கள் போன்ற பலரும் தமது ஆற்றலுக்குரியவாறு சமூக அமைதி மற்றும் நல்லிணக்கம் பற்றிய கருத்தியலையும் நேர்முறை உணர்வுகளையும் வளர்ப்பதில் பங்குபற்ற வேண்டும். எனினும் இவர்கள் எல் லோரையும் விடவும் கல்விமான்களின் பங்களிப்பு பல நிலைகளிலும் பல மாதிரிகளிலும் தொடர்ந்து சமூகத்திற்கு கிடைத்தல் அவசியமாகின்றது.

இவர்களது பங்களிப்பு பற்றியே இங்கு கவனம் செலுத்தப்படுகிறது. பொருள் உற்பத்தி மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றங்களினால் சமூக அமைதியையும் இணக்கத்தையும் பெரியளவில் ஏற்படுத்தி விடமுடியாது. இதன்படி கல்விமான்களின் தனித்தன்மை மிக்க பங்களிப்பு பற்றிக் கலந்துரையாடுவோம்.

### சமூக அமைதியும் இணக்கமும்

சமூக வலையமைப்பு என்பது பல மாதிரியானதும், பல பண்பு நலன்கள் கொண்டதுமான சமூக பிரிவினர்களின் ஒன்றிணைப்பு ஆகும். இதில் அமைதி நிலவ வேண்டுமென்றால், சட்ட நெறியின்படி அனைவரும் செயற்படவேண்டும். இதற்கு அடிப்படையான தத்துவங்களாக பின்வருவனவற்றை இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் (1999 :XVII) அறிக்கை குறிப்பிடுகிறது.

- கூடியளவு ஜனநாயகம், போதியளவு அதிகாரப் பரவலாக்கல், பரிவர்த்தனை
- சகல துறைகளிலும் வாய்ப்புச் சமத்துவம் அத்துடன் வேறுபாடு காட்டாமை.
- வருமானம், செல்வம், சலுகைகள், அனுகூலங்கள் என்பன தொடர்பில் சமமின்மையைக் குறைத்தல்.
- அரியதான தேசிய வளங்களை திறமையுடனும் அதிபயன் கிட்டுமாறும் உபயோகித்தல்
- படாடோபத்தையும் ஆடம்பர நுகர்வையும் நீக்கல்
- நோதகவுகளுக்கு பயனுறுதியான துரித அதிக செலவற்ற பரிகாரம் தேடல்
- எமது சமூகத்தினுள் பன்முகத் தன்மைக்கு தோற்றமளிக்கும் விழுமியங்கள் மற்றும் நிறுவனங்களைக் கண்காணித்தல்.

இளைஞர்களிடையே நிலவிய விரக்தி, அமைதியின்மை மற்றும் சஞ்சலங்களை அகற்றுவதற்காக நியமிக்கப்பட்ட கால்நூற்றாண்டுக்கு முந்திய ஆணைக்குழுவின் சிபார்சுகள் இப்போதும் தேவைப்படுவன போல் உணரப்படுகின்றன. இது சமூகத்தில் நேர்முறையான மாற்றங்கள் பெரிதாக நிகழ்ந்துவிடவில்லை என்பதையும் கல்விமான்களின் பங்களிப்பு பெரிதாக வளர்ந்துவிடவில்லை என்பதையும் வெளிப்படுத்துகிறது.

### கல்வியின் வலிமை

கல்விசார் பிரச்சினையின் சமூகவியல் பற்றிய அதே அறிக்கையின் பின்வரும் கூற்று (1990:XVII) கவனிக்கத்தக்கது.

“.....வறிய வசதி வாய்ப்புக் குறைந்த பெரும்பான்மையினர், அவர்களைப் பிரதிகூல நிலையில் தள்ளி வைத்திருக்கும் தடைகளை- இவை சாதி, சமயம், இனம், வகுப்பு அல்லது பிற சமூக அல்லது பொருளாதார ஒதுக்கலால் ஆக்கப்பட்டன வேனும் கல்வியின் மூலம்தான் கடக்க முடியும்”

இதே அறிக்கை பிறிதோரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

“கற்ற இளைஞர்கள் மத்தியில் சுயநம்பிக்கையை வளர்க்கும் நோக்கில் அபிவிருத்திக் கொள்கைகள் உருவாக்கப்படல் வேண்டும். அறிவு, பயிற்சி, தேர்ச்சித்திறன், கடன், மதியுரை, ஆதார சேவை என்பன சில முன்னிலைத் தேவைகள்

இத்தகைய கல்வி மற்றும் கற்ற இளைஞர்களது பிரச்சினைகள்தான் இலங்கையின் வரலாற்றுக் காலத்தில் பாரிய அமைதியின்மையை உருவாக்கி, சமுதாயம் என்ற சேவையில் பல கிழிசல்களையும் உருவாக்கிவிட்டது.

### கல்விமான்களின் பங்களிப்பு

கல்விமான்கள் என்பது தனியே ஆசிரியர்களைக் குறிப்பிடும் வார்த்தையல்ல. போதுமான கல்வியை, தெளிவான அறிவை, அறிவு- உணர்வு சமநிலையை, உள்ளுணர்வை விருத்தி செய்துகொண்ட நேர்மையான ஆளுமை கொண்டவர்களையே இது குறிப்பிடுகிறது. கல்வி ஆளுமை பல சமயங்களில் தலைமைத்துவத்தையும் அரசியல் மேலாண்மையையும் வழங்குவதுண்டு. இந்தியாவில் சர்வபள்ளி இராதகிருஷ்ணன், அப்துல்கலாம் போன்று பல கல்விமான்கள் வரலாறு படைத்துள்ளனர்.

கல்விமான்கள் அறிவாற்றல் பலம் கொண்டவர்கள்; அறிவுலக தலைவர்கள்; மனவெழுச்சி மதிநுட்பம் நிறைந்தவர்கள்; இவர்கள் அறிவையும், தத்துவங்களையும் கைமாற்றும் மற்றும் தெளிவுபடுத்தும் வல்லமை பெற்றவர்கள்.

இவர்கள் எதிர்கால இளைஞர்களின் வாழ்க்கை மாதிரியையும் அதற்கு வழிகாட்டுகின்ற எண்ணங்களையும் உணர்வுகளையும் சிந்தனைகளையும், நடத்தைகளையும் மாற்றியமைக்கும் வல்லமை கொண்டவர்கள். சமூகத்துக்கான வரலாற்று முன்மாதிரிகளாக விளங்குபவர்கள் இவர்கள்.

பொறுப்புக்களை நேர்மையாகவும் தன்னம்பிக்கையுடனும் சுமக்கக்கூடியவர்களை உருவாக்குபவர்களே கல்விமான்கள், பிறரது தேய்வில் தாங்கள் வளர்வது அரசியல் தந்திரோபாயம். ஆனால் பிறரது வளர்ச்சியில் அகநிலை மகிழ்ச்சி பெறுவது கல்வியின் ஆதிக்கமாகும்.

அடுத்த தலைமுறையினரை அமைதியும் சமூக இணக்கப்பாடும், சுய மதிப்பீடும் கொண்டவர்களாக மாற்றுவதற்காக தாம் அதிகம் கற்பதிலும் சிந்திப்பதிலும் அவற்றைக் கற்பிப்பதிலும் வழிகாட்டுவதிலும் மேலோங்கியவர்களாக கல்விமான்கள் விளங்குபவர்கள்.





பேராசிரியர் மா.சின்னத்தம்பி

### தீயணைக்கும் படையினராக கல்விமான்கள்

ஒருநாட்டின் இரண்டாவது தேசிய இராணுவமாகிய தீயணைக்கும் படையினரது பண்பு நலன்களையும் நடத்தைகளையும் கொண்டவர்களாக சிறந்த கல்விமான்கள் விளங்குவர். தீமைகளைத் தடுக்கும் இலட்சியத்தையும் பணியையும் தமது வாழ்க்கையாக இவர்கள் கொண்டிருப்பர் அவை:

- தீமைகள் பரவாது தடுப்பதில் அதிக அக்கறை
- சமுதாய இழப்புக்களை வேகமாக குறைப்பதில் உண்மை ஈடுபாடு மற்றும் தியாகம்
- அபாயங்களையும் தீமைகளையும் தடுப்பதற்குரிய அக்கறையுடன் காத்திருந்தல்
- அபாயங்களுக்குள் நுளைவதற்கான ஆற்றலையும் மனோ வலிமையையும் நுட்பங்களையும் கற்றுக் கொண்டிருத்தல்.

உலகின் உன்னதமான அறிவுச் சுமை தாங்கி உண்மையான உலக ஆசிரியர் சோக்கிரட்டீஸ் இதேமுறையில் சிந்தித்தார் செயற்பட்டார். ஆனால், அதற்காக நஞ்சூட்டப்பட்டார். ஆனால், இன்றுவரை வரலாறு படைத்து வாழ்கிறார். அவர் உன்னதமான கல்விமான், சமுதாயச் சிற்பி.

சிறந்தகல்விமான்கள் சமுதாயத்துக்குரிய புதிய சிந்தனைகளையும் எண்ணங்களையும் கோட்பாடுகளையும் பிரசவிக்கக் கூடியவர்கள். ரூசோ, மொன்றிசோரி, மகாத்மாகாந்தி, விவேகானந்தர், ஜோன் ரூயி போன்றவர்களது சிந்தனைகள் இளைஞர்களை இப்போதும் நெறிப்படுத்துகின்றன. அமைதிக்கும் இணக்கத்திற்குமுரிய பண்பு நலன்களுடையவர்களாக மாற்றுகின்றன.

சமுதாய பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் அறிவு நிலையில் தெளிவுபடுத்துபவர்கள் இவர்கள். சமுதாய உறவுகளை முரண்பாடற்றதாக்குவதற்கும், தீர்வு நோக்கி சிந்திப்பதற்கும் தகுதியுடைய சிறந்த கல்விமான்களை உருவாக்குவது சமுதாயத்தின் கடமையாகும். இதுவே சமுதாய பாதுகாப்புமாகும். பலமான வணிகர்களும், அரசியல் தலைவர்களும், மதநிறுவனங்களும் உன்னதமான கல்விமான்களை உருவாக்கி, தீமைகளிலிருந்து விலகி நிற்கும் புதிய இளைஞர் தலைமுறையை படைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014

# DCM

வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம். ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்

இரு இடத்திலும்

# A/L-2017

## கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பொருளியல்<br>S.ஜெயகுமார் | புவியியல்<br>P.S. குமரன் | வரலாறு<br>R.R.ஆனந்தன் | Bio Tech<br>R.விக்கி |
| கணக்கீடு<br>A.P. பகீரதன் | இந்து நாகரிகம்<br>A.P.ஸ்ரீஸ், S. சுரேஸ் | ஊடகம்<br>S.ஜனார்த்தனன் | விவசாயம்<br>R.விக்கி |
| வணிகக்கல்வி<br>V. முரளி | நாட. அரங்கியலும்<br>R.ரமேஸ் | ICT<br>S.சிவா | ஆங்கிலம்<br>V.பிரபாகரன் |
| தமிழ்<br>K. சந்திரலிங்கம் | கிறிஸ்தவம்<br>T.தேவா | Sciece Tech<br>N.ஜனா | மனைப்பொருளியல்<br>S.மஜீவன் |
| அரசியல்<br>K. சுகாஷ் | அளவையியல்<br>T. நீதன் | Eng-Tech<br>T.ராம் | சித்திரம்<br>V.நிசாந்தன் |

**A/L-DAY CLASS** ஆரம்பமாகின்றன



யாழில் FRENCH கற்பதற்கு......

FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

# FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சான்றிதழ்களை FRANCE, CANADA, BELGIUM, SWISS செல்வோர் மற்றும் வெளி நாட்டில் படிக்க விரும்புவோர், வேலை செய்யவுள்ளோர் வடக்கில் எம்மிடம் மட்டுமே Easy way இல் French கற்றுக் கொள்ள முடியும்.

**ஏன் எம்மிடம் அதிகமானோர் French கற்கிறார்கள்?**

Speaking, Listening, Reading & Writing இல் தனி தனி கவனம்.... Teaching materials அனைத்துமே France இல் இருந்து பெறப்பட்டது... சர்வதேச தரத்தில் சரியான உச்சரிப்புடன் French வகுப்புக்களை வழங்குதல்.. ஒரு வகுப்பிற்கு 15 பேரை அனுமதித்து தனிப்பட்ட கவனம் செலுத்தல்.. எம்மிடம் கற்றோர் France மற்றும் Canada இல் வேலை செய்கிறார்கள்...

ஆசிரியர்: MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University , ல் French விரிவுரைகளை மேற் கொள்பவரும், 2006 ஆம் ஆண்டிலிந்து யாழில் French கற்பிக்கும் ஒரே ஆசிரியர்...)

865 க்கும் மேற்பட்டோர் French கற்று சென்றுள்ளனர்

கடந்த சர்வதேச DELF French பரீட்சையில் வட மாகாணத்தில் எமது மாணவர்கள் மட்டுமே அதிக மானோர் சித்தியடைந்தனர்.....

கவனத்திற்கு : ஆரியகுளம் மற்றும் நெல்லியடியில் மட்டுமே எமது ஆசிரியரின் வகுப்புக்கள் (யாழில் வேறேங்கும் வகுப்பு இல்லை)

No.140 Palaly Road, Jaffna.
(ஆரியகுளம்)
புதிய பிரிவு ஆரம்பம் – 03.01.2015
சனி காலை – 8.00


Register Now Tel : 0779789456

No.181, Main Street, நெல்லியடி, (N.T.B) வங்கிக்கு அருகாமை.
புதிய பிரிவு ஆரம்பம் – 05.01.2014
மாலை – 3.45
021 320 2973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014


# O/L மற்றும் A/L இன் பின்னர்...



## யாழ் நகரில்
## Edexcel HNDs in...

- Quantity Surveying
- Civil Engineering
- Biomedical Science
- Business Management
- Computing / Software Engineering

**Leading to BSc (Hons) BA (Hons)/ B Eng (Hons) / LLB (Hons) from more than 105 Universities in U.K, USA, Australia & Canada etc....**

International Collabortions
edexcel
advancing learning, changing lives
UNIVERSITY OF WOLVERHAMPTON
LONDON SOUTH BANK UNIVERSITY

Awards & Recognitions
BCAS awarded "Performance Excellence" for the years 2010 & 2011 by Edexcel - UK
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD
ISO 9001:2008 CERTIFIED

உயர்கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற் தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ். வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற்கான வாய்ப்பு

மேலுள்ள துறைகளில் HND ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 இற்கு மேற்பட்ட பிரித்தானிய, அமெரிக்க, அவுஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பின் இறுதி யாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு.

கடந்த 15 வருடங்களில் HND உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப் படிப்புக்களை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.

# சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

**16, Point Pedro Road, Jaffna.**
**021 221 9910/ 077 710 2131**

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES


15 YEARS of Trust & Excellence in Higher Education
ISO 9001:2008 CERTIFIED
BCAS CAMPUS THE NATIONS No.1 HIGHER EDUCATION PROVIDER (PRIVATE SECTOR) IN SRI LANKA SURVEYED BY LMD



**Colombo/ Dehiwela/ Kandy/ Batticaloa/ Kurunegala/ Jaffna/ Qatar**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும் பெற்றோரின் ஏம்பலிப்பும்



Dr.த.கலாமணி

இன்று இலங்கையில் நாடளாவிய ரீதியில் அனைவரதும் கவனத்தைப் பெற்றுள்ள பரீட்சை 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை ஆகும். இப்பரீட்சைக்கு முன்னரான பெற்றோரின் அங்கலாய்ப்புகளும்பரீட்சைப்பெறுபேறுகளின் பின்னரான அவர்களின் ஏம்பலிப்புகளும் இன்று வழமையாகிப்போய்விட்டன.

இச்சூழலில், ஐந்தாம் தரப்புலமைப்பரிசில் பரீட்சையின் உண்மையான நோக்கத்தை எடுத்துரைத்து, பெற்றோர்களின் அங்கலாப்புகளும் ஏம்பலிப்புகளும்நியாயமானவைதானா என ஆராய்வதே இக்கட்டுரையில் முதன்மையான நோக்கமாகும்.

எமது சமூகம் போட்டியுள்ள ஒரு சமூகமாக மாறிவருகின்றது என்பதே இன்றைய சமூக யதார்த்தமாகும். மனித சமுதாயம் பல போட்டிகளையும் அச்சுறுத்தல்களையும் சோதனைகளையும் சந்தித்தே வந்துள்ளது. ஆனாலும், இன்று இத்துணை வளர்ச்சியுற்ற, நாகரிக சமுதாயத்திலும்கூட, சாதாரணமான விடயங்களிலும் போட்டி நிலை நிலவி வருகின்றமைதான்



ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

ஒரு ஜனநாயக சமூகத்தில் கல்வி என்பது அனைவருக்கும் உரித்தான ஒன்று. கல்வி கற்பதற்குத் தடை விதித்தல் மனித அடிப்படையுரிமை மீறலாகும். கல்வியில் சமவாய்ப்பும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் வழங்கப்பட வேண்டும் என்பது கல்வியின் சமகால இலக்கணமாகும். இந்நிலையில் கல்வியை வளப்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றிச் சிந்தித்து, வேண்டிய நடைமுறைகளை வகுப்பதே அவசியமானதாகும்.

இன்று வலம்புரி நாளிதழுக்குப் பிறந்தநாள். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற தமிழ்ப் பத்திரிகைகளுள் " வலம்புரி" தனித்துவமானது. அன்றாடம் நிகழ்கின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் எளிய நடையிலே எல்லோரும் அறிந்து கொள்ளக் கூடிய வகையிலே தெட்டத் தெளிவாக எடுத்தியம்புவதில் வலம்புரிக்கு நிகர்வலம்புரியே! இஃது எவராலுமே மறுக்க முடியாத, மறை க்கமுடியாத உண்மை. நாட்டு நடப்புகள் முதல் அரசியல், வெளிநாடு, ஆன் மீகம் என்று இன்னோரன்ன பலவும் உள்ளடக்கியதாக வெளிவந்து மக்களின்மன திலே நீங்கா இடத்தைப் பெற்றுள்ள பத்திரிகை என்று கூறின் மிகையாகாது. தினசரி காலையில் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் பார்த்தால்தான் நிம்மதி. சுவையாகவும் காத்திரமாகவும் கனதியாக வும் கருத்துச் செறிவுடனே வருகின்ற இது வாசகர்களின் உள்ளங்களில் நீங்கா இடத்தைப் பெற்றுள்ளதெனில் அது சாலப்பொருந்தும்.

இன்றைய பிறந்த நன்னாளில் வலம்புரியானது நலம்பல பெற்று மென்மேலும் சிறப்புடன் திகழ்ந்து பத்திரிகா தர்மத்துடன் அறப் பணியாற்ற வேண்டுமென்று அருளாசி நல்கி நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம். எல்லாம் வல்ல நல்லைக்கந்தன் அருளால் வலம்புரி நல்ல பலம் பெற்றுத் திகழ உளமாரப் பிரார்த்தித்து ஆசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
**நல்லை ஆதீன குரு முதல்வர், இரண்டாவது குரு மகா சந்நிதானம்.**

## உன்னத பணியை உலகறியட்டும்



எம்மண்ணில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக தினமும் வெளிவரும் வலம் புரி பத்திரிகையின் ஆண்டு விழாக்குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். இறைவனின் அபயக்கரங்களில் உள்ள வலம்புரிச்சங்கின் ஆற்றல் அறியாதவர்களில்லை. வலம்புரி என்ற நாமத்து டன் ஊடகத்துறையில் பதினைந்து ஆண்டுகளில் தன் தனித்துவ ஆற்றலை வெளிப்படுத்திய இப்பத்திரிகையை இன்று சகலரும் அறிவர். ஆன்மீகம் முதல் அரசியல், கலவி சமூக உறவாடல் அனைத்தையும் உள்ளடக்கி வெளிவ ரும் வலம்புரி, மக்களின் நம்பிக்கையைப்பெற்றுத் திகழ் கிறது. பாடசாலை முதல் பாராளுமன்ற அவைவரை இப் பத்திரிகைச் செய்திகள் பேசப்படும் அளவுக்கு கருத்தியல் கனமுடைய பத்திகையாக விளங்கும் வலம்புரி மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

இப்பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு.எஸ். வெற்றிவேலாயுதம் அவர்களின் அடக்கமான ஆளுமையும், ஆசிரியர் திரு.ந.விஜயசுந்தரம் அவர்க ளின் திறமையும் திரு. ஜி. திருமாலழகனின் அருமை யான ஆலோசனையிலும் மற்றும் வலம்புரி நிர்வாகக்குழு வினரின் ஒன்றுபட்ட முயற்சியும் வலம்புரிச் செய்தியாளர் களின் கடமை நேர்த்தியும் வலம்புரியை நன்முறையில் வாழ வழிவகுத்துள்ளது எனலாம். இன்று எம் சமூகத்தை நல்ல பாதையால் அழைத்துச்செல்லும் பாரிய பொறுப்பில் ஊடகத்துறையின் உண்மையான பங்களிப்பு அத்தியா வசியமாகும். பலவழிகளிலும் பாதிப்புக்களைச் சந்தித்த எம்சமூகத்தை நேர்த்தியான வழியில் வழிகாட்ட ஊடகத்துறைசார்ந்த அனைவரும் பெரும்பணியாற்ற வேண்டும். வலம்புரி தன் உன்னத பணியை உலகுள்ள வரை நிலைநாட்ட வேண்டும் என வாழ்த்தி, துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை,**
**சிவபூமி அறக்கட்டளை.**

## தர்மத்தின் குரல்



20.12.2014 இல் அகவை 16 இல் கால் பதிக்கும் தர்மத்தின் குரலாகத்திகழுகின்ற வலம்புரி நாளிதழிற்கு வாழ்த்துக்கள். தமிழினத்திற்குப் பலம் சேர்க்கின்ற, ஆன்மீக நெறிக்கு ஆதரவாக நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் வலம்புரி வாழி! சின்மயா மிஷனின் ஆன்மீகப்பணிகளிற்கு ஊக்கம் கொடுத்து ஊக்குவிக்கின்ற உண்மையான ஊழியன் வலம்புரி பல்லாண்டுகள் பலருக்கும் பற்பல பணிகள் செய்து மேலும் வளர்ந்தோங்க எல்லாம் வல்ல இறைவனையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

**இறைபணியில்,**
**ஜாக்ரத சைதன்யா, வதிவிட ஆச்சாரியார்,**
**சின்மயா மிஷன்.**

## மக்கள் பணியில் என்றும் சங்கென ஒலிக்கும் வலம்புரி.



நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் நாளிதழாகிய வலம்புரி பத்திரிகை தனது பதினைந்து வருட சேவையைப் பூர்த்தி செய்து பதினாறாவது வயதில் காலடி வைக்கும் இவ்வேளையில் வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம். யாழ்ப்பாணத்திலே வெளிவருகின்ற பத்திரிகைகளுள் தனக்கென்றொரு இறை தனித்துவத்தைக் கொண்டு வலம்புரியின் சேவை இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளைச் செய்திகளாகத் தெரியப்படுத்தியும் சமய நிறுவனங்களில் விழாக்கள் நடந்தால் அவை சார்ந்த தகவல்களை அறியத்தந்தும் மேலும் பல பயன் தரு ஆக்கங்களையும் உள்ளடக்கி வாசகர்களின் கைகளில் பாலகனாக தவழ்ந்தவன் இன்று இளைஞனாக அழகுடன் வர்ணமயமாக பரிணமித்துள்ளான்.

இனிவரும் காலங்களில் மேலும் சிறப்புற்று மக்கள் பணியில் முன்னின்று ஒலிக்கும் சங்கென முழங்கி வாழ்த்தி குருவருளையும் திருவருளையும் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீவேத வித்தியாசாகரர் சுவாமிகள்,**
**எட்டாவது குரு பீடாதிபதி, வேதாந்த மடம்,**
**யாழ்ப்பாணம்.**


## நீதியோடும் உண்மையோடும் நடுவுநிலை தவறாத வலம்புரி



நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. (மத் 5:10) ஊடகத்துறையின் வளர்ச்சியிலே பத்திரிகையும் ஓர் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அவற்றிலும் குறிப்பாக கடந்த 15 ஆண்டுகளாக யாழ். மண்ணில் இருந்து வெளிவருகின்ற வலம்புரி பத்திரிகையின் முக்கியத் துவத்தையும் அது தமிழ் மக்கள்மட்டுமல்லாதுஏனையமொழிபேசும் மக்கள் மத்தியில் அதற்கே உரிய சிறப்பையும் நாம் அறிவோம். கடந்த கால யுத்த வேளையிலும் இன்றும் கூட பல சவால்களை, கஷ்டங் களை எதிர் கொண்டு சேவையாற்றி இன்று 16 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் வலம்புரி பத்திரிகையை நான் வாழ்த்துகின்றேன். நீதியோடும் உண்மையோடும் நடுநிலை தவறாமல் உள்ளதை உள்ள படியே கூறும் பத்திரிகைகளில் ஒன்றாக வலம்புரியும் விளங் குவது எல்லோராலும் நம்பிக்கை. தொடர்ந்து இத்தகைய விழுமியங் களை தன்னகத்தே கொண்டு வலம்புரி மென்மேலும் சேவை புரிய வலம்புரி பத்திரிகை நிர்வாகத்தினரையும் பணிபுரிவோரையும் வாழ்த்தி ஆசிகூறுகின்றேன்.

**மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம்,**
**யாழ்.ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## புனித சேவை தொடரட்டும்




வலம்புரி நாளிதழ் தனது பதினைந்து வருட சேவையை மக்களுக்கு திறம்பட ஆற்றி இன்று பதினாறாவது வயதில் கால்பதியப்போகிறார். வலம்புரியின் சேவை மிக அளப்பெரியது. கடந்த கஷ்டமான கால சூழ்நிலை யிலும் கூட மக்களுக்கு ஆற்றிய சேவை பாராட்டத்தக்கது. இன்றைய நாகரிக கால கட்டத்தில் பல தொழில்நுட்ப வசதிகளுடன் உடனுக்குடன் செய்திகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொலை நகல் (இன்ரநெற்) மூலம் அனுப்பப்பட்டு மக்களுக்கு கிடைப்பது ஒரு சிறந்த சேவை யாகும்.

மேலும் வலம்புரி நாளிதழ் அரசியல், ஆன்மீகம், வைத்தியம் போன்ற இன்னோரன்ன பிரசுரங்களும் தவறாமலும் வருவது போற்றத்தக்கது. தொடர்ந்து இப்புனித சேவையை விரிவுபடுத்தி தொழில்நுட்ப வசதிகளுடன் மக்களுக்கு சேவை செய்யவும் இச்சேவைகளுக்கு உந்து சக்தியாகவும் உறுதுணையாகவும் நேர்மையாகவும் உழைக்கும் முகாமையாளர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் நலமுடனும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்தி எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கிரியா கலாப முக்தாமணி சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள்.**
**பிரதம குரு, நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்,**
**ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்,**

## விடியல்களுக்காய் விளக்கேற்றி விசபங்களைத் தீர்க்கும் வலம்புரி



சுடச்சுட ஒளிரும் சங்கைப்போன்று சமுதாயத் தேடல்களின் விடியல்களுக்காய் விளக்கேற்றி விடயங்களைத் தந்துகொண் டிருக்கும் வலம்புரியே! உந்தன் வரவு சுற்றிச் சுழன்று பதினா றாவது அகவையில் கால் பதிப்பது கண்டு கணக் கற்ற மகிழ்ச்சியும் எண்ணற்ற வாழ்த்துக் களும் தெரிவிப்பதில் இணைய ற்ற இன்பத்தை வெளிப்படுத்துகின்றேன்.

அத்தோடு வலம்புரியின் வாழ்நாள் இன்னும் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ் பேசும் உள்ளங்கள் அனைவருக்கும் உலா வந்து பலன் பல தரவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இன்னும் புதிய சகாப்தத்தில் காலடி வைத்திருக்கும் தமிழ் பேசும் மக்களின் கல்வி, கலை, அரசியல், ஆன்மீகம் ஏனைய துறைகளிலும் அறிவு ஞானமும் தன்னிறைவும் பெற்று பெருவாழ்வு பெற்று பேருவ கையுடன் வாழட்டும் என்று என் சார்பாகவும் எம் மக்கள் சார்பாகவும் வாழ்த்துகின்றேன்.

***இன்றைய பிறந்த நாளுக்காய் சிறந்து விளங்கும் வலம்புரி ஆசிரியர், நிர்வாகக் குழு, அனைவருக்கும் பாராட்டுக்கள்.***

**வலம்புரியே நிந்தன் வலம்வரல்**
**இந்நூற்றாண்டின் முக்கிய தேவை**
**தொடரட்டும் நின் சேவை**
**எல்லாப்புகழும் இறைவனுக்கே**
**நன்றி**

**அல்ஹாஜ் ஏ.எம்.ஏ.அஸீஸ் ,மௌலவி (காஸிமி)**
**யாழ், கிளி.மாவட்ட,உலமாசபைத் தலைவர்.**

## பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க!



ஒரு நாட்டின் இறைமைக்கும் பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும் சமூகத்தால் மேற்கொண்டு வரும் விழுமியங்கள் எவ்வளவு அவசியமோ அந்தளவிற்கு ஒரு பத்திரிகையின் செயற்பாடும் அவசியமாகும். இந்நிலையைப் பேணிக்காப்பதில் வலம்புரி பத்திரிகை சிறந்து விளங்குகின்றது என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு பத்திரிகை நடுவு நிலைமை தவறாமல் பத்திரிகா தர்மத்தைப் பேணி வருவதன்மூலம் தான் அப் பத்திரிகை வளர்ச்சியடைய முடியும். இவ்வகையில் வலம்புரி நாளிதழ் தமிழ் மண்ணில் 15 ஆவது அகவையினைப் பூர்த்தி செய்து 16 ஆவது அகவையில் கால்பதித்து தர்மத்தின் குரலாக வெளிவந்து கொண்டிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். அதற்கு உறுதுணையாக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் வலம்புரி காரியாலயத்தைச் சார்ந்த அனைவரும் மென்மேலும் உறுதியுடன் செயலாற்றவும் அத்தகைய பணியின் மூலம் வலம்புரி நாளிதழ் மென்மெலும் பிரகாசிக்க சந்நிதி வேற் பெருமானின் அருளை வேண்டி நிற்கின்றோம்

சுபம் சாந்தி!

**குரு பணியில் செ.மோகனதாஸ் சுவாமி**
**சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி,**
**தொண்டைமானாறு.**

## கீதோபதேசமாக அமையும் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம்



எமது சமய, கலை, கலாசார விழுமியங்கள் எம்மைவிட்டு நலிவுற்று வரும் வேளையில் வலம்புரி பத்திரிகையின் படைப்பு வரவேற்கப்பட வேண்டியதாகும். நற்பண்புகளாலும் நல்லறிவாலும் மன உடல் நல வலிமையா லும் நிறையப் பெற்றவர்களால் தான் வியத்தகு விடயங்களை ஆற்ற முடி யும். வலம்புரி போன்ற பத்திரிகைகளைத்தான் இன்று சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறது. வலம்புரியின் மகத்தான படைப்புக ளால் சைவத் தமிழ் சமூகம் தலை நிமிர்ந்து நின்று பெருமைய டைகிறது.இன்று எமது கலை, கலாசாரங்களை பின்பற்றுவதில் வெளிநாட்டவர் அதிகமாக பெரு விருப்பம்காட்டிவருகின்றனர்.ஆனால்வெளிநாட்வர்கள்கூட வேண்டாம் என்று விட்ட கலாசா ரங்களை நாம் பற்றிப் பிடித்து வருவது மிக வேதனையான விடயமாகும். இச் சந்தர்ப்பத்தில் வலம்புரியின் எழுத்துக்கள் ஒவ்வொரு மக்களையும் விழிப்படையச் செய்வதாக அமைகின்றது. வலம்புரி பத்திரிகைக்கு மகுடம் சூட்டிய தாக அமைவது அதன் ஆசிரிய த்லையாங்கம் ஆகும். கீதோபதே சமாக அமைவுறும் வகையில் தமிழ் மக்களின் தர்ம யுத்தத்திற்கு இறை அணையாக அது அமைவதாக இருக்கின்றது. 15 ஆண்டுகள் தர்மத்தின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் வலம்புரியின் சேவைகள் மகத்தானது. இவ்வேளையில் ஆண்டு விழா கொண்டாடுவது அனைவருக்கும் மிக்க மகிழ்வைத் தருகின்றது.

சிறந்த ஊடகப் பணிகளை ஆற்றும் வலம்புரி பிரதம ஆசிரியர் மற்றும் வலம்புரி சமூகத்தினருக்கும் விழா சிறப்புறவும் இறையருளும் குருவருளும் என்றென்றும் துணைநிற்க ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் சிவ சிதம்பரேஸ்வரப் பெருமானின் திருவருளை வேண்டி ஆசி கூறி நிறைவு செய்கின்றேன். சுபம்

**சிவஸ்ரீ.சபா. வாசுதேவக்குருக்கள்**
**தலைவர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,**
**(சிவன் தேவஸ்தானம், சித்தன்கேணி)**

## பிறர் மனங்களை நோகடிக்காமல் செய்தியைக் கூறுவதில் சிறந்தவன்



தனது 16 ஆவது அகவையில் பிரவேசித்திருக்கும் வலம்புரி மேலும் சிறப்புற முதற்கண் ஆசீர்வதிக்கின்றேன். செய்திகளை மட்டுமல்லாமல் பொதுவாக பலதுறைகளைப் பற்றிய விபரங்களையும் பிரசுரிப்பது வலம்புரியின் சிறப்பம்சமாகும். பல சமயங்களில் அதில் வரும் ஆசிரிய தலையங் கங்கள் ஒரு தரத்திற்கு இரண்டுமுறை வாசிக்கத் தூண்டு பவையாக அமைகின் றது. அது ஆசிரியருக்கு உரிய தனி யானபாணி என்றால் அது மிகையாகாது. ஆல யங்களில் நடைபெறும் விசே ஷங்களை முன்னுரிமையோடு பிரசுரிப்பதும் பாராட்டிற்குரியது. எவரை யும் மனம் நோக வைக்காமல் செய்திகளை மட்டும் எடுத் துக் கூறுவதில் வலம்புரி சிறப்பாக செயற்படுவது நாம் அறிந்ததே. தன் சேவையை மென்மேலும் விஸ்தரிக்க வலம்புரிக்கு இறையருள் கிடைப்பதாகுக.

**சிவாகமஞான பாஸ்கரன்,**
**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்,**
**காயத்திரி பீடம் , தர்மசாஸ்தா குருகுலம்.**


## கடமை தவறா கண்ணியம் தொடரட்டும்



உலகம் இன்று ஜனநாயகப் பண்பால் பலம் பெற்றுத் திகழ்கிறது.
ஜனநாயகத்தை தாங்கும் நான்கு தூண்களுள் ஒன்றாய்,
ஊடகத்தையும் உலக அறிஞர்கள் குறிக்கின்றனர்.
அதிலிருந்து இன்றைய உலகில்,
ஊடகத்தின் முக்கியத்துவத்தை நாம் தெரிந்து கொள்கிறோம்.
நடந்து முடிந்த போரால்,
யாழ்ப்பாணம், உலகிலிருந்து பல காலம் தனிமைப்பட்டுக் கிடந்தது.
மக்களை வழிநடத்தும் ஜனநாயகக் கருவிகள் ஏதும் இன்றி கிடந்த அந் நிலையில்,
ஜனநாயகத்தின் உயிர்த்துடிப்பு அடங்கிவிடா வண்ணம் காத்துக்கிடந்தவை ஊடகங்களே!
நேர்மைமிக்க நடுநிலைமையான ஓர் ஊடகத்தின் தேவை,
யாழ்ப்பாணத்திற்கு இன்றியமையாததாய்த் தேவைப்பட்ட நிலையில்,
பலரும் ஆறுதற்படும் வகையில் வலம்புரி வெளிவரத் தொடங்கியது.
போற்றுதல், தூற்றுதல் இரண்டினையும் தாண்டி பதினாறாம் ஆண்டில் கால்பதித்து,
வலம்புரி வெற்றிநடைபோடுவது மகிழ்ச்சி தரும் செய்தி.
தனது கடமையை ஆரவாரமின்றி செய்துவரும் வலம்புரியை
கற்றோர் அனைவரும் வாழ்த்தி நிற்கின்றனர்.
பக்கச்சார்பின்றியும் சுய விருப்பு வெறுப்பைத் தாண்டியும் இயங்கி வரும்,
வலம்புரியின் இன்றைய போக்கு என்றும் தொடரப் பிரார்த்திக்கிறேன்.
தொடர்ந்த வலம்புரியின் வெற்றிக்கு கம்பன் கழகம் வாழ்த்துரைத்து நிற்கிறது.
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்.**

## தர்ம மகுடம் தாங்கிப் பணியாற்ற வாழ்த்துகின்றோம்



15 ஆண்டுகளாக பத்திரிகைப் பணியை ஒரு தர்மப் பணியாகவே செய்து வரும் வலம்புரி பதினாறாவது ஆண்டில் காலடி வைக்கின்றது.

பகவான் ஸ்ரீராமர் பதினான்கு ஆண்டு காலம் வனவாசம் செய்து தர்மத்தை காத்த பின் பதினைந்தாவது ஆண்டில் பட்டாபிஷேகம் செய்து கொண்டார்.

நடுவு நிலை தவறாமையை பேணி வரும் வலம்புரி மிகவும் குழப்பமான போர் மேகங்கள் சூழ்ந்த அதர்மம் அதிகரித்த கால கட்டம் கொண்ட பல்லாண்டுகளில் ஒரு கலங்கரை விளக்காக பணியாற்றியுள்ளது. மகத்துவம் பொருந்திய மார்கழி திங்களில் மலர்ந்த வலம்புரியின் ஓசை இணையம் வழியாகவும் உலகெங்கும் பரவி வருவது மகிழ்வும் நம்பிக்கையும் தருகின்றது. வலம்புரி நாயகனாக கற்பக கணபதியாக விளங்கும் விநாயகருக்கு உகந்த விநாயக ஷஷ்டி என்ற பெருங்கதை நோன்புக் காலத்தில் வலம்புரி புதிய ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது. தர்மோ ரக்ஷதி ரக்ஷித என்ற வேத மொழியினாலே தர்மத்தை காத்தால் அது நம்மை காக்கும் என்று வலம்புரியை வாழ்த்துவதில் பெரு மகிழ்வுறுகின்றோம்.

நம் வழிபடு தெய்வமான வள்ளி மணவாளன் செந்தில்மேய செவ்வேட் பெருமான் திருவடிகளை சிந்தித்து வலம்புரி இன்னும் பல நூறாண்டு சேவை புரிய ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

**கு. தியாகராஜா குருக்கள். (நீர்வைமணி)**

வாசக
அறிவ
வலம்
செய்து பெ
கும் இத்த
இதயங்கள
அனை
சிறுவர் அ
பார்த்ததில்
குறிப்பிடத்
பயனுள்ள
காலம் தல
விழா வாழ்

உ
வாசக
நாளிதழா
ஆண்டுக
கின்றேன்
செய்யும் உ
யினை எ
வகிக்கின்ற
புரி நாளே
ளையும் த
இதனாலே
அன்றாட
யானது சு
நன்னெறி
நேர்மைய
இப்பணிய
சிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...றவுவிழா சிறப்புமலர்-20.12.2014

## ...ளின் எதிர்பார்ப்பை நன்கறிந்து ...பசியைப் பூர்த்தி செய்யும் வலம்புரி



...த்திரிகை தனது 15 ஆவது அகவையைப் பூர்த்தி ...மையுடன் 16 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக் ...ளத்தில் இந்திய துணைத்தூதரகத் தின் சார்பில் ...த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
...து வாசகர்களின் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்யும் வகையில் ...கம், விளையாட்டுச் செய்திகள், மருத்துவக் குறிப்புகள், ஃபேஸ்புக் ...டித்தவை, ஆன்மீகம் மற்றும் இன்று ஒரு தகவல் பகுதிகள் ...கவை. மேலும் இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் ஓர் ...வேற்கத்தக்க பகுதியாகும். வலம்புரிப் பத்திரிகை, மேலும் பல ...சேவையை மக்களுக்கு வழங்க இறைவனை வேண்டி ஆண்டு ...ச்செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நல்வாழ்த்துக்கள்!!

...தட்சணாமூர்த்தி, இந்திய பிரதித் துணைத்தூதுவர்.

## ...டகங்களின் ஒளியாக திகழும் வலம்புரி



...ளின் மத்தியில் தினமும் வலம்வரும் வலம்புரி ... யாழ்.மாவட்டத்தில் வெளியிடத் தொடங்கி இன்று 15 ...றைவு செய்துகொள்வதனையிட்டு மகிழ்ச்சி அடை ...மது சமூகத்திற்கு சர்வதேசத்தையே அறிமுகம் ...சக்தியாக ஊடகத்துறை கொண்டுள்ளதுடன் சமகால நிலைமை ...துக் காட்டுவதில் பத்திரிகைகளும், ஊடகங்களும் முன்னிலை ...யாழ்.மாவட்டத்தில் முதன்மை ஊடகங்களில் ஒளி யாகத்திகழும் வலம் ...னது மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு அமைவாக சகல செய்திக ...ல்களையும் சுடச்சுட வழங்கி வருகின்றமை போற்றுதற்குரியதாகும். ... மக்கள் மத்தியில் நிலையான இடம்பிடித் துள்ளது. மக்களின் ...ழ்வுடன் ஒன்றிணைந்து தினசரி வெளிவரும் வலம்புரி பத்திரிகை ...த்தின் தேவை அறிந்து இன்றுபோல் என்றும் நடுவுநிலை தவறாது ...ாத்து பத்திரிகை தர்மத்தின் வழியில் உண்மையானதும், ...துமான செய்திகளை வழங்கி சமுதாயத்தை வழிப்படுத்தவும் ... மென்மேலும் வளர்ச்சி கண்டு சிறந்து வளர எனது நல்லா ...ழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சு...ரம் அருமைநாயகம், அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.



## ...ம் நற்றோரும் போற்றும் நாளிதழ் வலம்புரி



...நாளிதழ் தனது 15 ஆவது அகவை யைப் பூர்த்தி ...வது அகவையில் தடம் பதிப்பதையிட்டு உவகைய ... வலம்புரி நாளிதழ் தனது தன்னிகரில்லா ...தப் பேணி 15 ஆண்டுகள் மகத்தான சாதனை ... ஒட்டிய சிறப்பு மலருக்கான ஆசிச் செய்தியினை ...பெருமகிழ் வடைகின்றேன்.
...தமான பத்திரிகாசிரியரின் தலையங்கங்கள், கருத்தாழ மிக்க கட்டு ...று ஒரு தகவல், ஃபேஸ்புக்கில் பார்த்தலில் பிடித்தவை... விளை ...திகள், சினிமா செய்திகள், ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் சிரிக்க ...ும் வைக்கும் வியாசர் கேள்வி பதில் பகுதி போன்ற பல்சுவை அம்சங் ...ளின் மனங்களை எல்லாம் உள்ளங்கவர் கள்வன் போல தன் ...ழத்து கற்றோரும், நற்றோரும் போற்றும் ஒரு முதல்தர நாளிதழாக ...ரை தசாப்த காலமாக எம்மண்ணில் வீறு நடைபோட்டு வருகின்றது. ...6 ஆவது அகவையில் கால் பதிக்கும் வலம்புரி நாளிதழ் *நன்றே ...வு இகழ்ந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழுகியவிடல்* ...ரபட்சமின்றி, பக்கச்சார்பின்றி, ஒளிவு, மறைவு இன்றி உண்மை ... கொடுத்து, எமது இந்துக் குருமார்களின் செய்திகளுக்கு முன்னு ...டுவுநிலைமையுடன் ஓர் துணிச்சலாக செயற்படுவதும், ஆளுமை ...த்திறமையும் கொண்டு செயற்படுவதும் போற்றுதற்குரியது. தனது ...கவையில் மேலும் பற்பல புதிய சேவைகளைப் புரிந்து விரிவுபடுத் ...து அகவையில் என்றும் 16 வயது மார்கண்டேயராகத் திகழவும் ... முதல்வர் எம்.டி.எஸ்.வெற் றிவேலாயுதம், திரு.என்.விஜயசுந்தரம் ... ஆற்றுப்படுத்த லில் மேலும் புதிய பகுதிகளுடன் வெளிவரவும் ... ஆசிரியர் குழாம், அலுவலர்கள், மற்றைய பணியாளர்கள், ...ாசகர்கள் அனைவரும் திறம்படச் செயற்பட எல்லாம் வல்ல வல்வை ... அம்பிகையின் கிருபையால் ஆசீர்வதிக்கின்றேன்.

வாழ்க வளமுடன். சுபம்– மங்களம்,

...டாபிஷேக ஞானகுருபானு,
...சாமாஸ்கந்த தண்ட பாணிக தேசிகர் ஜே.பி,
...குரு பீடாதிபதி, பிரதமகுரு,
ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை,

## சர்வ்தேச பத்திரிகைகளுக்கு இணையான ஆசிரியர் தலையங்கம்



வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி வெளிவரும் சிறப்பு இதழுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இப்பத்திரிகை உயர்வான பத்திரிகா தர்மத்தில் நின்று வினைத்திறனான, விளைதிறனான முகாமைத்துவ செயற்பாடுகளால் நிலைபேண் நிலைமை அடைந்துள்ளது எனலாம்.

இன்று பிராந்திய ஊடகச் சந்தையில் தேசிய மற்றும் பிராந்திய அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் கடும் போட்டியை வலம்புரி கொண்ட நிலையிலும் வாசகன் மத்தியில் இது தனக்கென சிறந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்பத்திரிகை காத்திரமான நம்பகத்தன்மை மிக்க ஆக்க பூர்வமான தேசிய மற்றும் பிராந்திய அரசியல் விடயங்கள், சர்வதேச விவகாரங்கள், நல்லாட்சிப் பரப்புரைகள், பிராந்திய அபிவிருத்திச் செயற்பாடுகள், சமூக- சமுதாய நலன்சார் விடயங்கள், இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு நிகழ்வுகள் தொடர்பான செய்திகள் போன்றவற்றையும் மற்றும் வெவ்வேறு பிரிவினைக்கு ஏற்ற வாசிப்பு விடயங்களையும் தாங்கி சிறப்பாக வெளிவருகின்றது.

நல்ல மொழி நடையும் வாசிப்பு ஏற்ற எழுத்துப்பருமனும் அதன் சிறப்புக்கு மேலும் வலுச்சேர்க்கின்றன. ஆசிரிய தலையங்கம் பிரபல சர்வதேச பத்திரிகைகளுக்கு இணையாக விளங்குவது டன் தமிழ், சமய பண்பாட்டுப் பின்புலத்தில் எழுதப்படுவது குறிப்பிடத்தக்கது.

இத்தலை யங்கம் சிந்தனையைத் தூண்டுவதாகவும் கருத்தேற்றம் மிக்கதாகவும் தேடி வாசிக்கப்படுவதாகவும் பொது இடங்களில் பேசு பொருளாக வும் இருப்பது வலம்புரிக்குத் தனிச்சிறப்பாகும்.

ஒன்றரை தசாப்த காலம் பொறுப்புடனும் வகை கூறலுடனும் செயற்பட்டுவரும் பெருமை மிக்க இப்பத்திரிகை மேலும் வளர வேண்டும் என்றும் தமிழ் மக்களின் விடிவிற்கு வழி காட்டியாக இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை
யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்,

## நாளிதழாக நாட்கள் கழித்தல் அல்லது களிப்புறல்



வாசிப்புத் துறையிலும் தகவல் பரிமாற்றத்திலும் நாளிதழ்கள் வகிக்கும் பங்கு முக்கியமானது. அச்சூடகத்துறையில் இருக் கும் அவசரத்தன்மையைக் கடந்து, நின்று நிதானித்து ஆக் கங்களையும் செய்திகளையும் பிரசுரிப்பதும் அதில் நடுவு நிலைமை தவறாது கருத்துக்களை பரவல் செய்வதும் நாளிதழ் வெளியீட்டில் அடிப்படையாகக் கவனிக்க வேண்டியதொன்றாகவும் அதேநேரத்தில் பத்திரி கையில் வாசகன் விரும்பும் சரியாக பொருந்தப்படும் போதுதான் இந்த செயற் பாடு முழுமை பெறுகின்றது. பத்திரிகைகள் சமூக நலனைப் பாதிக்காத வகை யிலும், சமூகத்திற்குப் பயன்மிக்க விடயங்களை வெளிக்கொண்டு வருவதற்கும், இயற்கை நீதிக்கோட்பாடை அனுசரித்து பக்கச்சார்பற்ற நடுநிலையான செய்திகளை கொண்டுவருவதும் பத்திரிகைத்தர்மம் ஆகும்.

அவ்வாறல்லாது வீழன் ஒரு நாளிதழ் காலவோட் டத்தில் வாசகனிடமிருந்து தன்னை அந்நியப் படுத் திவிடும், இதனாலதான் தேசிய பத்திரிகைகள் எல்லோரி டமும் இடம் பிடிக்க அடித்தளமாகின்றது. இவ்வகையில் வலம்புரியானது ஒரு பிரதேச பத்திரிகைக் கான தனது பங்கைப் புரிந்துகொண்டு நீண்டு நிலைத்திருக்கத் தேவையான பல நல்ல அம்சங்களைக்கொண்டிருப்பது கண்டு நான் உவகையடைகின்றேன்.

பிராந்திய பத்திரிகையாக தனது 15 வருட காலத்தை நிறைவு செய்து நடுவு நிலைமை சார்ந்து பயணித்து நிலைபெற எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

திருமதி.றூ.கேதீஸ்வரன்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

## மன நிறைவுடன் வாசிக்கும் பத்திரிகை



யாழ். குடா நாட்டிலிருந்து வெளிவரும் பத்திரி கைகளில் மிகவும் காத்திரமான செய்திகளுடனும் படைப்புக்களுடனும் வெளிவரும் பத்திரிகைகளில் ஒன்றாக வலம்புரி சங்குநாதம் பத்திரிகையைத் திகழ்வதை நான் பார்க்கின்றேன். மேலும் இவ் வலம்புரி பத்திரிகையின் செய்திகளுள் கிராம மட்டத்திலான செய்திகள் பல தினமும் அதிகமாக வெளிவருவது சிறப்பம்சமாவதுடன் **ஆன்மீக சிந்தனைகள்** எனும் தலைப்பில் ஓர் தொடரினை சிறப்பாக பிரசுரிப்பதும் மிகவும் சிறப்பம்சமாகும். அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் சேவைகள் பற்றி உடனுக்குடன் உரிய முறையில் பிரசுரித்து வருவதும் பொதுமக்களுக்கு பிர யோசனமான பல செய்திகளை பிரசுரிக்குமாறு எம்மால் கோரப்படும் வேளைகளில் அவற்றை பிரசுரிப்பதிலும் ஒருபோதும் வலம்புரி பின் நிற்பதில்லை.

பத்திரிகை ஒன்றினை ஆரம்பித்து நடத்துவதென்பது ஒரு இலகுவான காரியமன்று. அதுவும் ஆரம்பித்த காலம் மிகவும் சோதனை மிகுந்த காலமாகும். அன்றிலிருந்து இன்று வரை தொடர் சியாக எம்மக்கள் மத்தியில் வலம் வந்து கொண்டிருக்கும் வலம்புரிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்குவதில் மனம் மகிழ்கின்றேன். தொடர்ந்து எதிர்காலத்திலும் வலம்புரி தனது நற் பெயருடன் வெளிவருவதை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

வைத்திய கலாநிதி. பவானி பசுபதிராஜா,
பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை.

## உலகத்து உண்மைகளை உடன் தரும் வலம்புரியே



வலம்புரி நாளிதழ் தனது 15 ஆவது அக வையினை நிறைவு செய்து 16 ஆவது ஆண்டில் அடி யெடுத்து வைப்பதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

உலகத்து உண்மைகளை உடனுக்குடன் வழங்குவதில் முனைப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டமையே 15 ஆண்டு காலம் மக் கள் மனதில் நிலைத்து நிற்க வழிவகுத்தது. அயராத உழைப்புடன் பாரபட்சமின்றி இந்நாளிதழ் வெளிவர உதவிய அனைவருக்கும் எனது வாழ்த்துக் களைத் தெரிவிப்பதோடு தங்கள் பணி தொடர இறைவனை பிரார்த்திக்கின் றேன்.

செ.பிரணவநாதன்,
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

## நடுநிலையோடு செய்தி தந்து பணி தொடர வாழ்த்துகின்றேன்



வலம்புரி நாளிதழின் 15 ஆம் ஆண்டு நிறைவிற்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய காலகட்டத்தில் யாழ். மண்ணில் கால்பதித்து 15 வருடங்களைக் கடந்த இந்த நாளிதழ் நேர்மையான முறையில் இம்மண்ணின் மக்களோடு நடுவுநிலையாக இருந்து செய்தி களை வழங்கி வருவதையிட்டு பாராட்டுவதுடன் மேலும் மக்களின் வாழ்வின் மேம்பாட்டிற்கு ஏதுவான ஆக்கபூர்வமான ஆக்கங்க ளைத்தந்து தனது நிலைப்பாட்டை மேலும் நிலைநிறுத்தி வளப்படுத்தி தனது பணியை தொடர்ந்து ஆற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்,
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

## ஊடகத் தூணுக்கு எனது வாழ்த்துக்கள்



15 வயது பருவ மகள் பொலிவுடன்
செயலாற்றி பெயருக்கேற்ற
அதிசய வலம்புரியாய் பக்கச்சார்பற்றும்
துணிச்சலுடனும் மக்களுடன்
செய்திகளையும் கருத்துக்களையும்
பகிர்ந்து பொதுநலம் பேணி
தன்னை அர்ப்பணித்த ஊடகத்
தூணுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்
செய்திகள் மட்டுமல்ல, சிந்தனை கட்டுரைகளும்
சிந்திக்க வைக்கும் ஆசிரியர் தலையங்கமும்
பக்கச் சார்பற்று பணிபுரியும் பண்பட்ட
சிந்தனையும் வேரூன்ற ஆன்மீகமும்
சுகவாழ்வு சிந்தனையும் படிப்போருடன்
பகிர்ந்து சிந்தனையின் சிகரமாய்,
அறநெறியும் அறிவொளியும் பரப்பி மக்களின் மனம் கவர்ந்த
பருவப் பெண்ணாய் முகிழ்ந்திருக்கும்
வலம்புரிக்கு
மணமகளாய் மலர்ந்து தாயாக உருவாகி தன்னை
அணைக்கும் வாசகப் பிள்ளைகளுக்கு நல்லமுது என்றும்
பாற்கடல் என்றும்
போற்றும் வகையில் பல்சுவை
செய்திகளைப் பகிர்ந்து வலம் வர
வேண்டுமென வலம்புரியே
உன்னை வாழ்த்துகின்றேன்

மாணிக்கவாசகர் கணேசராஜா
மாவட்ட நீதிபதி, முல்லைத்தீவு.

## அகவை பதினாறில் தடம் பதிக்கும் வலம்புரி



இன்றைய உலகின் ஊடகத்துறை அதீத வளர்ச்சி அடைந்திருப்பது யாவரும் அறிந்ததே. ஆரம்ப காலங்களில் பத்திரிகைகள், சஞ்சிகைகளே வெகுஜன ஊடகங்களாக இருந் தன. நடுவுநிலைமையோடும் நிதர்சனத்தோடும் இயங்கிவந்தன. இவை மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் நாட்டு நடப்பினை அறிவதற்கும் ஆணிவேராக அமைந்திருந்தன. ஆனால், இன்றைய நிலையில் ஊடகங்கள் இணையம்வரை உயர்ந்து நிற்கின்ற வேளையில் பத்திரிகைகள் பல சவால்களின் மத்தியில் தமது பணியினை முன்னெடுத்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

வடபுலத்தில் இயங்கிவரும் தமிழ் பத்திரிகைகளில் முன்னணி வகிக்கும் நாளிதழ்களில் வலம்புரியும் ஒன்றாகும். வெளிப்படுத்தன்மையும் நடுநிலைத் தன்மையும் செய்திகளுக்கு முன்னிலையளிக்கும் பண்பும் வலம்புரியிடம் காணப்படும் நற்பண்பாகும். தனக்கேயான தனித்து வப் பண்புகளைத் தாங்கி மற்றைய பத்திரிகைகளிலிருந்தும் மாறுபட்ட தன்மையைக் கொண்டதாக திகழ்வது பாராட்டுதற்குரியதாகும்.

வடபுலத்தில் வலம்புரிச் சங்குநாதம் இடையறாது ஒலித்து வருவதை வடபுல மக்கள் நன்கறிவர். இதேபோல நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் மக்கள் அனைவரின் இதயங்களில் வலம்புரிச் சங்கொலிக்க வேண்டும். அதேவேளை பதினைந்து அகவை பயணத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய வல்ம்புரிக் குடும்பத்தினருக்கு மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும் வலம்புரி வலம்வர எனது இதயபூர்வமான ஆசியினையும் வாழ்த்தினையும் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு.

## சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல்...



கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாது நடுவு நிலை நின்று தமிழ் மக்கள் மத்தியில் மங்காப் புகழ் பெற்று நன்னெறி படைத்து வரும் நாளிதழாம் வலம்புரி சங்கு நாதமானது தனது 15 ஆவது அகவை நிறைவில் படிகவிழாதனை 20.12.2014இல் பெருமையுடன் கொண்டாட முனையும் சிறப்பு மிகு நன்னாளில் ***சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல*** என்றும் மக்கள் மத்தியில் புகழ் பெற்றுத் திகழ எனது ஆசிகளையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் மண்ணிலே தடம்பதித்து நம்நாடு மட்டுமன்றி பிற நாடுகளின் மூலைமுடுக்கெல்லாம் சங்கொலி பரப்பி உண்மைக்குரலை நீதி, நேர்மை வழியில் மக்கள் அறிந்து கொள்ள வழிசமைத்த பெருமை மிகு வலம்புரி நாளிதழானது தினசரி செய்தி மட்டுமல்லாது கல்வி, விளையாட்டு உட்பட பல்துறைசார் விடயங்களை தன்னகத்தே திரையிட்டு மக்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்துள்ளது என்ற வகையில் நான் பெருமையடைவதுடன் இன்று போல் என்றும் சிறப்புடன் ஒளிவீச எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தி. இராசநாயகம்,
தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,
முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்
ஜெயந்தி நகர் கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014


# YOGIS

**INSTITUTE OF BEAUTY THERAPY, HAIR DRESSING & HOME SCIENCE (Pvt.) Ltd.**



புதிய வகுப்புக்கள் 04.01.2015 இல் ஆரம்பமாகின்றன

அழகுக்கலை. Advanced Beauty Culture & Hair Dressing Diploma Course

Advanced Cosmetology (Diploma Course)

நவீன ஒப்பனையும் தலை அலங்காரங்களும் (Advanced Bridal Make Up- Hair Styles)


வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்.

கேக் ஐசிங் , மாச்சீனி மலர்கள் (Birthday Cakes, Fondant Structure & Sugar Flowers)



- அழகுக்கலையின் தன்னிகரற்ற நிறுவனம்
- 25 வருடங்களுக்கும் மேலான அனுபவம் வாய்ந்த நிபுணரின் கைவண்ணம்.
- இந்தியாவின் அதி நவீன அழகுக்கலை நுட்பங்களின் வெளிப்பாடு யாழ்ப்பாணத்திலும்.
- மணப்பெண் அலங்காரத்தின் தலைசிறந்த நவீன பரிமாணங்கள்.

இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றுக் கொள்ள நாடுங்கள் யோகிஸ்...



MS. YOGINI SHANMUGANATHAN,
Diploma in High Tec, Aesthetics & Cosmetology (India),
Diploma in Advanced Bridal Makeup & Character Makeup (India),
Diploma in Advanced Modern Make -up with Air Brush Make-up (India)
Diploma in Home Economics (Sri Lanka).

No. 75, Amman Road, Nallur, Jaffna.
TP:-021 222 2796, 0777 164 923
Email: yogisbeauty@gmail.com, web:www.yogisbeauty.com

# சித்தா



றெஜிபோம்
டிசைனிங்
அன்ட் ஸ்கிறீன்
பிறின்டிங்

இல. 49 A, அச்சுக்கூட லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

T.P : 075 544 5901



SATHAPONS EDUCATION CENTRE

2015 இல் 52 ஆவது அகவையில்
தடம் பதிக்கும் உங்கள்

# சதாபொன்ஸ் கல்வி நிலையம்

அலிவாய்


- 2015ஆம் ஆண்டுக்கான தரம் 03-11 புதிய வகுப்புக்கள் ஆரம்பம். 10.12.2014 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு
- 2015 தை முதல் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வகுப்புக்கள் பயிற்றப்பட்ட ஆசிரியரின் வழிகாட்டலில்
- 09,10,11 மாணவர்களுக்கு சிங்கள மொழி வகுப்புக்கள்.
- கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அனுமதி - 05.12.2014 முதல்

தொடர்பு - 021 226 3206

இயக்குநர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014


A/L 2017
கலை, வர்த்தக, கணித, உயிரியல்
தொழில் நுட்ப பிரிவுகள்
ஆரம்பம்:-ஜனவரி 03.01.2015 (சனிக்கிழமை)
காலை 9.00 மணி
NEC
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

GEM HOTEL
மிகமிக சுவையான, சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்ட உணவுகளை சுவைத்து மகிழ்ந்திட
இன்றே நாடுங்கள்... GEM HOTEL
ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்
Proprietor A.Subaideen
260, K.K.S Road, Jaffna.
T.P : 021 7916493

Arahman Hotel
123, இராமநாதன் வீதி,
கலட்டிச் சந்தி.
T.P :- 0772749743
மிகமிக சுவையான, சுகாதார
முறைப்படி தயாரிக்கப்பட்ட
உணவுகளை சுவைத்து மகிழ்ந்திட
இன்றே நாடுங்கள்
Arahman Hotel
விசேட ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

OLYMPIA SPORTS
Dealers in all kind of Sports Goods.
Specialist in Sports Wears
No.06, Jummah Mosque Lane,
Kasthuriyar Road,
Jaffna.
Tel:021-222 3490
Mobile: 077-8060 267
E-mail:olympiasportsjaffna@gmail.com

YARL PHONE SHOP
யாழ் போன் சொப்
Tel : 021 - 222 3817 / 021 - 222 7125 /
077 3611 282
இல. 09, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை வெளிப்புறம், யாழ்ப்பாணம்.
Phone Sales & Repair

ஆசீர் வணிக நிலையம்
ASEER Vaniga Nilaiyam
Paper/ Stationeries/ More Items
No.202,204 K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 3485 , Fax:- 021 222 2842


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014


சீமெந்து, வயர், கம்பி, சுவிட்ஸ், பெயின்ற்
அனைத்துக்கும் நாட வேண்டிய ஒரே இடம்...

**முத்துமாரி மின்னியல், கட்டடப் பொருட்கள்**

**மற்றும் உதிரிகள் வாணிபம்**



116A, இராமநாதன் வீதி,
கலட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 7200756

116A, Ramanathan Road,
Kaladdi Junction,
Jaffna.


வலம்புரியே எழுத்துலகில் யார் உன்னை மிஞ்சிடுவர்
விடியற் காலை வேளை நீ நெஞ்சுக்கு நிம்மதி தந்திடுவாய்
மரண ஓலங்கள் எமக்கு வேண்டவே வேண்டாம்!
உன் வரவை உதயசூரியனாய் இதயத்தில் நிலை நிறுத்தி
எதிர்பார்த்து நிற்கின்றோம்!
பல் சுவையாய் படிப்பதற்கு தேனமுதாய்
பாங்கான பல் செய்தி தந்து
பக்குவமாய் ஆசிரியர் தலையங்கம் தனைதீட்டி
வெற்றி நடை போடும் வலம்புரியே!
வாழ்க நீ! வளர்க நின் பணி!

-திபர்ஷன்-


**அழகுக்கலை பயிற்சி**

YARL BEAUTY ACADEMY

ORIFLAME SWEDEN



யாழ் பியூட்டி அக்கடமி மற்றும் சுவீடன்
நாட்டு ஒறிபிளேம் நிறுவனத்தின் யாழ்
சேவை நிலையத்தினால்

இந்தியாவில் விசேட பயிற்சி பெற்று சிறப்புப்
பெற்ற ஆசிரியையினால்



- ❖டிப்ளோமா அழகுக்கலைபயிற்சிகள்
- ❖ஒரு மாத கால அழகுக்கலைபயிற்சிகள்
- ❖கேக் ஐசிங் பயிற்சிகள் அனைத்தும் மிக குறைந்த கட்டணத்தில் ஆரம்பமாகவுள்ளன.

அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பிரிவு I : 29/12/2014 அன்று 10.00 மணிக்கு
பிரிவு II : 03/01/2015 அன்று 10.00 மணிக்கு

பதிவுகளையும் மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள
03/01/2015 இற்கு முன்னர் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

பயிற்சி வகுப்புக்கள் ஒவ்வொரு மாதமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
வகுப்புக்களில் தனியாகவும் குழுவாகவும் இணைந்து கொள்ளலாம்.
குழுவாக இணைந்து கொள்பவர்களுக்கு மேலும் விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்.
நிறுவன அமைவிடத்தினை அறிந்து கொள்வதற்கு தொடர்பு கொள்ள
021-4546 026

**616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(வேம்படி சந்தியில்)**

ORIFLAME SWEDEN



# C V S Paper Traders
## Paper Reel Converters

CVS

**PRINTING PAPER AND BOARDS**
- Newsprint Paper
- Carbonless Paper
- Woodfree Offset Paper White/Coloured
- Photo Copier Paper White/Coloured
- Sack Kraft Paper
- Box Board -Grey Back
- Box Board White Back/Triplex Board
- Coated Art Paper
- Coated Art Board
- Sticker Paper -Gloss/Matt
- M.G. Poster Paper White/Coloured
- Brief Card Uncoated
- Bristol Board White/Coloured
- Tissue Paper / Oil Paper
- Grey Board
- Cover Paper
- Conqueror Paper

**FINISHED PRODUCTS**
- Duplo printing paper
- Fax rolls
- POS rolls
- ATM rolls
- Cash register rolls

**OTHER PRODUCTS**
- Printing Offset Ink

* Slitting & rewinding of paper to your required size
* Excellent service guaranteed
* Prompt delivery service to your door step

Sole Agents and Distributors of MAUL Paper Grammage Scales.

18/2, Pantalion Mawatha, Rilaulla Kandana, Sri Lanka
Phone: +9411 2236902, +9411 2232705, +9411 4933233
Fax: +9411 2234434 E-mail:cvspaper@sltnet.lk
Web: www.cvspapertraders.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014


PEARSON

edexcel

# REGISTER FOR ANY HND PROGRAMME & Get




COMMENCEMENT ON 30th of November 2014

Samsung GALAXY Tab4




Hurry! Limited Offer

Gold Partner of Pearson (Edexcel), UK

For Reserve your Tab

SMS YOUR DETAILS TO 077 309 9 308

## BTEC HND

Computing & Systems Development

Business Management

Equivalent to 1st and 2nd Years of a UK Bachelors Degree

Leading to UK Degree from LONDON metropolitan university

Duration : 18-20 Months | Standard Fee : Rs. 260,000 | Installment : Rs. 50,000 + 14,000 x 15

ESOFT
Shaping Lives, Creating Futures.
www.esoft.lk

## ESOFT METRO CAMPUS

*Sri Lanka's Largest Higher Education Network*

No.137, K. K. S Road, Jaffna, Sri Lanka | 021 222 4142

Contact your nearest pearson edexcel HND Centre

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Anuradhapura | 025-5670513 | Colombo | 011-7555520 | Jaffna | 021-2224142 | Kurunegala | 037-2223945 | Matara | 041-2233550 | Nuwara Eliya | 052-7755400 |
| Bandarawela | 057-2224042 | Galle | 091-7501125 | Kalmunai | 067-3673555 | Kalutara | 077-9604830 | Monaragala | 055-2055444 | Trincomalee | 026-7267200 |
| Batticaloa | 065-7200070 | Gampaha | 033-7388051 | Kandy | 081-2204400 | Kiribathgoda | 011-7555535 | Negombo | 031-2227990 | Wattala | 011-7555530 |

Hotline : 077 309 9 308

45 Branches Island wide


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014


அன்னை புத்தக சாலை
Annai Book Depot

வலம்புரியே நீ பல்லாண்டு காலம் வாழ்க!

No.07, Hospital Road,
Jaffna,
T.P : 021 222 9881
Fax : 021 222 0865

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
ALL CEYLON DISTRIBUTERS

வலம்புரியே நீ வாழ்க! நின் புகழ் ஓங்குக!

Importers of books, Magazines, Agriculture Equipments, All Kinds of Stationery, All Kinds of Paper Items, Chemicals, Sports Goods, Office Equipment, etc. and Government Suppliers.

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

No. 212, K.K.S. Road, Jaffna. T.P : 021 222 5542, 021 5671527
Email : acdil@ymail.com Fax : 021 222 7983

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
நியூ நெல்சன் லேணர்ஸ்
New Nelson Learners

89, Kandy Road,
Chundukuli,
Jaffna.

T.P : 021 222 4527,
077 358 1916,
077 790 6064
Fax : 021 222 9109

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிசுமுக பயிற்சி நேரங்கள். அதிசுமுக பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.

கிளைகள்

| | | | |
|---|---|---|---|
| இல.89, கண்டி வீதி, சுண்டிக்குளி. 021 222 4527 077 358 1916 | பஸ் நிலையம், சுன்னாகம். 077 715 0097 021 492 3732 | பிரதான வீதி, வல்வெட்டித்துறை. 077 557 3711 021 492 3733 | காளிகோயில் வீதி, சாவகச்சேரி. 021 492 3114 077 761 1686 |

இல.127, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி.
021 492 3115
077 111 3382

Mega Sale
நத்தார் புதுவருடத்தை முன்விட்டு
மாபெரும் மலிவு விற்பனை
தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்

- ★ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான (Glass Coffee Table) இலவசம்.
- ★ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை (Pillow), அல்லது Bed sheet மற்றும் 2 Pillow covers Free.
- ★ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Damro Door களுடனும் ஒரு Door Lock இலவசம்.
- ★ Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Rice Cookers ஐ அதிகூடிய விலைக்கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ 32", 40", 50" LED TV களுடன் ஒரு DVD Player இலவசம்.
- ★ 25000/= க்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- ★ Damro, Piyestra Nilkamal, Phonix, Arpico ஆகிய பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும்.

31,900/= இல் இருந்து

JAMUNA FURNITURE
181, Navalar Road,
Jaffna.
T.P. 021 222 1092,
077 757 4776


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014

## மகிழன் களஞ்சியம்

பல்வேறு துறைகளில் பயனுள்ள தகவல்களை
தாங்கும் வலம்புரியே வளர்க உன் நாமம்!

இல. 451, முல்லைவீதி,
தருமபுரம்.
T.P. 021 4901361

உரிமையாளர் :- மா. ஜீவரட்னம்.

## வினோ புத்தகசாலை
## VINO BOOK SHOP

உலகு போற்ற
உண்மை தாங்கி வரும்
வலம்புரியே
வாழ்க பல்லாண்டு!

எம்மிடம் பாடசாலை கற்றல் உபகரணங்கள்
சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன
பெற்றுக்கொள்ளலாம்

vinoshanaj@gmail.com

தபாலக வீதி, முல்லைத்தீவு.

A.J.Vinoshan Tel : 021 2290280 / 0779989911

மக்கள் மனதில் நீங்கா இடம்பெறும் வலம்புரியே உன் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்!

## சோமசுந்தரம் ஸ்ரோர்ஸ்

A9 றோட், மாங்குளம்.
077-0692 140

## S.B.Book Shop

அனைத்துப் பொருட்களுக்கும்
விசேட விலைக் கழிவு

Kanagapuram Road,
Kilinochchi.

வலம்புரி நீ வாழ்க
பல்லாண்டு

கற்றறிந்தவர்கள் கைகளில் தவழும் வலம்புரியே வாழ்க உன் புகழ்!

## கலைச்சோலை புத்தகசாலை

முள்ளியவளை,
முல்லைத்தீவு.

T.P. 077 9334 280

நடுவுநிலை தவறா வலம்புரியே வாழ்க!

## அறிவு நதி பொத்தகசாலை
## Arivunathy Book Shop

Wholesale & Retail Dealers in All Kinds of Book, Stationeries, Office Equipments, Sports Items, Trophies, Gift Items & Toners, Cartridges.

கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.

Kanagapuram Rd,
Kilinochchi.


T.P / Fax :- 021 2285395 / 0776737535

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
சிறப்பு மலர்-20.12.2014

# Kiruba Learners

# கிருபா லேணர்ஸ்



**அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை**

Regd No. DS/ 589, Kiruba Learners, Govt. Approved A Grade Driving Training School

- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.

**இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**TP: 021 222 4353, 021 492 3200, 077 722 5292**

**பருத்தித்துறை,**
021 492 3201
071 454 6958

**சாவகச்சேரி**
021 492 3202
021 227 0700

**சுன்னாகம்**
021 224 2022
071 454 6956

**நெல்லியடி**
021 300 6550
071 454 6957

**கிளிநொச்சி**
021 228 5505
071 454 6955

**விசுவமடு**
021 320 1515
071 454 6955

**வவுனியாவிலும் உதயம்**


இல. 216, A9வீதி, வவுனியா.
(வசந்தி தியேட்டருக்கு முன்பாக)
(வவுனியாவில் பெண்களுக்கு பெண் பயிற்றுவிப்பாளர்களினால் பயிற்சி வழங்கப்படும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா

## சிறப்பு மலர்-20.12.2014


திசா
என்ரப்பிறைசஸ்
Thisa Enterprises
கொம்பியூட்டர் ரைப்பிங், பிரிண்டிங், போட்டோ கொப்பி, லெமனேற்றிங், பாடசாலை மாணவர் களுக்கான கற்றல் உபகரணங்கள், காகிதாதிகள், மற்றும் CD,DVD என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம்.
T.P : 077 5459131
இல.42,திருநகர் வீதி, கிளிநொச்சி.
No.42, Thirunagar Road, Kilinochchi.


அகவை 16 இல் கால் பதிக்கும்
வலம்புரியை மனதார வாழ்த்துகின்றோம்
அனைத்து விதமான வேலை வாய்ப்புக்களுக்கும்
தொடர்பு கொள்ள வேண்டிய ஒரே முகவரி
Unico Jobs Local
Employment Agency
No.78, New Shopping
Complex, Handala Junction, Wattala.
T.P. 077- 7889 185




வலம்புரி பத்திரிகை
மென்மேலும் வளர வாழ்த்தும்.
பருத்தித்துறையில்
சகலவிதமான அச்சமைப்பு மற்றும் வடிவமைப்பு வேலைகளுக்கும்
அன்னம்ஸ்
மல்ரி சேவிஸ்
டிஜிற்றல் பிறிண்டிங்
ஓவ்செற் பிறிண்டிங்
கலர் பிறிண்டிங்
போட்டோ கொப்பி
பனர் / ஸ்ரிக்கர் / டிஜிற்றல் பெயர்ப் பலகைகள்
விழா அழைப்பிதழ்கள் / திருமண அழைப்பிதழ்கள்
விசிட்டிங் கார்ட் / டியூறோ பிறேம் / புத்தகம் கட்டுதல்
சான்றிதழ்கள் / துண்டுப்பிரசுரங்கள் / புத்தகங்கள்
வலம்புரி பத்திரிகை விளம்பரங்கள்.
All Type of Printing Works & Graphic Designing
பஸ் நிலையம், பருத்தித்துறை.
தொ.பே: 077 2835397
075 0466512
021 226 1018





NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
2017 A/L
கணித, உயிரியல்
பிரிவு விரைவில்
ஆரம்பம்
வலம்புரி
நீ வாழ்க!




மணி ஐயப்பா நகைப்பூங்கா
கந்தசுவாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி.
ஈழத்தின் தமிழ் மண்ணில் பூத்த முதல்தர பத்திரிகையே நீ
மென் மேலும் வளர நல் வாழ்த்துக்கள்!
தொ.பே : 021 2280067, 077 2735406
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மனிதனை முழுமனிதனாக்குகின்றது



திரு.பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்

மேற்படி வாசகத்தை இங்கிலாந்தின் தத்துவ ஞானி **பிரான்சிஸ் பேக்கர்ஸ்** முன்வைத்தார். அவர் ஓர் இயற்கைவாதி. இயற்கையையே ஓர் புத்தகமாக வர்ணித்தார். அந்த வகையில் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் வகையில் நூலகங்கள் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு மாணவர்கள் பொதுமக்கள் என்போரை ஊக்குவிக்கின்றன.

இன்று தொலைக்காட்சி, இணையத்தளங்களின் வளர்ச்சியினால் நூல்களை வாசிக்கின்ற பழக்கம் குறைவடைந்துள்ளதாக சொல்லப்படுகின்றது. நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப, உற்பத்தி கலாசார மாற்றங்களுக்கான அடிப்படைக் காரணிகளில் நூல்களும் ஒன்றாகும். மனிதனின் பிரதான ஆக்கங்களில் நூல்கள் முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றன. மனிதனின் மூளையினால் உருவாக்கப்படும் கருத்துக்களின் தொகுப்பே நூல்களாகும்.

நூல்கள் சாகா வரம் பெற்றவை. உயிரோட்டம் உள்ளவை. நல்ல நண்பர்கள். எனவே, அவற்றை வாசித்து பயன்பெற வேண்டும். என்னதான் நவீனத்துவம், இணையத்தளம் வளர்ந்தாலும் நூல்களின் பெருக்கமும் அவற்றை வாசிக்கும் பழக்கமும் அதிகரிக்க வேண்டும்.

வாசிப்பு, தேடல் என்பவற்றுக்கு மனிதனுக்கு தேவை இருக்கவேண்டும். ஒரு மாணவன், ஓர் ஆசிரியனுக்கு ஏன் வாசிக்க வேண்டும்? எதை வாசிக்க வேண்டும்? எப்படி வாசிக்க வேண்டும்? என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ரஷ்யாவின் கண்ணாடி என அழைக்கப்படுகின்ற லியோ ரோல்ஸ் ரோய் நிலப் பிரபுத்துவ குடும்பமொன்றில் பிறந்தவர். ஆனால், வாசிப்புப் பழக்கமே அவரைச் சிறந்த சிந்தனையாளராக, எழுத்தாளராக மாற்றியது. அவர் எழுதிய **போரும் சமாதானமும்** எனும் நூல் உலகப் புகழ்பெற்றது. ஐரோப்பாவில் முதலாளித்துவம் பொருளாதார முறைமைக்கு எதிராகப் போராடிய கார்ஸ் மராக்ஸ் தொடர்ந்து நாடு கடத்தப்பட்டு, இறுதியில் இங்கிலாந்தில் தஞ்சமடைந்தார். அங்கு தொழிலாளர் போராட்டங்களுக்கு வழி காட்டிய தோடு, இங்கிலாந்தின் அரசியல் பொருளாதாரத்தை ஆராய்வதற்காக பிரிட்டிஷ் காட்சியக நூலகத்தைப் பயன்படுத்தினார். அங்கு நாளொன்றுக்கு பதினெட்டு மணித்தியாலங்கள் வாசிப்பு தேடல் ஆய்வில் ஈடுபட்டு 1867 Das Capital மூலதனம் எனும் நூலை வெளியிட்டார்.

இவ்வாறான பெரியோர்களை முன்னுதாரணமாகக் கொண்டு மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப்படுவோர் பாடசாலை [illegible] நூலகங்கள், பல்சுவைக்கழக நூலகங்கள், பிரதேச பொது நூலகங்கள் என்பவற்றை முறையாகப் பயன்படுத்த வேண்டும். நூலகங்கள் பல்வேறு செயற்திட்டங்கள் மூலம் அவர்களுக்கு வழி காட்ட வேண்டும். இன்று எல்லா வகைப் பாடசாலைகளிலும் நூலகத்திற்கான கட்டட தளபாட, நூல்கள் தொடர்பான வசதிகள் உண்டு. ஆனால், நூலகத்தை முழுமையாக முகாமை செய்யக்கூடிய பயிற்றப்பட்ட ஆசிரிய நூலகங்கள் பற்றாக் குறையாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதிகமான பாடசாலைகளில் 25 %-50% ஆன மாணவர்களே நூலகங்களில் அங்கத்தவர்களாக உள்ளனர். ஏனைய மாணவர்களை நூலகத்தை பயன்படுத்துமாறு ஆசிரியர்கள் பெற்றோர்கள் அவர்களைத் தூண்ட வேண்டும்.

ஒரு மாணவன் மொழியொன்றில் பூரண தேர்ச்சி பெற வேண்டுமாயின் வாசிப்பு, பேச்சு, எழுத்து ஆகிய மூன்று திறன்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆனால், வகுப்பறைகளில் மாணவர்களின் வாசிப்பு, பேச்சு திறன்களில் போதிய [illegible] யினால் அவர்களின் எழுத்தாற்றல் குறைவடைந்துள்ளது. இதனால் க.பொ.த (சா.தர) பரீட்டையில் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தில் ஏறத்தாழ 25 % ஆன மாணவர்கள் சித்தியடையத் தவறுகின்றார்கள். இந்நிலையில் மாணவர்களின் பொதுவான வாசிப்புத்திறன் வளரும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

இதனால் தான் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் பாடசாலைகள், பொது நூலகங்கள் என்பன வாசிப்பு, பேச்சு, எழுத்து தொடர்பான திறன்களை வளர்ப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் வாயிலாக மாணவர்கள் பெரியோர்கள் முதலானோரை ஊக்குவிக்கின்றமை பாராட்டிற்குரியது. எனவே, மாணவர்களும் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தமது வாசிப்புப் பழக்கத்தை வளர்த்து சொல்லாட்சி, வசன நடைப்போக்கு, கிரகிப்பு, கருத்தாழம் என்பவற்றை வளர்த்து நல்ல பேச்சாளர்களாக, எழுத்தாளர்களாக தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒருவன் எழுத்துத் துறையில் வளர வேண்டுமாயின் வாசிப்பு தேடல், ஆராய்வு என்பவற்றில் ஈடுபட வேண்டும். தினமும் இயற்கை, சமூக, தனிமனித செயற்பாடுகளை அவதானிக்க வேண்டும். சமூக செயற்பாடுகளில் பங்குகொள்ள வேண்டும். அப்பொழுது தான் சிந்தனையில் மாற்றம் ஏற்படும். **வரலாறு கண்ட வீரர்களெல்லாம் சிந்தனையாளர்களே, சிந்தனையாளர்களெல்லாம் செயல்வீரர்களே** என்பது ஜேர்மன் தத்துவஞானி வில்லியம் ஹெகலின் கூற்று. அதற்கிணங்க நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் கருத்துக்களை பிரசவிப்போம். இதனால்தான் எழுத்தாளர்கள் தேசிய மாகாண, பிரதேச மட்டங்களில் கௌரவிக்கப்பட்டு பாராட்டப்படுகின்றார்கள்.

**ஒரு தேசத்தில் புத்தகங்களும் செய்தித்தாள்களும் வெளியாகும் எண்ணிக்கையை வைத்து அந்த தேசத்தின் பண்பாட்டு நிலை நிச்சயிக்கப்படுகிறது, இது சரி தான்** என்றார் மாபெரும் எழுத்தாளர் மார்க்சிம் கார்க்கி. அவற்றின் தரத்தையும் வலியுறுத்த அவர் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்த மருத்துவம் கூறும் பத்தியங்கள்

## இன்றைய காலகட்டத்தில் ஆரோக்கியத்திற்கு எவ்வாறு வழிவகுக்கின்றன?

**பொ**துவாக பத்தியம், இச்சாபத்தியம், கடும்பத்தியம் என பத்தியம் வரையறை செய்யப்படும். காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப உகந்தது. மருந்துகளின் தன்மைக்கு ஏற்ப பத்தியங்கள் கைக்கொள்ள வேண்டும். வாத, பித்த, கபம் என்ற மூன்றினையும் அடிப்படையாக வைத்து அத்தன்மைக்கு ஏற்ப பத்தியங்கள் அமையும். நோயை தணிப்பதற்கு அனுகூலமான உணவு வகைப் பிரயோகத்தைப் பத்தியம் என்று பொதுவில் குறிப்பிடலாம்.

சித்த வைத்திய சிகிச்சைக் கிரமத்தைப் பொறுத்தவரையில் மருந்து, பத்திய உணவு, செய்கைகள் ஆகிய மூன்றும் முக்கிய இடம் பெறுகின்றன. பெரும்பான்மையான நோய்களுக்கு தவறான உணவுப் பழக்கவழக்கமும் வாழ்க்கை முறையுமே காரணமாக அமைகின்றன. நோயேற்பட்ட நிலையில் நோயாளிக்கு கொடுக்கப்பட வேண்டிய அல்லது தவிர்க்கப்பட வேண்டிய உணவுகள் பற்றிய அறிவு நோயை மாற்றுவதில் பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றன. எனினும் சித்தமருந்துகள் சிலவற்றை உண்ணும் போது கடும்பத்திய முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

**சத்தியம் தவறினாலும் தவறலாம்; பத்தியம் தவறக்கூடாது என்ற பழமொழியைக் கூறி எமது வைத்தியங்கள் உப்பில்லா பத்திய உணவினை நோயுற்றவர்களுக்கு உண்ணச் செய்கின்றனர். நினைவாற்றலை உண்டுபண்ணுகிற உப்பு எமக்கு அவசியமாக இருந்தாலும் எமது மக்கள் உப்பின் பாவனையை அதிகமாக பிரயோகிக்கின்றனர். உப்பு ஒருவருக்கு 2500 -3000 மி.கிராம் போதுமானதாகும். ஆனால், நாம் தினம் சராசரி 10 கிராம் உப்பிற்கு மேலாக எடுக்கின்றோம். உப்பில் சோடியம் உண்டு. கூடியளவு சோடியம் எடுப்போமாகில் எமது உடலில் கூடியளவு நீர்த்தேக்கம் ஏற்படும். இந்நிலை இதயத்திற்கு பெரிய பாரமாக அமையும். உணவில் உப்பு அடர்த்தி கூடுவதால் இலகுவில் அதி இரத்த அமுக்கத்திற்கு ஆளாக முடியும். இவ்வகையில் நாம் குறைந்த அளவில் உப்பைச் சேர்ப்பது நன்மை பயக்கும்.**

**அத்துடன் உணவு உண்ணும் போது நீர் அருந்துவது மத்திமமாக பத்தியத்தில் கூறப்படுகின்றது. உண்ணும்போது நீர் அருந்துவதனால் இரும்புச் சத்து முதலான** நுண்ணிய போசணைக் கூறுகள் உறிஞ்சப்படல் தடைசெய்யப்படும்.

அத்துடன் உப்பை குப்பைமேனிச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து அச்சாற்றுடனே காய்ச்சி வரட்டி அக்காய்ச்சுப்பை பத்தியத்திற்கு பாவிக்கலாம் அல்லது இயங்கமிலைச் சாற்றில் காய்ச்சி வறுத்த உப்பை பத்தியக் கறிகளுக்குப் பயன்படுத்தலாம்.

சாப்பாட்டிற்கு முன்னர் நீர் அருந்துதல் உத்தமம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக மதிய உணவிற்கு 30 நிமிடம் முன்னதாக 300-400 மில்லி கொதித்தாறிய நீர் அருந்தவேண்டும். இது இரைப்பையில் சுரக்கப்படும் அமிலத்தை ஓரளவு ஐதாக்கிவிடும். எனவே, அளவிற்கு அதிகமாக உண்பது தவிர்க்கப்படுகிறது. இதைத்தான்,

நீர் சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி
உண்பவர்தம் பேருரைக்கப் போதே
பி ணி

என்ற வரிகள் மூலம் நீரை நன்கு கொதிக்க வைத்தும், மோரை நன்கு நீர்விட்டுக் கரைத்தும், நெய்யுருக்கியும் உண்டால் பிணி வராது என்பதாகும்.

எண்ணெய் உணவுகள், பொரித்த பலகாரம், பண்டங்கள், சிற்றுண்டி வகைகள் உணவு வகைகள் பத்தியத்திற்கும் நோய்க்கும் ஏற்ப கட்டாயம் விலக்கப்படும். எனினும் நல்லெண்ணெய் பாவனை எமது வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்படுகிறது. பொதுவாக பருவமடைந்த பெண்கள், கர்ப்பிணிப்பெண்கள், பாலூட்டும் பெண்கள் மற்றும் பத்திய உணவுகளில் நல்லெண்ணெய்ப் பாவனை வலியுறுத்தப்படுகின்றது.

கொலஸ்ரோல் உடலின் பல்வேறு அவசியமான வேலைகளைச் செய்கிறது. சாதாரணமாக உடல் இயக்கத்திற்கு தேவையான சில ஓமோன்கள் தயாரிப்பிற்கு கொலஸ்ரோல் ஒரு முக்கிய மூலப்பொருள். அதுமட்டுமல்லாமல் கொழுப்பு சமிபாடு அடைவதற்கு தேவையான பித்தநீர் சுரப்பிகளில் கொலஸ்ரோல் தனியாகவும் வேறு கலவைகளாகவும் சேர்ந்து சமிபாட்டிற்கு உதவுகின்றன. கொலஸ்ரோல் கலச்சுவர் அமைப்பிற்குத் தேவையான முக்கிய பொருள். ஆகவே, மனித உடலில் கொலஸ்ரோல் உற்பத்தியாகின்றது.

**இரத்தத்தில் கொலஸ்ரோல் அளவை, உணவில் நாம் எடுக்கும், கொலஸ்ரோல் கொழுப்பு (எண்ணெய்) முதலியன நிர்ணயிக்கின்றன. தேங்காய், எண்ணெய் முதலியவற்றில் காணப்படும் நிரம்பிய கொழுப்பு அமிலம், கிளிசரோலும், உடலில் செறிவு குறைந்த கொழுப்புப் புரதம் உருவாவதற்கு உதவுவதால், அளவுக்கு அதிகமான கொலஸ்ரோல் கலங்களிலும் நாடிகளிலும் அடைவதற்கு உதவுகின்றன.**

ஆனால் நல்லெண்ணெயில் காணப்படும் நிரம்பாத கொழுப்பமிலமும், கிளிசரோலும் உடலில் செறிவு கூடிய கொழுப்புப் புரதம் உருவாவதற்கு உதவுவதால் கலங்களிலும் நாடிகளிலும் உள்ள கொலஸ்ரோல் அவ்விடயங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்றன. இதனால்தான் இருதய நோய் பாதிப்புள்ளவர்கள்கூட நல்லெண்ணெயைப் பயன்படுத்தலாம். எனவே, இவ் பத்தியத்திற்கு ஆகும் நல்லெண்ணெய் பற்றி இருபாலைச் செட்டியார் பதார்த்த சூடாமணியில் (சித்தமருந்து நூல்) செய்யுளில் கூறியதாவது,

நல்லெண்ணெய் காந்தி பித்தமினைப்பு நேத்திரத்தின் ரோகம்
கவ்வை சேர் சிரவலிப்புக் கபால முட்டணஞ்சிரங்கோ
டெல்லாமார் கிருமி போக்கு மெழிலுங் கண்ணொளியு முண்டாம்
செவ்வையாம் பெலனு முண்டாமென்னவே செப்பினாரே

மேற்படி நல்லெண்ணெயின் பலன்பற்றி தெளிவாக எடுத்தி யம்பப்பட்டுள்ளது.

மேலும் நோயுற்ற நிலையி லும் ஆரோக்கிய நிலையிலும் கஞ்சி வகைகள் பல பத்தியமாக தயாரித்து பயன்படுத்த வைத்தியர்களால் வலிறுயுத்தப்படுகின்றனர். உதாரணமாக கொள்ளுக் கஞ்சி, பாற்கஞ்சி சிறுபயற்றங்கஞ்சி, புளிக்கஞ்சி, வரகுக்கஞ்சி, கேழ்வரகுக் கஞ்சி, கம்பரிசிக்கஞ்சி என்பன குறிப்பிடப்பட வேண்டியவையாகும். எமது உணவில் மென்மையான உறிஞ் சும் தன்மையுடைய நார் மற்றும் கரடுமுரடான வகை நார் காணப்படுகின்றன.

மென்மையான நாருள்ள தானியங்களை வெளி உறையாக மூடியுள்ள தவிட்டுப் பகுதிகள், தானியத்தை சுத்திகரிக்கும்போது அல்லது துப்பரவு செய்யும்போது இவ்வுறை தவிடாக அகற்றப்படுகிறது. எனவே, முழுத்தானியங்களிலான உணவுப் பாவனை அவசியமாகிறது. அத்துடன் கடினமாக நார்ப்பொருளிற்காகவும் நாளாந்த உணவுகளில் கீரை, பழவகைகள், ஒடியல் போன்றன அடங்குதல் இன்றியமையாததாகும். இக்கூறுகள் சரிவர எமக்குக் கிடைக்குமானால் அதிகூடியளவு கலோரிகள் உள்ளெடுப்பதை நாம் தடுக்கலாம். கட்டுப்படுத்தலாம். இதனால் உடற்பருமன், மலச்சிக்கல், தொற்றாநோய்கள் என்பவற்றை முற்றாக தடுக்கலாம்.

**மேலும் சித்தர்கள் இயற்கை உணவு என்று குறிப்பிடுவது சமைக்காத, இயற்கையில் கிடைக்கும் உணவுப் பொருட்கள் அனைத்தும் இயற்கை உணவே. இதில் இயற்கையாக கிடைக்கும் தானிய வகைகள், இலைவகைகள், காய்கறிகள், பழவகைகள், கீரை வகைகள் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன.**

அதாவது, தீயைப் பயன்படுத்தி தயாரிக்காத எவ்வகை உணவும் இயற்கை உணவு ஆகும். நோயுற்றவர்களும்கூட, இயற்கை உணவை பெருமளவில் உட்கொண்டு தங்கள் பிணியிலிருந்து விரைவில் விடுபடலாம்.

தாவர உணவில் உள்ள போசனைக் கூறுகள் யாவும் தடித்த நுண்மூடிக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய தாவர மூடிகள் வாயினால் மெல்லுதல், மேலும் வயிற்றிலுள்ள அமிலத் தாக்கத்தினாலும் உடைக்கப்படுகின்றன. இதன்மூலம் குடலால் உறிஞ்சப்படுகின்றன. மிருகங்கள்கூட இவ்வகை உணவை (இரையை) மீட்டு அசைபோட்டு இத்தகைய முயற்சிமூலம் உணவுச் சமிபாட்டைச் சீராக்குகின்றன. ஆனால், மனிதர்களாகிய நாம் உணவைப் பதப்படுத்தி உண்ண பழகியதால் அவன் உட்கொள்ளும் உணவுக் கூறுகள் அடங்கியுள்ள நார்மூடிகள் அகற்றப்பட்டு வருகின்றன். இதுவே இன்றைய பிரச்சினைக்குரிய அடிப் படைச் சிக்கலாக அமைந்துவிடுகின்றன. எனவே, இயற்கை உணவும் பத்தியத்திற்கு உகந்ததே.

பசுப்பாலைக் கொண்டு பூண்டுப்பால் தயாரித்து பத்தியத்திற்குப் பயன்படுத்தலாம். பூண்டுக்கூடு ஒன்று எடுத்து உதிரிசெய்து சுமார் 6 அல்லது 7 துண்டுகளை, சமவிகிதம் தண்ணீர் கலந்த பசும்பாலில் போட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். பூண்டு நன்கு வெந்த பின் அந்தப் பூண்டை முதலில் நன்கு மென்று விழுங்கி பின் பாலைப் பருகிவர வேண்டும். இது இரத்த அழுத்தத்திற்கு சிறந்த பத்திய முறையாகும்.

மேலும் பலவிதச் செடிகள் நிறைந்த புதர்ப்பகுதிகள் போன்ற இடங்களில் பலவிதமான இலை, தழை, போன்ற அரிய மூலிகைகளை மேய்ந்து வருகின்ற வெள்ளாட்டுப் பாலை, பூலோக தேவாமிர்தம் எனச் சித்தர்கள் கூறியுள்ளார்கள். எத்தகைய நோய், வலி வியாதியை உடையவர்களுக்கும் வயதிற்கேற்றாற்போல் 5 மில்லி முதல் 100 மில்லி வரை வெள்ளாட்டுப்பாலை வாங்கி சம அளவு நீர் கலந்து காய்ச்சி தினமும் எந்த வேளையிலாவது ஒருவேளை குடித்துவரலாம். பொதுவாக காய்ச்சல் (சுரம்) ஏற்படும்போது பத்தியமாக,

**லங்கணம் பரம ஔடதம்**
**பட்டினி பெருமருந்து**
**சிறு உணவு பெருமருந்து**
**உற்ற சுரத்திற்கும் உறுதியாம் வாய்வுக்கும் அற்றவரு மட்டும் அன்னத்தைக் காட்டாதே**

எனும் மேற்கோள் காய்ச்சலினால் சீரண உறுப்பாகிய குடலும் இரைப்பையும் முக்கியமாக பாதிக்கப்படும். அதனால் சீரண உறுப்புக்களின் தொழிற்பாட்டை பாதிக்கும். எனவே, இலகு குணமுள்ள திரவ ஆகாரங்களே பத்தியமாகும். எனவே, இவ் பத்திய விதிகள் மூலம் உண்டது செரிக்கட்டும், உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாத உணவு சாப்பிடாதே, அதிக உணவு விரும்பாதே, பசி அளவு அறிந்து அளவாக உண்க ஆகிய தன்மைகள் வலியுறுத்தப்படுகின்றன.

**ஆரோக்கிய நிலையில் ஒருவருக்கு தகுந்த போசாக்குணவு எவ்வளவு அவசியமோ, அதேபோன்று நோயுற்ற நிலையில் பத்திய உணவு அவசியமாகின்றது. நீண்டகாலத்திற்கு நிலைத்துநின்று பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நோய்களைப் பொறுத்தவரையில் மருந்துகளிலும் பார்க்க ஒருவர் தனது உணவு முறைகளை மாற்றியமைத்துக்கொள்வது சிறந்ததாகும்.**

**உணவுப்பழக்கவழக்கம் சமூகப் பின்னணி கொண்டதாக அமைவதைக் காணலாம். எந்நாட்டிலும் சமூகத்தின் தேவைகளுக்கு அமைய அடிப்படை வளங்கள் உள்ளன. நோய்வருவதற்குரிய காரணங்களில் மிகப் பல மக்கள் கையில்தான் உள்ளன. எனவே, ஆரோக்கியமாக வாழ்வதற்கு சரியான உணவு முறைகளை தெரிவுசெய்தல் அவசியமாகும்.**

Dr. திருமதி. விவியன்- சத்தியசீலன்
M.D (Siddho) India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா

## சிறப்பு மலர்-20.12.2014


மொத்தமாகவும்
சில்லறையாகவும்
உடனுக்குடன் பெற்றுக்
கொள்ள முடியும்

E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்
E.S.P Nagaratnam & Co
52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3096, 021 221 7277
அமெரிக்கன் குடிநீருக்கான யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்

உங்கள் பெறுமதி மிக்க பொதிகளுக்கும் பணத்திற்கும்100% உத்தரவாதம் எம்மிடம் மட்டுமே



- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- மறைமுக கட்டணம் எதுவுமின்றி
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள், உடுபுடைவைகள், பால்மா வகைகள், ஆயுர்வேத மூலிகைகள், மரக்கறி, பழங்கள் உட்பட அனைத்துப் பொருட்களும் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்.
- லண்டன், சுவிஸ், கனடா, இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து பொதிகள் பெற்றுத் தரப்படும்.
- மரம், இரும்பு, கருங்கல், பித்தளை ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பொருட்கள் சிறியதோ, பெரியதோ எதுவானாலும் விமான நிலையங்களுக்கு ஊடாகவோ துறைமுகங்களுக் கூடாகவோ அனுப்பித் தரப்படும்.
- வியாபார நோக்கில் பொதிகள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்.
- முகவர்களுக்கும் விசேட கட்டணம்.
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.




அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
இல. 10, கஸ்தூரியார் வீதி,
(புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி)
யாழ்ப்பாணம். 021 222 3536

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
021 222 6113

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014


**16-வது அகவையில் கால் பதிக்கும் வலம்புரிக்கு எம் இனிய வாழ்த்துக்கள்**

விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!

**உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை**

**திருமுருகன் கொம் நெற்**

இல.27IA, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021-222-7835/077-755 4528

TCN Express,
2b Nelsan Place,
Colombo - 6.

11 Kg விற்கு மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள், CD, DVD என்பன மிக விரைவாக அனுப்பி வைக்கப்படும்.
220 நாடுகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
3-5 வேலைநாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.

20 வருடங்களுக்கு மேல் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

இல.18 பிரதான வீதி, நெல்லியடி.

இல.15 மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை.

ஏ9 வீதி, கிளிநொச்சி. (கொமர்ஷல் வங்கி முன்பாக)

இல.50கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (கொமர்ஷல் வங்கி முன்பாக)

பிரதான வீதி, சங்கானை. (வைத்திலிங்கம் கட்டிடம் மேல்மாடி, ஆசை பிள்ளை நகைக்கடை முன்பாக)

பிரதான வீதி, பருத்தித்துறை.

கடற்கரை வீதி, குருநகர். (தொடர்மாடி கட்டடம் முன்பாக)

யசார் வீதி, மன்னார்.

DHL EXPRESS

WESTERN UNION MONEY TRANSFER







வருகின்ற வருமானம் போதாதா? இதோ புது வருடத்திற்கான அரிய சந்தர்ப்பம். தவற விடாதீர்கள். 20,000/=-38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சீமெந்து, சீட், டயர் ஆகிய நூல் உற்பத்திக்கு பொருட்கள், பெக்கிங், பழுது பார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 17-55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக் கொள்ளப்படும். இவ்வருடம் O/L பரீட்சை எழுதியவர்களும் இணைந்து கொள்ளலாம். (supervisor, accountant, clerk, field officer, sales rap, cash collector தகைமைக்கு ஏற்றவாறு சேர்த்துக் கொள்ளப்படும்.)
(076 639 8366, 077 628 9655, 077 792 0278)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014





15வது அகவையில்.... வலம்புரிக்கு மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

Architectural CAD Centre
Personal – Group – Visiting Classes
Jaffna –Vavuniya - Colombo

Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD Software (2D &3D)
University of Peratheniya
Cert. in Advance 3D- Modeling in Auto CAD
University of Moratuwa.
Cert. in 2D-Drawing & 3D-Modeling in Auto CAD
Open University of Sri Lanka – Nugegoda
Cert. in Auto CAD-2010 (1st Class)
University of Colombo

Advance Programme in
Auto CAD
Punch Home Designing-Platinum
(3D-Animation Software) Contact No: 071-8617972

உங்கள் கனவு வீட்டை உருவாக்க முன்னரே அவை எவ்வாறு அமையபோகின்றது என்பதை முன்னரே அறிந்துகொள்வதற்கும்- வீட்டை சுற்றிபார்பதற்கும் வீட்டின் உள்ளே சென்று பார்பதற்கும் மேலும் நீங்கள் விரும்பியவாறு

Roofing Work
Roof tiling Work
Under ceiling Work
Painting Work
Flooring Work
Floor Tiles Work
Wall Tiles Work
Interior Designing
Exterior Designing
Gardening Work
Landscaping Work
Furniture Arrangements
Door & Window Arrangements செய்வதற்குமான பயிற்சிநெறி



UNIVERSITY OF CAMBRIDGE CAMBRIDGE ENGLISH
GET A CERTIFICATE THAT IS ACCEPTED GLOBALLY

Cambridge - Prelimnary English Test (PET)

* இது ஓர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
* நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

Cambridge First Certificate in English (FCE)

FCE is an upper intermediate level Exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2.

UK இல் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக் கொள்கின்றனர்

Cambridge Certificate in Advanced English (CAE)

CAE is an advanced exam. CAE tests the ability to communicate with confidence in English for work or study purposes. This exam is at CEFR Level C1

Subjects: Reading, Writing, Listening, Speaking, Use of English

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழு வதும் எழத, வாசிக்க,
பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

புதிய வகுப்புக்கள் 15-12-2014 ஆரம்பம்

Course Schedule

| Mon,Tuse,Wed,Thur | | Saturday & Sunday |
|---|---|---|
| Duaration | 10Week | |
| Time | 10.00 - 12.00 | 03.00 - 05.00 |
| | 03.00 - 05.00 | Exam Date :- March & June |

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887

**BRITISH COLLEGE OF ENGLISH** திருநெல்வேலி 143 ஆடியபாதம் வீதியில் 2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் Cambridge Universityன் ESOL பரீட்சைகளான Preliminary English மற்றும் Cambridge First Certificate in English ஆகிய பரீட்சைகளுக்கு மாணவர்களைப் பயிற்றுவித்து அவர்களை பரீட்சையில் சித்தியடைய முறையான பயிற்சியையும் அன்றிலிருந்தே வழங்கி வருகின்றது. அதன் பின்னர் March 2009இல் City & Guilds LONDON INSTITUTE அங்கீகாரம் பெற்று இதுவரை சுமார் 1000 மாணவர்களுக்கு மேல் பரீட்சை எடுக்கச் செய்து யாழ்ப்பாணத்தில் ஓர் பாரிய சாதனையைப் புரிந்துள்ளோம். இப்பொழுதும் பல மாணவர்கள் எமது Cambridge ESOL பரீட்சைகளை முறையே கற்று வருவதுடன் பரீட்சைகளின் பின்னர் உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்படும் ஓர் சான்றிதழையும் பெற்று வருகின்றனர்.

இப்பொழுது நாம் எமது கல்லூரியின் 10 ஆவது வருடத்தை நிறைவு செய்யும் போது Cambridge Universityன் மேலும் இரண்டு பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்யத் தொடங்கி உள்ளோம்.

அவையாவன:-

**A)Cambridge First Certificate in English**

இந்தப்பரீட்சை Common European Frame Work of Reference (CEFR) B2 Level உடையதாகும். UK ல் இருக்கும் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS ற்குப் பதிலாக பல்கலைக்கழக அனுமதிக்காக FCE ஆங்கில அறிவுடைய ஒருவர் வாழ்நாள் முழுவதும் ஆங்கில மொழியில் எழுத, வாசிக்க, பேச இந்தப் பாடநெறி மிகவும் உதவியாக இருக்கும்.

**B)Cambridge Advanced English**

இது ஒரு அதிஉயர் ஆங்கிலப்பாட நெறியாகும். உலகத்தில் உள்ள அத்தனை பல்கலைக்கழகங்களும் IELTS இற்குப் பதிலாக இந்தப் பாட நெறியை ஏற்றுக் கொள்கின்றன. இதில் சித்தி பெறுவோர்கள் வாழ்நாளில் வேறு எந்தவொரு ஆங்கிலப் பரீட்சையையும் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. இந்தப் பரீட்சைகள் கொழும்பில் June மாதம் நடைபெறும் பரீட்சைக்கு இப்பொழுதிலிருந்தே நீங்கள் எமது கல்லூரியில் வந்து ஆயுதப்படுத்த முடியும்.

**C) இலங்கையில் இருந்து LONDON ல் திருமணம் செய்து Settlement VISAல் UK செல்ல இருப்பவர்கள்.**

இது வரை காலமும் City & Guildsன் உடைய A1 பரீட்சைப் பெறுபேறுகளை UK Settlement VISA விற்காக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதற்கு பதிலாக Cambridge English சான்றிதழ்களையே ஒப்படைக்க வேண்டும். எனவே April மாதத்தின் பின்னர் VISA விற்கு விண்ணப்பிப்பவர்கள் இப்பொழுதிலிருந்தே Cambridge ன் KET மற்றும் PET ஆகிய பரீட்சைகளுக்கு எமது நிலையத்தில் ஆயப்படுத்தலாம்.

எமது கல்லூரி மாணவர்களிடமிருந்து அதிகமான தொகை பணத்தை பெற்றுக் கொள்வதில்லை. எல்லோரும் கல்வி கற்க வேண்டும், ஆங்கிலத்தில் பூரண தகுதி அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கில் கடந்த 10வருட காலமாக பணியாற்றி வருகின்றோம். தொடர்ந்தும் இந்தக் குறிக்கோளுடன் செயலாற்றுவோம் என உறுதி கூறுகின்றோம்.

எல்லோருக்கும் எமது நத்தார்
மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014





காகிதாதிகள்
&
அழகுப் பொருள்
வாணிபம்.

பிரதான வீதி,
கந்தபுரம்,
கிளிநொச்சி.

வலம்புரி நீ
பல்லாண்டு
காலம் வாழ்க!

16 ஆவது அகவையில் காலடி
பதிக்கும் மக்கள் மனங்கவர்ந்த
வலம்புரியே நீ பல்லாண்டு வாழ்க!

யாழ்ப்பாணத்தில் மகளிருக்கான
கேக் ஐசிங், உணவுகள்
தயாரித்தல்

16 ஆவது அகவையில் காலடி
பதிக்கும் மக்கள் மனம் கவர்ந்த வலம்புரியே
நீ பல்லாண்டு வாழ்க !

கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் முக
அழகுக்கலை, மணப்பெண் அலங்காரம் உடை தயாரித்தல்
பயிற்சிகளை சிறப்புற வழங்கி வரும் தனித்துவமான பயிற்சி
நிலையம்

விக்ரோறியா வீதி,
(யாழ்.போதனா மருத்துவமனை
பின்புறம்), யாழ்ப்பாணம்.
யாழ்.கலாலயா பயிற்சியகம்



யாழ்ப்பாணத்தில் மகளிருக்கான
கேக்ஐஸிங், உணவுகள் தயாரித்தல்,
கூந்தல் அலங்காரங்கள், Facial
அழகுக்கலை உடை, தயாரித்தல்
பயிற்சிகள் பயில்வதற்கான
தனித்துவமிக்க பயிற்சி
நிலையம்

யாழ் : கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி
(யாழ்.போதனா மருத்துவமனை பின்புறம்),
யாழ்ப்பாணம்.


# இந்தியத் திருத்தல யாத்திரை

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளிற்காக குறைந்த கட்டணத்தில் நடைபெறும் யாத்திரைகள் ஸ்ரீதேவி வட இந்திய தென்னிந்திய யாத்திரை சேவை சார்பாக வரவிருக்கும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களையும் அடுத்துவரும் இனிய பொங்கல் வாழ்த்துக்களையும் இதுவரை எமது சகல யாத்திரைகளிலும் கலந்து சிறப்பித்து உங்களின் அன்புக்கும் மதிப்பிற்கும் மாரியாதைக்கும் உரிய யாத்திரீகர்களுக்கும் இனிவரவிருக்கும் யாத்திரைகளில் கலந்து கொள்ளவுள்ள யாத்திரீகர்கள் அனைவருக்கும் எமது ஸ்ரீதேவி வட இந்திய தென்னிந்திய யாத்திரை சேவை சார்பாக எமது வாழ்த்துக்களை முன்பாகவே தெரிவிக்கின்றோம்.மேலும் வரும் 01.01.2015 முதல் தங்களின் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற முறையில் யாத்திரைகளை விரிவுபடுத்தி உள்ளோம். பார்த்து எந்த யாத்திரை விருப்பமோ அதில் கலந்து இறைவனின் அருள்பெற்று நீடூழ வாழ்வீர்களாக. மேலும் கடந்த காலங்களில் மேலும் யாத்திரை விபரங்களை சுமந்து வந்து தங்களின் மேலான பார்வைக்கு கொண்டு வந்து தந்து தனது 15ஆவது ஆண்டை நிறைவு செய்யும் வலம்புரி பத்திரிகைக்கும் அங்கு பணியாற்றும் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

### யாத்திரை விபரம்

1.7நாட்கள் தமிழ்நாடு, ஆந்திரா, திருப்பதி மேல்மருவத்தூர், திருச்சி காஞ்சிபுரம், சென்னை உட்பட 25க்கும் மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம். ஒருநாள் சொப்பிங் (பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான விஷேட ஆலயங்களும் அடங்கும்).அனைத்து செலவுகளும் உட்பட 1நாள் சொப்பிங்

2. 12 நாள் மூன்று மாநிலங்களுக்கூடான யாத்திரை திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்ச பூதத் தலங்கள் ஆறுபடை வீடுகள் பொற்கோவில் உட்பட 40க்கு குறையாத ஆலயங்கள் தரிசிக்கலாம். அனைத்து செலவுகளும் உட்பட 1நாள் சொப்பிங்

3. 15 நாட்கள் ஐந்து மாநிலங்களுக்கு கூடான யாத்திரை திருச்சி, மதுரை, சென்னை, திருப்பதி, குருவாயூர், சாமுண்டீஸ்வரி, நவக்கிரக ஆலயங்கள் பொற்கோவில்,கன்னியாகுமாரி, சுசீந்திரம், ஆறுபடை வீடுகள் ஆலயங்கள் உட்பட 60 க்கு குறையாத ஆலயங்கள் ஒருநாள் சொப்பிங். அனைத்து செலவுகளும் உட்பட

4. 7 நாட்கள் மும்பாய் சீரடி சாயிபாபா, சனி சிங்கப்பூர் பஞ்சவடி, நாசிக் அவுங்கபாத் 2வது தாஜ்மகால் ,சில ஜோதி லிங்கங்கள் உட்பட பல ஆலயங்கள் தரிசிக்கலாம்.(இந்த யாத்திரைக்கு யாழ்ப்பாணத்தில் நல்லூர் சீரடிபாபா மந்திர b. ராகவன் t.p 0777222568 இங்கும் பதிவு செய்யலாம். குறைந்தது 15 பேர் வர வேண்டும்.)

வட இந்திய காசி யாத்திரை ஆரம்பம் 05.03.2015 நாட்கள் 25 நாட்கள். காசி ஐயா அலகாபத் குஜராத் குருச்சேத்திரம் அகமதாபாத் கடலுக்குள் பஞ்சலிங்கம் ஆக்ரா(தாஜ்மகால் ) உட்பட பல ஆலயங்களை தரிசிப்பதுடன் முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்யலாம். அத்துடன் 10 புனித தீர்த்தங்களில் நீராடலாம்.60 நாட்கள் முன்பாக பதிவு செய்யவும். சென்னை டில்லி விமானம் AC ரெயின் AC பஸ் தரமான தங்குமிடங்கள், திறமையான சமையல் ஆட்கள் மூலம் உடனுக்கு சமைத்த அறுசுவை உணவு. காப்பி பலகாரம் பலகாரம் உட்பட விருப்பமுடையவர்கள் விபரம் கேட்டறிந்து பதிவு செய்யவும்.

திருக்கயிலாய மானசரோவர் புனித யாத்திரை நாட்கள் 14 கொழும்பு காட்மாண்டு கொழும்பு விமானம் ஆரம்பம் 10.05.2015 .விருப்பமுடையவர்கள் 25 .02.2015க்கு பிந்தாமல் பதிவு செய்யவும்.70 வயதிற்கு உட்பட்டவராகவும் ஆஸ்மா, இருதய நோய், வைப்பாஸ் செய்தவர்களுக்கு அனுமதி தர மாட்டார்கள். நேப்பாளில் செல்ல முடியாது. விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

இதில் குறிப்பிட்டுள்ள 123 யாத்திரைகளும் மூன்று வேளை உணவு காப்பி ,ரி ஹோட்டல்களில் AC வாகன வசதி 2பேருக்கு குளியலறை, இணைந்த அறைகள் குடிநீர் விமானிகள் அனைத்தும் அடங்கலாக.

4ம் 5ம் 6ம் யாத்திரைகளுக்கு திறமையான சமையல் ஆட்கள் மூலம் உடனுக்குடன் சமையல் செய்தே உணவு வழங்கப்படும். விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.குறைந்த கட்டணம் நிறைவான தரிசனம் அனைத்து ஆலயங்களிலும் குறிப்பாக எடுக்கும் புகைப்படங்கள் தரப்படும் 10 பேர் சேர்ந்ததும் யாத்திரை ஆரம்பமாகும்.


மேல்விபரங்களுக்கு
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
மகன் ராஜன் 59. 3/6 செட்டியார் தெரு, கொழும்பு-11
T.P:0777680102., 07242222898


குறிப்பு

உமது யாத்திரைகளில் கலந்து கொள்பவர்களை நாங்களே அழைத்துச் சென்று அழைத்து வருவோம். சகல ஆலயங்களுக்கும் உள்ளே நாங்களும் கூட வருவோம். வேறு எவரிடமும் ஒப்படைப்பதில்லை. மேலும் எமக்கு கொழும்பைத் தவிர வேறு கிளை அலுவலகங்கள் கிடையாது. ஆரம்பித்தால் அறியத் தருவோம்.

வாழ்க வளமுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கற்றல் செயற்பாட்டில் முக்கிய பங்காற்றும் "ஞாபக சக்தி"

"வலம்புரி" பத்திரிகையானது தனது பதினைந்து ஆண்டு பத்திரிகைப் பணியில் தடம்பதிப்பதை மனதார வாழ்த்துவதோடு, பிறந்த நாள் விருந்தாகக் கல்வித்துறைசார் கட்டுரைகளைப் பிரசுரித்து மாணவ சமுதாயத்திற்கு ஓர் உந்துசக்தியாக விளங்க முன்வந்ததைப் பாராட்டியே ஆகவேண்டும்.

அந்தவகையிலே, கற்றல் செயற்பாட்டில் முக்கிய பங்காற்றும் "ஞாபக சக்தி" பற்றி சற்று சிந்திப்போம்.

வாழ்க்கையிலோ அல்லது பரீட்சையிலோ நாம் வெற்றி பெறுவது என்பது, சரியான





தகவலை அல்லது செயன்முறையை சரியான வேளையில், சரியான முறையில் பயன்படுத்துவதிலேயே தங்கியுள்ளது.

தகவல்களை அல்லது ஆற்றல்களைக் கருவறையில் தொடங்கி கல்லறை செல்லும் வரை கற்றுக்கொண்டேயிருக்கிறோம். சூழல், பாடவிதானம், ஊடகங்கள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றிலிருந்து நாம் பலவற்றை கற்றுக்கொள்கின்றோம்.

இயற்கை அல்லது இறைவனால் சந்தர்ப்பங்கள் எல்லோருக்கும் சமமாகவே வழங்கப்படுகின்றபோதும், ஒருசிலரே வாழ்கையில் அல்லது பரீட்சையில் வெற்றிபெற, ஏனையோர் பின்தங்குகின்றோம்.

நாமும் அந்த ஒருசிலர் வரிசையில் இடம்பிடிப்பது எவ்வாறு? என்பதே எம்முன் எழுந்து நிற்கும் மாபெரும் வினாவாகும்.

இத்தகைய வெற்றியில் பாரிய பங்களிப்பு செய்வது எமது "ஞாபக சக்தியே" ஆகும். எனவே, ஞாபகசக்தி என்றால்என்ன? அது எவ்வாறு உருவாக்கப்படுகின்றது? அதனை எவ்வாறு நாம் விருத்தி செய்யலாம் என சற்று ஆராய்ந்து



பார்ப்போம்:

தகவல்களை, ஆற்றல்களை அல்லது அனுபவங்களைப் பெற்று, சேமித்து வைத்து, மீளப்பயன்படுத்தும் ஆற்றலையே **ஞாபக சக்தி** எனலாம்.

ஞாபகசக்திக்குப் பொறுப்பாக விளங்கும்எமது உடலின் பிரதான பகுதி மூளையாகும். கோடிக் கணக்கான நரம்புகளைக் (neurons) கொண்டு ஆக்கப்பட்டதே இம் மூளையாகும். இந்நரம்புகள் நரம்பிணைப்புக்களின் (synapses) மூலமாக ஏனைய நரம்புகளுடன் தொடர்புகொள்கின்றன.

ஞாபகசக்திக்கு பெறுப்பான நரம்புகள் தமக்கிடையே புதிய நரம்பிணைப்புக்களை தோற்றுவிப்பதன் மூலம் ஞாபகசக்தியானது உருவாகின்றது.

ஞாபக சக்தியை பின்வருமாறு வகைப்படுத்தலாம்

**1. புலன் ஞாபகம்**
**(sensory memory)**

**2. குறுகிய தொழிற்பாடு ஞாபகம்**
**(short term/working memory)**

**3. நீண்டகால ஞாபகம்**
**(long term memory)**

**புலன் ஞாபகம்**
**(sensory memory)**


ஐம்புலன்களினூடாகவே நாம் தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றோம். பெரும்பாலும் கண் (பார்த்தல்), காது (கேட்டல்), மூலமாகவே தகவல்கள் எம்மை வந்தடைகின்றன. பார்த்த காட்சியிலிருநது கண்ணோ அல்லது கேட்ட ஒலியிலிருந்து காதோ அகற்றப்பட பின்னரும், அக் காட்சி அல்லது ஒலி ஞாபகத்திலிருத்தலையே புலன் ஞாபகம் என்பர்.

விசைப்பலகையால் (keyboard) கணினியின் மத்திய செயற்பாட்டுப் பகுதிக்குத் (central processing unit) தகவல் அனுப்பப்படுவதை இதற்கு ஒப்பிடலாம்.

ஒரு சில செக்கன்களே இந்த ஞாபகம் நீடிக்கும். எத்தனையோ காட்சிகளும் ஒலிகளும் எம்மை சூழ எழுந்தாலும் எம்மைக் கவர்பவையை நாம் பார்க்கின்றோம் அல்லது கேட்கின்றோம். அதாவது கவனிக்கின்றோம் (attention) ஏனையவை கவனிக்கப்படாமலேயே சென்று விடுகின்றன. எவ்வளவுதான் நாம் கூர்ந்து கவனித்தாலும் 11 நிமிடங்களுக்கொரு தடவை எமது கவனம் கலைகிறது.

மேலும், பொதுவாக 35- 40 நிமிடங்களுக்கு மேல்மூளையினால் களைப்படையாது மிக உச்ச அளவில் தொடர்ந்து ஒருவிடயத்தில் அக்கறை கொள்ள முடிவதில்லை. பாடசாலைகளில் இவற்றைக் கருத்திற் கொண்டே பாடவேளைகள் தயாரிக்கப்படுகின்றன.

நாமும் சுயமாகக் கற்கின்ற போது இதனைக் கருத்திற் கொண்டு, தொடர்ச்சியாகச் சிலமணி நேரம் கற்கின்றபோது, சிறுசிறு இடைவேளை



கள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதேவேளை கற்பதனை மறந்து இடைவேளையுடன் கலந்து விடக்கூடாது. அத்துடன் கூர்ந்து கவனிக்க முடியாமற் போவதற்கு, நாம் ஒரே வேளையில் பல இலக்குகள் (multi task) பற்றி சிந்திப்பதும் ஒரு காரணமாகும். இவ்வாறு நடப்பதால் ஒரு இலக்கினையுமே பூரணமாக அடைய முடிவதில்லை.

இதனைத் தவிர்ப்பதற்கு இந்தக் தேவைப்படும் அந்தந்த கணப் பொழுதுகளில் வாழப் பழகிக்கொள்ள (living in the moment) வேண்டும் கடந்துபோன கசப்பான காலங்களை எண்ணி வருந்துவதிலோ எதிர்காலம் பற்றிய பயம் மற்றும் பதகளிப்பில் காலத்தைக் கடத்துவதிலோ பயனில்லை. நிகழ்காலமே நிஜம் என்பதை உணர வேண்டும். அதனை உச்சமாகப் பயன்படுத்த வேண்டும். இந்த புலன் ஞாபகத்தில் உள்ளெடுக்கப்படும் தகவல்கள் அடுத்த கட்டமான குறுகிய தொழிற்பாடு ஞாபகத்தினுள் நுழைகின்றன.

**குறுகிய தொழிற்படு ஞாபகம்**
**(short term/working me mory)**

"இப்போது என்ன செய்துகொண்டிருக்கின்றோம்" என்ற தகவலை எமக்கு சொல்வது குறுகிய தொழிற்பாடு ஞாபகம் ஆகும். எமது அன்றாட நடவடிக்கை இந்த ஞாபகத்தின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன.

புலன் ஞாபகத்தினதும் நீண்டகால ஞாபகத்தினதும் பாலமாகத் தொழிற்படுவது இதுவே. இதனாலேயே இதனை தொழிற்படு ஞாபகம் என்பர். சிந்தனை அல்லது கற்பனை செய்தல், கணித சமன்பாட்டினைத் தீர்த்தல், குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புதல், பரீட்சை எழுதுதல், நடன அளிக்கை செய்தல் போன்ற நிலைமைகளில், தூண்டல்களிற்கேற்ப தேவையான தகவல்களை நீண்டகால ஞாபகத்திலிருந்து பெற்று, நாம் தொழிற்பட உதவுவது இந்த ஞாபகமே.

எனவே, இந்த ஞாபகத்தினை கணனியில் "RAM" தொழிற்பாட்டிற்குஇதனை ஒப்பிடலாம்.

ஒரு சில செக்கன்களிலிருந்து ஒரு சில மணிநேரம் வரை இது நீடிக்கலாம். மீட்டல் (Rehearsal) மூலம் இந்த கால அளவினைக் கூட்டிக் கொள்ளலாம்.

இதனது கொள்ளவானது (capacity) மிகவும் குறைவானது. ஒரே நேரத்தில் 7-2 வித்தியாசமான தகவல்களை எம்மால் கையாள முடியும். இவ்வாறு ஒரே நேரத்தில் பல விடயங்களைச் சரியாக செய்பவர்களையே தசாவதானி, அட்டாவதானி என்போம்.

தகவல் எந்தளவு பெரியதாகவோ சிக்கலானதாகவோ இருந்தபோதிலும், அதனை 7-2 அர்த்தமுள்ள துண்டுகளாக்குகின்றபோது (meaningful chunks) எம்மால் அதனைக் கையாள முடியும்.

உ-ம் ROWCIDKGBCIAFBI என் பதனைப் பின்வருமாறு ஞாபகத்தில் வைத்திருக்கலாம். RAW-CID-KGB- CIA- FBI அர்த்தமுள்ள 5 துண்டுகளாக் கப்பட்டுள்ளது.

0212222073 என்ற தொலைபேசி இலக்கத்தினை 021, 222 , 2073 என்றவாறு ஞாபகம்வைத்தல்வேண்டும். புறக் குழப்பங்களால் (Disturbances) இந்த ஞாபகசக்தி பாதிக்கப்படுகின்றது.

எவரொருவர் அதிக தகவல்களை அதிக நேரம் தொழிற்படு ஞாபகத்தில் வைத்திருக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவராவர்.

இந்த குறுகிய தொழிற்படு ஞாபகத்தில் தகவல்களை திரும்பத் திரும்பப் பயன்படுத்துகின்றபோது (repetition) அவை நீண்டகால ஞாபகத்திற்குச் செல்கின்றன.

**நீண்டகால ஞாபகம்**
**(Long term memory)**

கணனியின் "Hard Disc"ற்கு ஒப்பிடக்கூடியது. நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடியது. கொள்ளளவில் எல்லையற்றது.

சீ.வீ.ராமன் ஐன்ஸ்டீன் போன்ற மேதைகளே நீண்டகால ஞாபகத்தின் 10-15% கொள்ளவையே பாவித்துள்ளனர். தகவல்களை மீண்டும் மீண்டும் மீட்கப்படுகின்றபோது (repetition) நீண்டகால ஞாபகத்திற்குச்செல்கி ன்றன. அங்கே ஏற்கனவே உள்ள தகவல்களுடன் தொடர்புபட்டதாயினும் (association) எமக்குத் தேவையென நாமாகத் தேடிப் பெற்ற தகவலாயினும் (self-interest) உணர்வு பூர்வமான தகவலாயினும் (emotional data) நீண்டநாள் ஞாபகத்தில் பதிதல் இலகுவாகின்றது.


மீண்டும் மீண்டும் பார்ப்பதும் கேட்பதும் எமது ஆழ்மனதிற்படிந்து நீண்டகால ஞாபகத்திற்குச் செல்லும் என்னும் தத்துவமே, விளம்பரங்களை மீண்டும் மீண்டும் ஒலி ஒளி பரப்புவதும், அடிக்கடி கண்ணுக்குப் பலப்படும் இடங்களில் ஒட்டுவதும் ஆகும். புத்திரிகைகளில் மீண்டும் மீண்டும் விளம்பரம் செய்வதும் ஆகும். அரசியலிலும் தேர்தல் காலங்களில் இவ்வுத்தியே பயன்படுகிறது.



Dr. S.கண்ணதாசன்
யாழ்.பல்கலைக்கழகம்

நீண்டநாள் ஞாபகம் சேமிக்கப்படும் பகுதி எமது ஆழ்மனமாகும் (subconscious mind). நீண்டநாள் ஞாபகம் பிரதானமாக இரு வகைப்படும்

**1. வெளிப்படையான ஞாபகசக்தி**
**(Explicit Memory)**




**2. உள்ளான ஞாபகசக்தி**
**(Implicit Memory)**

**வெளிப்படையான ஞாபகச்தி**
**(Explicit Memory)**

இதனையே பொதுவாக "ஞாபகச்தி" என்கின்றோம். முயன்று ஞாபகத்திற்கு கொண்டு வருதலைக் குறிக்கும். பெயர்கள், விபரங்கள், விடயங்கள், சம்பவங்கள் போன்றவற்றை (facts and figures) ஞாபகப்படுத்தலைக் குறிக்கும். இதனை மேலும் இருவகையாகப் பிரிப்பர்.

**1. தக்வல்கள் சம்பந்தமான ஞாபகம்**


(Semantic Memory)- பெயர்கள், காரண காரியங்கள் போன்றவற்றை ஞாபகம் வைத்தல்

**2. நிகழ்வுகள் சம்பந்தமான ஞாபகம்**

(Episodic Memory) நிகழ்வுகளை ஞாபகம் வைத்தல்

உ+ம் -பரிசளிப்பு விழாவில் பரிசு பெற்றமை

**உள்ளான ஞாபகச்தி**
**(Implicit memory)**




எம்மையறியாமலே தொழிற்படும் ஞாபக சக்தி இதுவாகும். எமது ஆற்றல்களும் செயன் முறைகளுமாகும் இவ்வாறே பதிவாகின்றன.

உதாரணம்: வாகனம் ஓட்டுதல், வாத்தியக் கருவிகளை இசைத்தல். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா
## சிறப்பு மலர்-20.12.2014


# After O/L or A/L
## தகவல் தொழில்நுட்ப, ஆங்கிலக்கல்விக்கு...

**Professional IT Courses**
- Diploma in Information Technology
- Diploma in PC Application
- Diploma in Office Automation
- Dip. in Computerized Accounting
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip.in Video Production & Multimedia
- Diploma in Hardware Engineering
- Tally Accounting ,AutoCAD
- Programming - JAVA, C, C++, VB.NET

**DMI COMPUTER EDUCATION**



**English language Courses**

**Spoken English** Veta Fluency Diploma

ஆங்கிலம் பேசுவதற்கு உத்தரவாதம்
யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட
ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி

**IELTS**
British Council - IELTS பரீட்சைக்கு நீங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் தோற்ற விரும்பின் பதிவுகளை DMI இன் எந்தகிளையிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- ☒ Latest training materials. ☒ Skills development in all four categories.
- ☒ Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

DMI is the IELTS Registration center for the BRITISH COUNCIL

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு I - 24/ 12 /2014 9.30 am
பிரிவு ii - 29/ 12/2014 9.30 am

**முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு**
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம்.


# DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113,கன்னாதிட்டி வீதி, | M.M.V.வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக). | No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகில்) |
| Tel.:021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |



வலம்புரியின் 15 வது ஆண்டு நிறைவடைவதையிட்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

**காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டயாழ். இணைப்பாளராகிய புதிய உயர்கல்லூரி நிறுவனத்தினூடாக O/L இல் ஐந்துபாடம் சித்தி அடைந்தவர்களும் பட்டதாரி ஆகலாம் என்னும் அரிய வாய்ப்பினை வழங்குகின்றது**



* O/L ல் ஏதாவது ஐந்து பாடத்தினுள் சித்தியிருந்தால் அடிப்படை நிலைக்கல்வி (Foundation) யினை இரண்டு வருடங்களில் நிறைவு செய்து 2 1/2 வருடங்களில் BA, BCom, BSc, BBA ஆகிய நீங்கள் விரும்பிய துறைகளில் ஒன்றினை தெரிவு செய்து பட்டதாரியாக முடியும்.
* A/L ல் ஒருபாடம் சித்தி அடைந்தவர்களும் சித்தி இல்லாதவர்களும் (Foundation) அடிப்படை நிலை கல்வியின் ஒரு வருடத்தினை மாத்திரம் பூர்த்தி செய்து மேற்குறிப்பிட்ட துறைகளில் ஒன்றினை தெரிவு செய்து பட்டதாரி ஆகும் வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.
* A/L ல் முழுமைச் சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் நேரடியாக BA, BCom, BSc, BBA ஆகிய பட்ட நெறிகளில் ஒன்றினை தெரிவு செய்து கொள்ள முடியும்.
* BA, BCom, BSc, BBA ஆகியவற்றிக்குரிய விரிவுரை ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
* அடிப்படை நிலைக்கல்விக்குரிய விரிவுரைகள் ஆரம்பம் – 03.01.2015 காலை 8 மணி
* உயர் பட்டப்படிப்புகளாகிய MA, MCom, MSc, MBA, PG Dip ஆகியவற்றுக்குரிய பதிவுகளும், பரீட்சைகளும் காமராசர் பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட யாழ். இணைவு நிறுவனமாகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.

மேற்கூறப்பட்ட பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலை மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

மற்றும் எமது நிறுவனத்தினூடாக யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகத்தின் BA, BCom க்குரிய விரிவுரைகளும் மேலதிக தகைமைக்குரிய AAT க்குரிய விரிவுரைகளும் , அரச வேலைக்கான போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்களும் சிங்கள வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

* விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.

யாழ்.இணைப்பாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
தொலைபேசி இல : 021 222 8148

புதிய உயர்கல்லூரி – ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா

## சிறப்பு மலர்-20.12.2014



menus
magazines
flyers
invitation cards
posters
brochures
letter heads
business cards
Lables
Leaflets
Stickers
boxes &
packaging
event tickets
digital name boards
books
calendars
tags
certificates
t shirt
profiles
banners

PRINTING

We Print Miracles

Our excellent customer service and high quality printing make us the most reliable printing partner for all the projects you need done "right now".

உங்கள் தேவைகளை
எமது தேர்ச்சி மிக்க வடிவமைப்பாளர்களால்
உங்களுக்கென்று தனித்துவமாக வடிவமைத்து
எமது உயர்தர பிறிண்டிங் சேவையினை
பெற்றுக் கொள்ளுங்கள்.




ideaS PRINTERS

தொடர்பு : முஜீன்நாத் (முஜீன்)
All kind of Offset Printing & Digital Printing

No. 7/3, Ratnam Avenue, K.K.S Road, Jaffna. : 021 221 2505 / 077 636 6860 : ideaslanka@gmail.com


16 வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் வலம்புரியே
இன்னும் பல்லாண்டு காலம் நீ வாழ்க !

Saraswathy Hall
Rajah Cream House



WWW.SARASWATHYHALL.COM
saraswathyhall_rajah@live.com
Proprietor
P.T.S.Shanmugananthan
Mobile : 077 923 4176

Tel : 021 320 7369
021 222 1678
#37, Sir Pon. Ramanathan Road, Jaffna.
(Near narchimarkovil Temple)






நாவல் கோப்பி
(நீரிழிவு நோயாளிகளுக்கானது)

Naval Coffee

நீரழிவு நோயாளிகள் தாங்கள் உபயோகிக்கும் மருந்துகளுடன் நாவல் கோப்பியை காலை, பிற்பகல், இரவு தேநீர், கோப்பி பாவிப்பது போன்று பாவித்து வரும் போது 2 வாரங்களில் உங்கள் குருதியில் உள்ள குளுக்கோசின் அளவு ஆச்சரியப்படத்தக்க விதத்தில் குறைந்து காணப்படும். பின் குளுக்கோசின் அளவு ஆச்சரியப்படத்தக்க விதத்தில் குறைந்து காணப்படும். பின் குடும்ப வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய மருந்துகளின் அளவினை குறைத்துப் பாவிக்கலாம்.

கோப்பியோ, தேயிலையோ மற்றும் இரசாயனப் பொருட்கள் கலக்கப்படாதது. நவீன ஆயுர்வேத தொழில்நுட்ப உதவியினால் நன்கு குடிப்பதற்கு உரிய முறையில் செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு மருத்துவ ரீதியாக குருதிக்குளுக்கோசு, சிறுநீரில் உள்ள குளுக்கோசு, நுண்ணிய அல்புமின், குருதியில் உள்ள கொலஸ்ரோல் போன்றவற்றைக் சிறப்பாக குறைப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாவல் கோப்பியை ஒரு முறை உபயோகித்து பலன் பெறுவீர்கள்.

நாவல் கோப்பியை பெற்றுக்கொள்வதற்கு ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர், இல 65 கே.கே.எஸ் வீதி, கொக்குவில். தொலைபேசி 0778201195, 0750413579, 0212222537 : e mail : gsritharan09@gmail.com தொடர்பு கொள்ளவும். தபாலில் அனுப்பி வைக்கும் வசதியும் செய்யப்படும். ஒரு 100 கிராம் பக்கற்றின் விலை 250 ரூபாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் முக்கியத்துவமும் ஊடகத்துறையின் பங்களிப்பும்





பேராசிரியர் கு.மிகுந்தன்
பீடாதிபதி, உயர்பட்டப் படிப்புக்கள் பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**நா**டொன்றின் அபிவிருத்தி அந்நாட்டு மக்களது சராசரி கல்வியறிவிலேயே தங்கியிருக்கின்றது. இந்த விடயம் பலமட்டங்களில் தர்க்கிக்கப்பட்டாலும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் வரலாற்றை மீட்டுப் பார்த்தால் இதிலுள்ள உண்மை புரியும். அதிலும் உயர்கல்வியென்பது அறிவு விருத்திக்கு தூண்டலாகவும், துணையாகவும் இன்னும் துரித அபிவிருத்திக்கான அடித்தளமாகவும் இருப்பதனை நாம் வளர்ச்சியடைந்த நாடுகளின் வளர்ச்சி படிநிலையை ஆராய்ந்தறிந்து கொள்ளலாம். கல்வியினது மேன்மையினை கருத்திற்கொண்டு அதனை அனைத்து மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக செய்தலே நாட்டினது அபிவிருத்தியின் அடித்தளம் எனலாம்.

**'கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு'** என்னும் சொற்பொதிக்குள் அடிங்கியுள்ள அர்த்தங்கள் ஏராளம். எமது தேசத்தில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளையும் தனது கண்ணைத்திறந்து முதன்முதலாக உலகத்தைப் பார்க்கும் போது கொண்டிருக்கும் எதிர்பார்ப்புக்களை அதனது கல்விக் கண்ணைத் திறந்து கொடுக்கவேண்டியது நாம் எல்லோரினதும் கடமையாகும். கல்வியானது எந்த ஒரு பிரஜைக்கும் கிடைத்தற்கரிய பொக்கிஷமாக இருக்கவேண்டும். தேசமெங்கும் வறுமையை ஒழிப்பதற்கு கல்வி மிக முக்கியமானதாகும். குறிப்பாக இளையோரிடையே புத்தாக்கத்தையும் கண்டுபிடிப்புக்களையும் உத்வேகத்தையும் உள்ளீர்ப்பதற்கு கல்வி அவசியமானதாகும். மேலும் கற்றவர்கள் மூலமாகவே தொழிற்றுறை அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்.

அனுபவமூடான கற்றலினால் பலவித நன்மைகள் உண்டு. தொழிற்றுறையை சிறியளவில் உருவாக்குவதற்கு ஆதாரமாக கற்றல் கைகொடுக்கும். அதில் கிடைக்கும் அனுபவம் அத்தொழிற்றுறையை மேலும் விருத்தி செய்ய உதவும். உலகில் தொழிற்றுறையில் மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னுக்கு நிற்கும் நாடுகளின்வரலாற்றில்கல்வியின்ஆளுமை வெளித் தெரியும். எமது நாட்டில் கல்வியின் பயன்பாடும் குறிப்பாக உயர்கல்வியின்பங்களிப்பும்முழுமையாக தொழிற்றுறை சார்ந்து இன்னும் தொழில்வாய்ப்புக்களை உருவாக்க முனைப்பு பெற வேண்டியது அவசியமாகும்.

மழலைப் பருவத்திலிருந்து கல்வி கற்றலுக்கான பொறிமுறைக்குள் அனுபவக் கற்றல் முக்கியத்துவம் பெறுகின்றது. தன்னைச் சூழவுள்ள சுற்றாடலைப் புரிந்துகொண்டு அதற்குள் தன்னை இயைவாக்கி வாழத் தலைப்படுவதற்கான கற்றல் பொறிமுறையை சுயமாக கற்றலாக அடையாளப்படுத்தியிருக்கின்றார்கள். அதிலும் மாணவர்களை மையப்படுத்திய கற்றல் (Student Centered Learning) என்னும் அடையாளப்படுத்தலில்



வெறுமனே புத்தகங்கள் மட்டும் கற்றலுக்கு பயன்படுத்தப்படுவதில்லை. கற்றலுக்கான தேடலில் அறிவை இன்னும் தகவலை வழங்கக்கூடிய அனைத்தும் அடங்கும். இவற்றில் மிகமுக்கியமானது ஊடகமாகும். வயது, பால், இனம் மற்றும் மொழி வேறுபாடின்றி குழுவாக கற்றல் பொறிமுறை சிறந்ததென ஆய்வாளர்கள் எடுத்தியம்பியிருக்கின்றார்கள். இவ்வாறான கற்றலுக்கான வழித்தடத்தில் ஊடகங்களின் பங்களிப்பு பல்துறை சார்ந்து முக்கியத்துவம் பெறுகின்றது. மேலும் வழக்கமான வகுப்பறைக் கல்வி கற்றலில் மாணவர்கள் மகிழ்ச்சியாக கற்பது அரிதாக காணப்படுகின்றது. இதற்கு காரணம் கற்பிப்பவரின் திறமையும், கற்பிக்கப்படும் முறையும், அதிலடங்கும் விடயங்களும் இன்னும் கற்கும் சூழலும் ஆகும். கல்வி கற்பிப்பவர் வெறும் இயந்திரமாக தனது புலமையை காட்டிவிட்டுப் போவதில் மாணவர்களால் கற்பிப்பவை அனைத்தும் முழுவதுமாக கிரகிக்கப்படுவதில்லை. மாறாக கற்பவரின் நிலையறிந்து தன்னுடைய கற்பிக்கும் ஆற்றலை திறமையை புத்திசாதுரியமாக பயன்படுத்தி மாணவரை கற்பிக்கும் விடயத்தினை முழுமையாக விளங்கிக் கொள்ள தூண்டவேண்டும். இதற்கு திறமை அவசியமாகும். கற்பிக்கும் திறனில்லாத ஒருவர் எவ்வளவு அறிவாளியாக இருந்தும் பிரயோசனமில்லை. மாணவரை தன்னுடைய கற்பித்தலை கிரகிக்க தூண்டும் பல திறமை வாய்ந்த ஆசிரியர்கள் எம்மிடமிருக்கின்றார்கள். கற்பிக்கும் திறமையற்ற ஒருவரிடம் கற்கும் மாணவர்கள் அதேபோலவே தம்மையும் வளர்த்துக் கொள்ள முயல்கின்றார்கள் என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

இந்த குறைபாடுகளை ஊடகத்துறை நிவர்த்திக்க முடிவதால் மாணவர்களின் நாட்டம் ஊடகத்துறையின் பால் அதிகமாக ஈர்க்கப்படுகின்றது. பல்சுவையான அம்சங்களினூடாக பரந்துபட்ட அறிவை அனுபவ அறிவை வழங்கக்கூடியதாக ஊடகத்துறை தற்போது பரிணாமம் பெற்றிருப்பது எமக்கு கிடைத்த அரிய பொக்கிஷமாகவே கருதவேண்டும். வெறுமனே எழுத்தில் வாசித்தறிந்ததை காட்சியூடாக காணும் வாய்ப்பு ஊடகத்தினூடாக கிடைத்திருக்கின்றது. உலக நடப்புகளை நொடிப்பொழுதில் அனைத்து மக்களும் அறிய வைத்திருப்பதில் ஊடகத்துறையின் பங்களிப்பு அளப்பரியது. ஆனால், அதனை மக்களை தூண்டிவிடவும் திசைதிருப்பவும் பயன்படுத்தும்போது குறிப்பிட்ட ஊடகத்துறையின் பால் நாட்டம் குறைவடைகின்றது. இதனை ஊடகங்கள் அறிந்துணர்ந்து கொண்டால் அவர்களால் அளப்பரிய சேவையினை மக்களுக்கு சிறப்பாக வழங்க முடியும். பத்திரிகை ஊடகங்களுக்கு தனிப்பட்ட மதிப்பும் தனித்துவமும் இருக்கின்றது. கல்விசார் சிறப்பம்சங்கள், புதிய தகவல்கள், இன்னும் நுண்ணறிவினை விருத்தி செய்யும் மற்றும் பரீட்சித்து பார்க்கும் அம்சங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பது அதனது சிறப்பாகும்.

உலக நடப்புகள் குறிப்பாக நாடுகளின் சிறப்பியல்புகள், அங்கே நடைபெறும் முக்கியமான நிகழ்வுகள், விஞ்ஞான தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, கல்விக்கான வசதிவாய்ப்புக்கள், உயர்கல்விக்கான வழிகள், அனுமதிகளும் புலமைப்பரிசில்களும், தொழில்வாய்ப்புக்கள், கலகங்கள், திறமைகள், உலகளாவிய விளையாட்டுக்கள் என நீண்டு கொண்டே போகின்றது. இதில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி, தற்போது இணையம் என பலவகைகள் இருக்கின்றன. இவற்றில் பத்திரிகைகளில் பணி மகத்துவமானது.

உயிரியல்துறையில் நுண்ணாங்கிகளை வளர்ப்பதற்காக பயன்படுத்தும் பதார்த்தத்திற்கும் ஊடகம் எனவே அழைக்கப்படுகின்றது. அந்த ஊடகத்திற்கும் இக்கட்டுரையில் குறிப்பிடுகின்ற ஊடகத்திற்கும் ஒத்தியல்புகள் ஒன்றே. நுண்ணாங்கிகளை வளர்ப்பதற்காக பயன்படும் ஊடகம் அமில கார தன்மையற்றதாக சமநிலையுடையதாக அதாகப்பட்டது இங்கே பக்கசார்பற்றதாக, ஒளியை ஊடுபுகவிடக்கூடியதாக அதாகப்பட்டது இங்கே ஒளிவுமறைவின்றி, மணம், நிறம், சுவையற்றதாக அதாகப்பட்டது இங்கே எதுவுமே இல்லாதிருப்பது போலிருந்தும் தன்னை நோக்கி கவருவதை, ஊடுபுகவிடும் தன்மையுடையதாக அதாகப்பட்டது இங்கே பலதரப்பட்ட மக்கள் உள்வாங்கப்படும் தன்மையை, வளர்ச்சிக்குதவக் கூடியதாக அதாகப்பட்டது இங்கே மக்களின் நன்மையை கருத்தில் கொண்டதாக இருக்கவேண்டும். இவையனைத்தும் இங்கே குறிப்பிடுகின்ற ஊடகத்துறைக்கும் இருக்கவேண்டும். சொல்லொன்றாகி அது வழங்கும் இடங்கள் பலவானாலும் அதிலுள்ள இயல்புகளனைத்தும் ஒன்றென்று காணீர்.


மேற்குறிப்பிட்ட இயல்புகளை தன்னகத்தே கொண்ட நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் எங்கள் நாளிதழாம் வலம்புரி இதற்கு உதாரணமாகும். மக்களுக்கான செய்திகளை விரைந்து எடுத்துச்செல்லும் பணிக்கு மேலாக மக்களை முன்னோக்கிய பாதையில் முன்னுதாரணமாக பயணிக்க தூண்டிடும் செய்திகளுக்கு (Possitive news) முக்கியத்துவம் கொடுக்கும் பாணி சிறப்புக்குரியது. ஒருவர் காலையில் எழுந்தவுடன் மனதில் மகிழ்ச்சிக்குரிய விடயங்களில் முதன்முதலாக முகம் முழிக்க விரும்புவர். ஆனால் அவ்வப்போது வரும் மரணவீட்டு செய்தியென்றாலும் தினமும் அதிலேயே முழிக்க விருப்பட மாட்டார். இந்த தார்ப்பரியத்தை தினமும் செய்தி சொல்ல எம்மை நோக்கி ஓடிவரும் தினசரிகள் கடைப்பிடிக்க வேண்டும். திருவிளையாடலில் தருமி சொல்லிச்சென்ற வரிகள் இதில் நன்றாக பொருந்தியிருக்கின்றது. **பாட்டெழுதி பெயர் வாங்கும் புலவர்கள் இருக்கின்றார்கள், குற்றங்கண்டே பெயர் வாங்கும் புலவர்களும் இருக்கின்றார்கள். இதில் நீர் எந்த இரகத்தைச் சார்ந்தவர்**-என வினவுது எதற்கோ சொல்லியிருந்தாலும் இங்கும் அது நன்றாகவே பொருந்துகின்றது.

வலம்புரியின் கொண்ட கொள்கையும் அதற்கு மேலாக மக்களுக்கு எடுத்துச்செல்லும் செய்திகளின் தன்மையும் தரமானதாக, தருணத்திற்கேற்ற செய்திகளாக, தமிழை வளர்த்து அரும்பணியாற்றி வருவதற்கு வலம்புரி நல்லதொரு உதாரணமாகும். வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் பலரையும் வாசிக்கத் தூண்டுவது அதன் சிறப்பை வெளிக்கொணர்வதற்கு சான்றாகும். அகவை பதினைந்தில் காலடியெடுத்து வைக்கும் வலம்புரி இன்னும் மேலும் வளரவேண்டும். தேசமெங்கும் பரந்து வாழும்தமிழ்மக்களுக்கான செய்தியை தினமும் எடுத்துச்செல்லும் அரும்பணியை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். பதின்ம வயதில் வயதிற்கு வரும் மங்கைபோல வலம்புரியாளும் புதுப்பொலிவு பெற்று அனைவரையும் கவரும் தினசரியாக திகழ எல்லாம்வல்ல இறைவனை எழுதும் இக்கைகள் இருகரங்கூப்பி பிரார்த்திக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சியினர் அவசரப்படுவதற்கு காரணம் இன்னும் சில விக்கெட்டுகளை வீழ்த்துவதற்கே

## அமைச்சர் ஹக்கீம் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

**எங்களை வெளியில் எடுப்பதற்கு பிரதான எதிர்க்கட்சி அவசரப்படுவதன் காரணம், எங்களைப் பயன்படுத்தி இன்னும் சில விக்கெட்டுகளை வீழ்த்துவதற்கே ஆகும். அது மிகவும் பிழையானது. அதற்கு நாங்கள் சோரம் போக முடியாது. அது எங்களைப் பற்றி தவறான பார்வையைக் கொடுக்கும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் கண்டியில் நடந்த கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை உள்வாங்கியதன் பின்னர் ஆற்றிய முடிவுரையில் கட்சியின் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து நான் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறேன்.

ஏனென்றால் எமது மவுசு கூடிக் கொண்டே போகிறது. இன்னும் கொஞ்சம் நாளைக்கு இவ்வாறு நீடிக்குமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

இந்தச் சந்தர்ப்பத்தை தவற விட்டால் இவ்வாறு வேறு காலம் வாய்க்காது. இரண்டு தரப்பினரும் எங்களது ஆதரவுக்காக ஏங்கி நிற்கிறார்கள். நான் மிகவும் நிதானமாக இருக்கிறேன்.

இந்தக் கட்சியை மிகக் கவனமாக இப்போதுள்ள கட்டத்திலிருந்து தாண்ட வைப்பது முக்கியமாகும். இந்த விடயத்தின் உண்மையான பரிமாணத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தக் கூட்டத்தை கூட்டினேன்.

ஏனென்றால், மக்கள் மிகவும் ஆத்திரத்தோடு இருக்கிறார்கள். எமது போராளிகள் மிகவும் ஆவேசத்தோடு இருக்கிறார்கள். இது வொரு பலமான இயக்கம். வெறும் அரசியல் அதிகாரத்திற்கு பின்னால் அள்ளுண்டு போகும் இயக்கமல்ல.

பிச்சை வேண்டாம். நாயைப் பிடி என்று போனதால் தான் எங்களுக்குத் தலைகுனிவு ஏற்பட்டது.

என்னைப் பொறுத்தவரை எந்த அரசாங்கமாக இருந்தாலும் அமைச்சுப் பதவிகளை எடுக்காமல் ஆதரவு அளிப்பது கட்சிக்கு மிகப் பெரிய கௌரவமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அமைச்சுப் பதவிக்காக பதிலளிப்பது மிகவும் கேவலமானது எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (இ-5)

# முன்னாள் கிரிக்கெட் வீரரின் வீட்டில் கொள்ளையிட்ட நபர் கைதானார்!

(கொழும்பு)

முன்னாள் கிரிக்கெட் வீரர் அரவிந்தடி சில்வாவின் வீட்டில் கொள்ளையிட்ட நபர், கொழும்பு-கோட்டை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு நாணயங்களுடன் இருந்த குறித்த நபர் மீது ஏற்பட்ட சந்தேகம் காரணமாக அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, கொள்ளையில் ஈடுபட்டமை தொடர்பில் அவர் வாக்குமூலம் அளித்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர் வசமிருந்து பத்து இலட்சத்துக்கும் அதிகமான பணம் பொலிஸாரல் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு - 07 பகுதியைச் சேர்ந்த இவர் மதுபோதைக்கு அடிமையான ஒருவர் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள முன்னாள் கிரிக்கெட் வீரர் அரவிந்தடி சில்வாவின் வீட்டில் இருந்த 40 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் கொள்ளையிடப்பட்டதாக கடந்த ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நாடாளுமன்றுக்கு அறிவிக்காமல் வடக்கில் சட்டவிரோதமாக சிங்களக்குடியேற்றங்கள்

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறும் சட்ட விரோத சிங்களக் குடியேற்றங்கள் மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் அறிவிக்காமல், மீள்குடியேற்ற அமைச்சுக்கும் தெரியாமல் மிகவும் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க குற்றம்சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் , நான் அதிகமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பணியாற்றியுள்ளேன். வவுனியா தெற்கு பிரதேசசபை பகுதிக்குச் சென்றபோது, அங்குள்ள மிகவும் நல்ல இளைஞர் ஒருவர், ஏன் வெளியிலிருந்து கொண்டுவந்து இங்கு குடியேற்றுகின்றீர்கள் என்று கேட்டார். இது குறித்து மீள்குடியேற்ற அமைச்சிடம் நான் விசாரித்தபோது, இது எமது அமைச்சால் இடம்பெறும் செயல் அல்ல. வேறு நபர்கள்தான் இதைச் செய்கின்றனர் என அமைச்சிலிருந்து தகவல் கிடைத்தது. நாமல் கம என வடக்கில் ஒரு கிராமத்துக்கு பெயரிடப்பட்டுள்ளது. எதற்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டுள்ளது? அது தவறு. நாமலுக்கு என்ன நடந்தது? வடக்கிலுள்ள அனைவரும் இது தவறு எனக் கூறுகின்றனர். அங்குள்ள சிங்கள மக்களும் இதைத்தான் கூறுகின்றனர்.



மேலதிக இடங்களை எமது பிள்ளைகளுக்குக் கொடுங்கள். அல்லது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வழங்குங்கள். ஏன் வெளியிலிருந்து மக்களைக் கொண்டுவந்து குடியமர்த்துகின்றீர்கள் என்று கேட்கின்றனர்.

மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் அறிவிக்காமல் மிகவும் இரகசியமான முறையில் இது செய்யப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வாதத்துக்கு மருந்து

ஒரு ஊரிலே பெரியவர் இருந்தார். அவர் பார்வையிழந்தவர். வாதாடுவதிலே சாலச் சிறந்தவர். தர்க்கத்திலே மேதை.

அவரிடம் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர் சொன்னாா்;

"சூரியன் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சந்திரன் ஒளியைக் கொடுக்கிறது. விண்மீன்கள் மின்னி மின்னி பிரகாசிக்கிறது. வெளிச்சம் இருப்பதால்தான் நமக்கு எவ்வளவோ உபயோகமாக இருக்கிறது" என்றார்.

உடனே பார்வை இழந்த அந்தப் பெரியவர்; வெளிச்சம் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?" என்றார்.

"உண்மையிலேயே ஒளி இருக்கிறது!" என்றார்.

"நான் அதை நம்பமாட்டேன்" என்று கூறினார்.

"சூரியன்... சந்திரன்... நட்சத்திரம்... இவையெல்லாம் இருக்கிறதாகச் சொன்னார்கள்"

அதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால்... அதையெல்லாம் என்னை சற்றுத் தொட்டுப் பார்க்க விடுங்கள்" என்றார்.

"அவற்றினை தொட்டு அறிய முடியாது" என்றார்.

"அப்படியென்றால்... முகர்ந்து அறிகிறேன். முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகிறதா... என்று பார்க்கிறேன்" என்று சொன்னார்.

"அதுவும் முடியாது" என்றார்.

"சரி... அதுவும் முடியவில்லையென்றால், அந்த வெளிச்சத்திலே சிறிதளவு எடுத்து என் கையிலே கொடுங்கள். வாயிலே போட்டு விழுங்கி ருசித்துக் கொள்கிறேன்" என்றார்.

அவரை எந்த வகையிலேயும் ஒப்புக்கொள்ள வைக்க முடியவில்லை.

அவரைச் சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் குழப்பமடைந்தார்கள்.

"என்ன... நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா?" என்றார்.

என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் "மாயை" என்கிறேன். நீங்கள் என்னை அவமானப் படுத்துவதற்காக இப்படிச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

ஏதோ உங்களுக்கெல்லாம் "பார்வை" இருப்பதாகவும்... அது எனக்கு இல்லை என்று சொல்லி நீங்கள் அவமதிக்கிறீர்கள்" அப்படியென்றார் தர்க்க சாஸ்திரத்திலே மேதையான அந்தப் பெரியவர்.

சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்... "வெளிச்சம் இருக்கிறதை இவர் நம்ப வேண்டும்... இவரை நம்ப வைக்க வேண்டுமென்றால்... அது புத்தராலேதான் முடியும்" என்று கூறினார்கள்.

"சரி அவரிடம் போவோம்" என்று எல்லோரும் முடிவெடுத்து போய்ச் சேர்ந்தார்கள்.

புத்தரிடம் விபரத்தை எடுத்துரைத்தார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக்கிறேனோ அப்படித்தான் அவரும் நினைக்கிறார். எதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தால்தான் நம்பமுடியும்.

"ஒளியை அனுபவித்து அறியாத வரையில் அது இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரிதான்" என்று கூறினார்.

அதன்பின் சொன்னார்; "உங்களைக் குணப்படுத்தி விடலாம்... உங்களுக்குத் தேவை ஞானி அல்ல... மருத்துவர்தான்" என்றார்.

ஒரு வைத்தியரிடம் அழைத்துக்கொண்டு சென்றார்கள். பார்வை கிடைக்கப் பெற்றது... வெளிச்சத்தைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். புத்தரை வணங்கினார்.

"நான் வாதம் செய்தேன்... நீங்கள் எதிர்வாதம் செய்யவில்லை. என்னுடைய பிரச்சினை மருத்துவரால்தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள்" என்றார்.

மனித குலத்தின் மிகப் பெரும்பாலானவர்கள் நிலைமை இதுதான் அப்படியென்கிறார் ஓஷோ!

இந்தக் காலத்திலே சில பேர் கண்களைத் திறந்து கொண்டு சில காரியங்கள் செய்வார்கள். அது பிழையென்பது அவர்களுக்குப் பின்புதான் புரியும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரி 8 வரை விடுமுறையில்லை

தபால் திணைக்களத்தில் அனைத்து ஊழியர்களினதும் விடுமுறை இரத்து செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள ஜனவரி 8ஆம் திகதிவரை இந்த விடுமுறை இரத்து செய்யப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைவாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நூல் வெளியீடு

முருகேசு ரவீந்திரன் எழுதிய நிலவு நீரினுள் தெரியும் என்னும் சிறுகதைத் தொகுதி மற்றும் அனைத்தும் என்னும் படைப்பிலக்கியம்பற்றியபார்வை ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் சுன்னாகம் வாழ்வகத் தலைவரும், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமாகிய ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ

## அரசியல் கருத்தரங்கு

"ஜனாதிபதி தேர்தலும் மக்கள் எதிர்நோக்கும் சவால்களும்" எனும்தலைப்பிலான பகிரங்க அரசியல் கருத்தரங்கு புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக்கட்சியின் வடபிராந்திய குழுவால் நாளை ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (இ-5)

# காணி அதிகாரம் வடக்கிற்கில்லை



## மைத்திரி என்ன செய்யப் போகிறார்; கேட்கிறார் அமைச்சர் ஜி.எல். பீரிஸ்

**வடக்கு மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்து மகிந்த அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. மாகாண சபை களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது பொருத்தமாகாது. இது வடக்கிற்கும் பொருந்தும். எனவே இது தொடர்பில் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.**

13 ஆம்திருத்தச்சட்டம்தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர்மைத்திரிபாலசிறிசேனவின் நிலைப்பாடு என்ன என தெளிவுபடுத்த வேண்டும்.

13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி முழு அளவில் வடக்கு மாகாணசபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவாரா? இல்லையா? என்பதனை தெளிவாக அறிவிக்க வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் செய்து கொண்டுள்ள இரகசிய உடன்படிக்கை பற்றிய தகவல்களை அம்பலப்படுத்த வேண்டும். வடமாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

எதிர்வரும் காலங்களிலும் அதேவிதமாக சட்டங்கள் அமுல் படுத்தப்படும். மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது பொருத்தமாகாது. இதுவே அரசாங்கத்தின் நிலைப்பாடாக அமைந்துள்ளது. மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பொருத்தமற்றது என அரசாங்கம் அறிவித்த நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

## 14 பிடிவிறாந்துகளுடன் சுற்றித்திரிந்த ஜப்பான் பிரஜை பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

ஜப்பானில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி, இளைஞர்களிடம் பெருந்தொகையான பணம் மோசடி செய்ததாக கூறப்படும் 80 வயதான ஜப்பான் நாட்டு பிரஜையை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

அம்பாந்தோட்டை ஸ்ரீபோபுர பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்தே இவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபருக்கு எதிராக இதுவரையிலும் 14 பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதான நபரிடம் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் நீதிமன்றில் சந்தேக நபரை ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

## கட்சியிலிருந்து ஹிருணிகா நீக்கம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து எதிர்க்கட்சியில் இணைந்து கொண்ட ஹிருணிகா பிரேமச்சந்திரவின் அங்கத்துவத்தை ஆளும் கட்சி இரத்துச் செய்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த கடிதத்தை ஹிருணிகா தனது பேஸ்புக்கணக்கில் சேர்த்துள்ளார். நாங்கள் கட்சியை விட்டுசெல்லவில்லை. உங்களது ஊழல் ஆட்சியை விட்டேசென்றோம் என ஹிருணிகா அதில குறிப்பிட்டுள்ளார். (இ-5)

## சாயி பகவானின் பிறந்த தின விழா

மட்டக்குளி, சத்ய சாயி பாபா மன்றத்தினால் ஸ்ரீ சத்ய சாயி பகவானின் 89 ஆவது பிறந்த தின விழா நாளை ஞாயிற்றுக் கிழமை முகத்துவாரம், கோவில் வீதி, இல. 40 இல் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு பிரசாந்தி கொடியேற்றத்துடன் அஷ்டோத்தரபூஜை சாயி பஜனை, சொற்பொழிவு, திருவூஞ்சல் ஆகியன நடைபெற்று பி.ப.12.30 மணிக்கு மங்கல ஆராத்தியும் அதனைத்தொடர்ந்து பிரசாதம் (மதிய போசனம்) வழங்கலும் நடைபெறும். (இ-5)

## பொதுசன வாக்கெடுப்பை நடத்துமாறு இதுவரை எவரும் கோரவில்லை-ரணில்

(கொழும்பு)

தமிழ் மக்கள் தங்களின் அரசியல் தீர்வு குறித்தான விருப்பினை வெளிப்படுத்துவதற்கு பொதுசன வாக்கெடுப்பொன்றினை நடத்துமாறு இலங்கையில் எவரும் கோரவில்லை என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்கொட்லாந்த மக்கள் தங்களின்விருப்பினை வெளிப்படுத்துவதற்கான ஓர் வாய்ப்பாக அமைந்த பொதுசன வாக்கெடுப்பு மாதிரி, இலங்கையின் வடகிழக்கில் பொதுசன வாக்கெடுப்பு நடத்துவீர்களா? என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மேற்சபை உறுப்பினர் உசா ஸ்ரீஸ்கந்தராஜா டுவிட்டரில் கேள்வியொன்றினைத் தொடுத்திருந்தார்.

இதற்கு பதில் அளிக்கும் பொழுதே இவ்வாறு எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வில் வட-கிழக்கு மக்கள் மற்றும் புலம்பெயர் மக்கள் பங்கு கொள்ளும் பொதுசன வாக்கெடுப்புக்கான கோரிக்கை யினை, அனைத்துலகத்திடம் முன்வைக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது. (இ-5)

## மைத்திரிபாலவின் ஆட்சியில் எரிபொருள் வரிகள் நீக்கம்

மைத்திரிபாலவின் புதிய அரசாங்கத்தின் கீழ், பெற்றோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள் நீக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். அவிசா வளையில்நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெற்றோலுக்கு தற்போது 52 ரூபா வரியும் டீசலுக்கு 17 ரூபா வரியும் விதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மைத்திரிபால ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதும் இந்த வரிகள் நீக்கப்படும் என்றும் ரணவக்க குறிப்பிட்டார். இன்று நாடு கசினோ, ஹெரோயின், சிகரெட் போன்ற ஐந்து தரப்பின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ளது.

இவற்றை இல்லாதொழிக்க மைத்திரியின் ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ரணவக்க தெரிவித்தார் (இ-5)

## சத்சங்கம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தின் சத்சங்கம் நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆன்மீக அறிவுரைகளை சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் பங்குகொண்டு திரிமூர்த்திகளின் அருளைப் பெறுமாறு நிலையத் தலைவர் சுவாமி சர்வரூபானந்த கேட்டுள்ளார்.(இ-5)




## அரசிலிருந்து விலகிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் முரண்பட்ட கருத்து

நுவரெலியா மாவட்டத்தில் தெரிவான மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் அரசாங்கத்திலிருந்து விலகியமைக்கு முரண்பாடான காரணங்களை வெளியிட்டுள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க, தமிழ் பெருந்தோட்ட புறங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதாகவும் சிங்கள கிராமங்களுக்கு அந்த ஒதுக்கீடுகள் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் எதிர்க்கட்சியில் இணைந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திகாம்பரமும், ராதாகிருஸ்ணனும் பெருந்தோட்டப் புறங்களுக்கு உரிய நிதியொதுக்கீடுகள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

எனவே ஆளும் கட்சியில் இணைந்திருந்து விலகி எதிரணியில் சேர்ந்த இவர்கள் மூவரின் கருத்துக்களிலும் முரண்பாடுகள் உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்(இ-5)

## சனசமூக நிலைய பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரையும் இப் பொதுக்கூட்டத்திற்க தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்புட்டுள்ளது. (இ-5)

## பாகிஸ்தானியருக்கு தூக்குத் தண்டனை

ஹெரோயின் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான இரண்டு பாகிஸ்தானியர்களுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி 1,560 கிராம் ஹெரோயினுடன் கைதான மெக்மாப்குமா, பஷாட நாசர் ஆகியோருக்கே குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு நேற்று முன் தினம்மரண தண்டனை விதிக் கப்பட்டது. (இ-5)

## மலர் வெளியீடு

யாழ்.காரைநகர் மணிவாசகர் சபை பவள விழா, மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நூல் வெளியீட்டு விழாவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ வி.ஈஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஆசிரியுரை வழங்க வுள்ளனர். (இ-5)

## ஐ.தே.கட்சிக்கு தாவினர் இருவர்

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முன்னாள் மேல்மாகாணசபை உறுப்பினரும் ஹொரண பிரதேசசபையின் தலைவருமான ஏளிஹித்துல்கொட மற்றும் புலத்சிங்க, பிரதேச சபையின் முன்னாள் தலைவர் துஷித்த குலரத்தன ஆகியோர் பொது எதிரணியில் இணைந்துள்ளனர்.

இங்கிரிய நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது எதிரணிகளின் பிரசாரக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் இணைந்தனர். (இ-5)

## சான்றிதழ் வழங்கல்

வடமாகாண கல்வி அமைச்சின் ஆங்கில மொழி மற்றும் நாடக போட்டிகளுக்குரிய சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். உடுவில் மகளிர் கல்லூரி வடமாகாண கல்விப் பணிப்பாளர் எ.ராஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்ள வுள்ளார். (இ-5)

## புனர்வாழ்வு நிறுவனத்தின் வருடாந்த நத்தார் விழா


செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன வருடாந்த நத்தார் விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கலட்டியில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தின் கிறிஸ்தவ கழகம் நடத்தும் இந்நிகழ்வில் பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும் என நிறுவன செயலாளர் திருக்கோணேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ

## விமானி மரணம்

அத்துக்கிரிய பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை விழுந்து நொறுங்கிய விமானத்திலிருந்து காயங்களுடன் மீட்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த விமானி நேற்று முன்தினமிரவு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார். விமானப்படைக்குச் செந்தமான ரஷ்ய தயாரிப்பான அன்ரனோவ் -32 ரக விமானம் கட்டுநாயக் கவிலிருந்து இரத்மலானைக்கு பயணித்துக் கொண்டிருந்த வேளை இறப்பர் தோட்டத்தில் விழுந்து நொறுங்கியது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 26

…ஏதோ ஒரு மாசு இருக்கு ஒன் மனசுல.

அது பரம்பரைக்கு நல்லதில்லைப்பா. கடைசியாக கருவாச்சியையும் ஒரு வார்த்த கேட்ருவோம்.

கூப்பிடுங்கப்பா அந்தப் பிள்ளையன்னாரு உருமாப்பெருமாத்தேவரு.

வந்தா கருவாச்சி.

முன்ன இருந்த பயமில்ல அவளுக்கு. கண்ணுல ஒரு ஒளி இருக்கு. கையெடுத்துக் கும்பிட்டா.

யம்மா கருவாச்சி ஒம் புருசன் ஒம் மேல குத்தஞ்சொல்லி வேணாம், வெட்டிவிட்ருங்கன்னு பஞ்சாயத்துல பிராது குடுத்திருக்கான்; ஒம் பக்க நியாயத்த நீ சொல்லு தாயி.

அவ ஒரு பேச்சும் பேசாம அரச மரத்துல அணில் பாத்துக்கிட்டிருந்தா.

நான் வேற என் வாலு வேறன்னு ஒடம்பு அசங்காம வாலமட்டும் என்னா ஆட்டு ஆட்டுது அந்த அணிலு.

புசு புசு புசுன்னு என்னா அழகு அந்த வாலு? யான காது கொடையன்னா அணில் வாலுதான் லாயக்கு.

அவ என்ன சொல்லப் பொறாளோன்னு சபையே அவ வாயப் பாத்திருக்க மரம் ஏறி அணில் வாலத் தொட்டுத் தரையில குதிக்குது அவ மனசு.

எம் மேல ஒரு குத்தமும் இல்லிங்க. இது பஞ்சாயத்துக்கும் தெரியும்?

நாங் கும்புடற சாமிக்குத் தெரியும்.

மத்தபடி கடவுளும் ஊரும் என்ன தீர்ப்புச் சொல்லுதோ கட்டுப்படறேன்.



சாமி அருள் வாக்குச் சொல்ற மாதிரி பேசுறாய்யா கருவாச்சி.

இந்த தெய்வச் செலய வச்சுப் பொழைக் காதவனும் ஒரு மனுசனா?

எப்பவோ யாரோ செஞ்ச பாவத்துக்கு இப்பப் பழி வாங்கறானப்பா இந்தப் பச்ச மண்ண.

பஞ்சாயத்தே சோகங்கட்டிக் கெடக்கு.

ஏம்மா பெரிய மூக்கி... பஞ்சாயத்துல எப்பவும் பிரிக்க நெனைக்காது சேத்து விடத்தான் நெனைக்கும்.

ஆனா இந்தப் பயலோ அத்து விடுங்க, ஆள விடுங்கன்னு புடிச்ச புடியிலயே நிக்கிறான்.

நீ என்னாத்தா சொல்ற.

விக்கி விக்கி அழுதா பெரியமூக்கி.

சல்லுன்னு மூக்குச் சிந்தித் தரையில எறிஞ்சிட்டு முந்தானையில மூக்கத் தொடச்சுக்கிட்டே சொல்றா.

பிள்ள சேந்து வாழணுமேன்னு பெத்த வயிறு பத்தி எரியுது. ஆனா அனுப்பி வச்ச எம் பிள்ள என்னதில்லேன்ன போயிருமோன்னு பயமா வேற கிடக்கு.

இதுக்கு மேல என்ன சொல்லப் போறேன்? பஞ்சாயத்துக்குப் பாத்தியப்படுறேன்.

அம்பலக்கல்லுல ஒக்காந்திருந்த பஞ்சாயத்துப் பெருசுக பெரிசா ரெண்டு மூணு பெருமூச்சு விட்டாக.

யோசித்து ஒதடுபிதுக்கி தலைய அங்கிட்டும் இங்கிட்டுமா ஆட்டிக்கிட்டாக.

பெறகு ஒருதருக் கொருத்தர் காது காது கடிச்சுக்கிட்டாக.

கடைசியா அடித் தொண்டையில ஒரு கனைப்புக் கனைச்சாரு உருமாப் பெருமாத்தேவரு.

அந்தக் கனைப்பு ஒண்ணும் தொண்டையில பிசிறு போறதுக்கில்ல சலசலன்னு சலம்பல் பண்ணிக்கிட்டிருக்கிற சபையை தம்பக்கம் திரும்புற ஒரு சாடை.

சரி வேற வழியில்ல... நெஞ்சுல கல்லக் கட்டிக்கிட்டுத்தான் தீர்ப்புச் சொல்றோம்.

கட்டையன் கருவாச்சி உறவத் தீத்து விட்டுர்றோம்.

இன்னிக்கிருந்து அவுக ரெண்டு பேரும் புருசன் பொண்டாட்டி இல்ல. ரெண்டு பேருக்கும் சேர வேண்டிய பொருள ரெண்டு பேரும் வாங்கிகிட்டு அவுகவுக பொழப்ப அவுகவுக பாத்துக்க வேண்டியது. பிரிஞ்சாலும் நல்லாருங்க.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

…அப்பொழுது உமக்குத் தெரியும் அது எப்படி இருக்கும் என்று!

அவரது யோசனையின்படி செய்வது எவ்வளவு முட்டாள் தனமானது என்று எண்ணிப் பாருங்கள்! அவர் மீண்டும் மீண்டும் அந்த விடயத்தில் ஒரே சிந்தனையில் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

அவரால் எப்படி ஒரு தீர்வைக்

## கவலைகள் இன்றி வாழ்தல்!

காணமுடியும்? நீங்கள் தன்னிச்சையாக இருக்கும் பொழுது உங்களுக்கு எதுவும் ஒருபோதும் ஒருகணம்கூட சவாலாக இருக்காது. நீங்கள் உடனே ஒரு தீர்வுடன் வந்து விடுவீர்கள். நீங்கள் தன்னிச்சையாக இருக்கும் பொழுது எந்த உச்சியிலிருந்தும் சுலபமாகக் குதித்து கீழே வரும் வழியிலேயே உங்கள் இறகுகளைக் காட்டிக் கொண்டு வீடுவீர்கள்.

சொல்லுங்கள்.. ஏதேனும் கேள்விகள்?

ஸ்வாமிஜி எங்கள் வாழ்க்கையில் ஏற்படும் இத்தணை கவலை மற்றும் மன இறுக்கத்திற்கு மூலகாரணம் எது? உண்மையில் இந்தக் கேள்வியே நீங்கள் அதனுள் ஆழமாக பார்க்க விரும்புகிறீர்கள் என்பதைக் காட்டுகிறது. நாம் தொடர்ந்து எல்லாவற்றையும் பற்றி நம்மைச் சுற்றியிருக்கும் மனிதர்களைப் பற்றி நாம் வசிக்கும் இடங்களைப் பற்றி அவ்வப்போது எழும் சூழ்நிலைகள் பற்றி நாம் பின்னபற்றும் வாழ்க்கைமுறை பற்றி ஏதாவது கற்புனைகளை வைத்துக்கொண்டிருக்கிறோம். நாம் தொடர்ந்து விடயங்கள் ஒரு குறிப்பிட்ட வகையில் நிகழவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அல்லது பகல் கனவு காண்கிறோம். ஆனால், உண்மை எப்பொழுதும் இந்த கற்



பனையிலிருந்து மாறுபட்டிருக்கிறது. உண்மைக்கும் நமது கற்பனைக்கும் உள்ள இடைவெளியே நமது வாழ்க்கையில் ஏற்படும் மன இறுக்கத்திற்குக் காரணம்.

நாம் நமக்குள் ஒரு மாய உலகத் தைப் படைத்துக் கொண்டு அதை நிஜத்தில் மெய்யாக்க முடியுமா என்று தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

நமது கற்பனைகள் மிகையாக இருந்தால் உண்மைக்கும் கற்பனைக்கும் உள்ள இடைவெளியும் அதிகமாக இருக்கும் அதனால் மன இறுக்கமும் அதிகமாக இருக்கும்.

நாம் எப்பொழுதும் நமது கற்பனைகள் மெய்யாகிவிடும் என்ற நிலையை நெருங்கிவிட்டதாக நினைக்கிறோம். ஆனால் அங்கு செல்லும் பொழுது நமது கற்பனை இன்னும் கொஞ்சம் வளர்ந்திருக்கும்.

ஆதலால் நம்மால் ஒருபோதும் அதை நெருங்க முடியாது. இது நம்மிடம் ஏமாற்றத்தையும் மன இறுக்கத்தையும் கவலையையும்

### ஆன்மீகம் 110

உருவாக்குகிறது.

உண்மை என்னவெனில் நாம் கற்பனையில் இருக்கிறோம் என்பதுகூட நமக்குத் தெரியாது. நமது கற்பனை அந்த அளவிற்குத் திட்டமான விடயமாகிவிட்டதால் நம்மால் அதை கற்பனை என்றுகூடப் பார்க்க முடியவில்லை.

நாம் அதில் சிக்கிக் கொண்டுவிட்டோம். தெளிவாக இருங்கள். எதிலாவது வேலை செய்வது உங்களுக்கு மனஇறுக்கத்தை உண்டாக்கினால் நீங்கள் நிஜத்தில் வேலை செய்யவில்லை. கற்பனைப் பகுதியில் வேலை செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனைக்குதவாத மீன்கள் அழிப்பு



(விசுவமடு)

முல்லைத்தீவு விசுவமடு சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகளிடமிருந்து பாவனைக்கு உதவாத பழுதடைந்த நிலையில் காணப்பட்ட மீன் வகைகளை அப்பகுதி சுகாதார பிரிவினர் மேற்கொண்ட அதிரடி பரிசோதனை நடவடிக்கையின்போது பறிமுதல்செய்து அழித்துள்ளனர்.

விசுவமடு பகுதி சுகாதார பிரிவினர் நேற்று முற்பகல் 10 மணியளவில் விசுவமடு சந்தைப்பகுதியில் இடம்பெற்ற சுகாதார பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை அங்கு வியாபாரத்திற்கென வைக்கப்பட்ட ஐஸ் கட்டிகள் போடப்பட்ட பழுதடைந்த மீன்வகைகள் 25 1/2 கிலோவினை மீன் வியாபாரிகளிடமிருந்து பறிமுதல் செய்து மண்ணெண்ணெய் ஊற்றி அழித்ததுடன் சம்பந்தப்பட்ட வியாபாரிகளையும் கடுமையாக எச்சரிக்கை செய்தனர்.

இதேபோன்று இன்னொரு தடவை நிகழுமாகில் நீதிமன்றில் உட்படுத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அதிகாரிகளால் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்ட மீன்வகைகள் கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் கிடங்குகள் வெட்டப்பட்டு அதனுள் புதைக்கப்பட்டன. (2)




## போக்குவரத்திற்கு வீதி சீரின்மையால் பேருந்துச் சேவைகள் இடைநிறுத்தம்

(குருமன்காடு)

மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட இரணை இலுப்பைக்குளம் கிராமத திற்கு பயணிக்கும் பிரதான வீதி நீண்டகாலமாக செப்பனிடப்படாமல் சேதமடைந்துள்ளதால் தாம் அதனூடாகப் பயணிக்கும் போது பெரும அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பூவரசன்குளத்திலிருந்து மன்னார் மாவட்டத்தின் இரணை இலுப்பைக்குளம் ஊடாக முல்லைத்தீவின் மல்லாவி வரை ஏ-9 வீதிக்கு சமாந்திரமாக இப்பிரதான வீதி அமைந்துள்ளது. இவ்வீதி பல ஆண்டு காலமாக திருத்தம் செய்யப்படாத நிலையில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றனர்.

சுமார் 26 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாட தேவைக்காக பிற மாவட்டங்களுக்கு செல்வதற்கு தினமும் இவ் வீதியை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில்அவர்களின்நன்மை கருதி இலங்கை போக்குவரத்து சபையினால் பேருந்து சேவைகள் இடம் பெற்று வந்தது. தற்போது பாரிய குழிகள் ஏற்பட்டமையாலும் வீதி சீரின்மையாலும் பேருந்து சேவைகள் இடை நிறுத் தப்பட்டுள்ளன.

தற்போது பெய்து வரும் மழையினை அடுத்து சேறும் சகதியுமாக வுள்ள இவ்வீதியால் பயணிக்கும் மக்கள்பெரும் இன்னல்களுக்கு ஆளாகுவதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ்வீதியிலுள்ள பல பிரதான பாலங்களும் நீண்ட காலமாக திருத்தப்படாமையால் அபாய நிலைமை எட்டியுள்ளதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே வாக்கு கேட்டு வரும் அரசியல் வாதிகள் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி மக்களின் இந்தப் பாரிய பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கைஒன்றைவிடுத்துள்ளனர். (2-250)

## பெய்து வரும் மழை தொடருமாகில் பாவற்குளத்தின் நீர்மட்டம் உயரும்

### வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் எச்சரிக்கை



(வவுனியா)

வவுனியாவில் பெய்துவரும் கடும்மழை காரணமாக பாவற்குளத்தின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. தொடர்ந்து இந்நிலை தொடருமாகில் அதன் வான் கதவுகள் திறக்கப்படலாம் என வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என் சூரியராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் பெய்துவரும் கடும்மழை காரணமாக செட்டிகுளம்-பூவரசன்குளம் ஊடான போக்குவரத்து நடவடிக்கை பாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வவுனியாவில் அண்மைக்காலமாக பெய்த கடும் மழை காரணமாக தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் அதிகரித்திருக்கிறது. இதனால் செட்டிகுளம்- பூவரசன்குளம் போக்குவரத்து பாதை தடைப்பட்டது.

இதேபோன்று நெடுக்குளம்-செட்டிகுளம் வீதியும் வெள்ளம் காரணமாக போக்குவரத்து நடவடிக்கைகள் ஸ்தம்பித்திருந்தன. இதேவேளை பாவற் குளத்தின் நீமட்டம்உயர்ந்துள்ளது.தொடர்ந்தும் மழை பெய்தால் அதன் வான் கதவுகள் திறக்கப்படலாம்.

அதனால் செட்டிகுளத்தில் உள்ள மீடியாபாம், கந்தசாமி நகர், பாவற்குளம் படிவம் நான்கு, மெனிக்பாம் ஆகிய பகுதி மக்களை முன்னெச்சரிக்கையாக இருக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (2)

## கலைஞர்களுடனான கலந்துரையாடல் நாளை

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள கலைஞர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இரண்டாம் குறுக்குத்தெரு, கனகபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக் கல்லூரியின், நிர்வாகத்தின் தலைமையில் நடைபெறும்.

எனவே ஆர்வமுள்ள கலைஞர்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-277)

## பொதுமக்கள் பயனடைந்த நடமாடும் சேவை முகாம்



(குருமன்காடு)

தேசிய அடையாள அட்டையை விரைவாக பெற்றுக் கொடுக்கும் வகையில் நடமாடும் சேவை ஒன்று வவுனியாவில் இன்று இடம்பெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு வவுனியாவில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு விரைவாக அடையாள அட்டையை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் விசேட நடமாடும் சேவை நடைபெற்றது.

தேர்தல் திணைக்களம், ஆட்பதிவுத்திணைக்களம் மற்றும் தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளை கண்காணிக்கும அமைப்பு, அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பும் இணைந்து இந் நடமாடும் சேவையை ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந் நடமாடும் சேவை முகாமுககு வவுனியாவில் நூற்றுக்கணக்கான மக்கள் தமது அடையாள அட்டைகளை பெறுவதற்காக வருகை தந்து சேவைகளை பெற்றனர். (2-250)

## முல்லை. மக்களின் சுயதொழில் வருவாயை மேம்படுத்த பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றோம்

### இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முல்லை.மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் வாழும் மக்கள் சுய தொழில் மூலமாக அதிகளவான வருவாயைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை கருத்திற் கொண்டு பல்வேறு வகையான விசேட பயிற்சி நெறிகளை நடத்தி வருகின்றோம். அத்துடன் மாற்று வலுவிழந்தோர் மற்றும்பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கும் விசேட தொழில் வழிகாட்டல்களையும் வழங்கி வருவதாக இலங்கை கைததொழில் அபிவிருத்தி சபையின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.ரஜனிகாந்த் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் நாம் ஆய்வொன்றினை மேற்கொண்டிருந்தோம். அதில் மாற்றுவலுவிழந்தோர் மற்றும் பெண் தலைமைத்துவ முயற்சியாளர்களின்தேவை அடிப்படையிலான ஆய்வில் சுமார் 300 தொழில் முயற்சியாளர்கள் நேரடியாகவே எங்களிடம் தமது தேவைகளை தெரிவித்திருந்தார்கள்.

அதற்கேற்றவாறு நாம் எமது திட்டங்களை மேற்கொண்டு தேவையான பயிற்சி நெறிகளை வழங்கியிருந்தோம். தற்போதும் வழங்கி வருகின்றோம் சுயதொழில் அலகுகளை உருவாக்குதல், புதிய முயற்சிகளை மேம்படுத்தல், தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் என்பனவற்றை பிரதானமாக முன்வைத்து விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம்.

அது மட்டுமின்றி தொழில் நுட்ப பயிற்சி நெறிகள், சிறு வியாபாரம் மற்றும் முகாமைத்துவம் வியாபாரத்திட்டங்களைத் தயாரித்தல், கடனுதவிகளைப் பெற்றுக் கொடுத்தல, கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளர் கலந்துரையாடல், கழிவு உலோக சேகரிப்பும் உற்பத்தியாளர்களிடையே பங்கிடலும் போன்ற பல்வேறு தொழில் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றோம்.

இதேவேளை மாற்றுவலுவிழந்தோர் மற்றும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு தொலைபேசி திருத்துதல், எல்.ஈ.டி மின்குமிழ் உற்பத்தி செய்தல், உணவு உற்பத்தி, ஆடை வடிவமைப்பு, தயாரிப்பு மற்றும் பெண்களுக்கான கைப்பை, பாடசாலைப் பைகள் தயாரிப்பு, மெழுகுவர்த்தி மற்றும் ஊதுபத்தி தயாரித்தல் என்பனவற்றுடன் இரசாயன அடிப்படையிலான உற்பத்தி பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த பயிற்சி நெறிகளில் கலந்து கொண்ட மாற்றுவலுவிழந்தோர் மற்றும் பெண்கள் மிகவும் ஆர்வத்துடன் தமது தொழில் முயற்சிகளை மேற்கொண்டு செல்வதனை எங்களால் அவதானிக்க முடிகிறது.

எமது சபை மூலம் தொழில் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொண்ட 150 இற்கும் அதிகமானவர்களுக்கு இம்மாதமளவில் சான்றிதழ்களை வழங்கி கௌரவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 நாளில்...

ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படும் என எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன,

தன்னிச்சையான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்கு பதிலாக நாடாளுமன்றம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறைவேற்று அதிகாரத்துடன் கூடிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும்.

அதில் ஜனாதிபதியும் நாட்டின் ஏனைய பிரஜைகளை போல் சட்டத்திற்கு முன் சாதாரண பிரஜையாக கருதப்படும்.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் படி சட்டரீதியான விசேட சிறப்புரிமைகள் ஜனாதிபதிக்கு கிடைக்காது.

சகல திருத்தங்களிலும் நாட்டின் ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு, இறையாண்மை என்பன பாதுகாக்கப்படும். இவற்றுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.

விஞ்ஞாபனத்தை அடிப்படையாக கொண்டு அமைச்சரவை மற்றும் அதன் துறைகள் தீர்மானிக்கப்படும்.

அமைச்சுக்களின் செயற்பாடுகளுக்காக நாடாளுமன்ற தெரிவுக்குழு முறை வலுப்படுத்தப்படும் என தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

விருப்பு வாக்கு முறை ஒழிக்கப்படும். அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளுக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கட்டாயம் தெரிவு செய்யப்படும் வகையில் தேர்தல் முறையிலும் மாற்றங்கள் செய்யப்படும்.

அரச சேவையை வலுவானதாக மாற்றவும் அதன் பக்கசார்பின்மையை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் பெறும் கடன் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

மேலும் மக்களின் வாழ்க்கை செலவை குறைக்கும் நோக்கில் 10 அத்தியாவசிய பொருட்களுக்கான சுங்க வரிகள் நீக்கப்படும். இதன் மூலம் உணவுப் பொருட்களின் விலைகளை உடனடியாக குறைக்க முடியும்.

அரச ஊழியர்களின் ஊதியம் 10 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்படும். முதல் கட்டமாக பெப்ரவரி மாதம் 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

ஓய்வூதியம் பெறுவோரின் ஊதிய முரண்பாடுகள் களையப்படும் வரை 3 ஆயிரத்து 500 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்.

மூத்த பிரஜைகளுக்கு அரசாங்கம் வழங்கி வரும் உதவி தொகை ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்படும்.

நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு நாட்டின் தேசிய வருமானத்தில் 6 சத வீத நிதி ஒதுக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்களின் மாபொல புலமைப் பரிசில் தொகை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.

அத்துடன் தொழில்நுட்ப கல்வியை கற்கும் மாணவர்களுக்கு கடனுதவியை பெற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த மாணவர்கள் டிப்ளோமா பாடநெறியை கற்க கடனுதவி வழங்கப்படும்.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்களின் சுதந்திரம் பாதுகாக்கப்படும் வகையில் குறுகிய மற்றும் நீண்டகால வேலைத்திட்டங்கள் உருவாக்கப்படும்.

இணையத்தளங்களை இலவசமாக பயன்படுத்தும் வகையில், வைஃபை வலயங்கள் பிரதான நகரங்களில் ஏற்படுத்தப்படும்.

கட்சி, இன, மத பேதமின்றிய 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற வளர்ச்சியடைந்த நாடாக இலங்கை உருவாக்கப்படும் எனவும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கொள்கைப் பிரகடனக் கூட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், தடைகளை பொருட்படுத்தாது மைத்திரிபால சிறிசேன கொள்கைப் பிரகடனம் தொடர்பிலான அறிமுக உரையை மேற்கொண்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்தல், 18-ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொள்கைப் பிரகடனம் கையளிக்க ஆயத்தமாகிய தருணத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# கட்அவுட்...

ஷவின் உருவப்படம் தாங்கிய பாரிய கட்அவுட்டுகளில் ஒன்று சரிந்து விழுந்ததில் பெண்கள் அறுவர் காயமடைந்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு வருகை தந்திருந்த பொதுமக்கள் மீதே இந்த கட்அவுட் சரிந்து விழுந்துள்ளது.

அங்கு வீசிய பலத்த காற்றும் அதனோடு பெய்த கடும் மழையை அடுத்தே பாரிய கட்அவுட் கழன்று விழுந்துள்ளது.

காயமடைந்த பெண்களில் நான்கு பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (எ-11)

# தமிழ்ச்செல்வன்...

னாள் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் வழங்கிய தகவல்களே காரணம் என்ற அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயின் இரகசிய அறிக்கை ஒன்றை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜுலை மாதம் 7ஆம் திகதியிடப்பட்ட 21 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில், இலங்கை உள்ளிட்ட நாடுகளில் கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகளின் போது, சக்தி வாய்ந்த இலக்குகளை தகர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி கள் தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயின் நாடுகடந்த விவகாரங்களுக்கான பிரிவினால் கிளர்ச்சி முறியடிப்பில் மிகச்சிறந்த நடைமுறைகள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கிளர்ச்சியை முறியடிக்க அதன் தலைவர் வே.பிரபா கரன் மற்றும் அவருக்கு நம்பிக்கையானவர்களைக் கொலை செய்வதற்கு 1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டதாக இந்த இரகசிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பை மோசமானதும், மிகவும் புத்திசாதுரியம் கொண்டதுமான அமைப்பாக குறிப்பிட்டுள்ள இவ்வறிக்கை, இவ்வமைப்பை இனத்தேசியவாத அமைப்பாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

முதற்கட்ட இரகசியத் தகவல்கள் கிடைத்ததையடுத்து. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், முக்கிய தலைவர்களையும் கொல்வதற்கு இலங்கை அரசாங்கம் தனது விமானப்படை மூலம் பதுங்குகுழிகளை அழிக்கும் குண்டுகளைப் பயன்படுத்தி 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும், 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் முயற்சி செய்ததாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் ஏனைய தலைவர்களும் இலங்கை படைத்தரப்பின் துல்லிய மான குண்டுவீச்சில் கொல்லப்பட்டமைக்கு, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் முன்னாள் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் தரையில் இருந்து வழங்கிய தகவல்களே காரணம் என்று இரகசிய அறிக்கை ஒன்று குறிப்பிடுவதாகவும் இந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

தலைமைத்துவம் மீதான அதிருப்தியைப் பயன்படுத்தி, முரண்பாடுகளைத் தூண்டிவிட்டு, பிளவுகளை ஏற்படுத்துவதன் மூலம் சக்தி வாய்ந்த இலக்குகளை நெருங்கலாம் என்று இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கேணல் கருணாவுக்கும், விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளைத் திறமையாகப் பயன்படுத்தி, இலங்கை அரசாங்கம் அடைந்த பலன்களையும் சி.ஐ. ஏயின் இந்த அறிக்கை உதாரணமாக சுட்டிக்காட்டியுள்ள்து. (எ-11)

# சட்ட...

எனக்கும் தனிப்பட்ட முறையில் எந்த சொந்த பிரச்சினையில்லை.

வடக்கு மாகாண பிரதம செயலரினை பொறுத்தவரையில் அவர் ஒரு முறைமைக்குள் சிறைப்பட்டுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக வடக்கிற்கு மாகாண சபை உருவாக்கப்பட முன்னர் ஆளுநரோ அல்லது பிரதம செயலரோ பதவியிலிருக்க முடியாது.

மாகாண சபை இல்லாத காலத்தில் ஆளுநரும் பிரதம செயலரும பதவியிலிருந்து மாகாண சபையின் பணிகளினை செய்தால் அது சட்டத்திற்கு முரணானதாகும்.

வட மாகாண சபை வந்தவுடன் 31ஆவது இலக்கத்தில் எது கூறப்பட்டுள்ளதோ அதனை செய்ய வேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்கு உண்டு.

அந்த வகையில் ஆளுநரும் பிரதம செயலரும் புதிதாக நியமிக்கப்படல் வேண்டுமென அவர் தெரிவித்தார். (எ-4)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### மனதிலிருந்து விடுதலை

எடுத்துக்காட்டாக, நமது நண்பர்களிடத்தில், உறவினர்களிடத்தில், மனைவியிடத்தில் நாம் ஏன் இவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறோம் என்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. நமது நடத்தை நமது கட்டுப்பாட்டிற்குள் இல்லை. நாம் இயலாத நிலையில் உள்ளோம். நமது இத்தகைய நடத்தைகளைப் பற்றிய நமது இயலாத உணர்விற்கான பல்வேறு நிகழ்ச்சிகள் உள்ளன. இவையாவும் நமது கட்டுப்பாடற்ற மனதினால் ஏற்பட்டவையே. மனதின் பிடியிலிருந்து நீங்கள் விடுதலையடைந்த உடனேயே உங்களது மகிழ்ச்சி வேறு விதமானதொரு பண்பைக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

## இராசி பலன்

20.12.2014

(மார்கழி 05, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு,

திரியோதசி முற்பகல் 9.49 மணிவரை

அனுஷம் முன்னிரவு 9.55 மணிவரை

இராகுகாலம் 9.24-10-54மணிவரை

சுபநேரம் 3.24-4.54 மணிவரை

வளவன்

**மேடம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

**இடபம்:** நண்பர்கள் ஆதரவு பெருகும் நாள், கேட்ட உதவிகள் தேடி வரலாம், செய்தொழில் சிறப்புக்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**கடகம்:** எதிர்கால முன்னேற்றத்திற்கு முயற்சி எடுப்பீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், மனத்திற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், நண்பர்களின் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, தன்னம்பிக்கையோடு செயற் படுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக்கொள்வீர்கள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும் தேவையற்ற விவாதங்களை தவிர்த்துக் கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** கற்பனை மிகுதியான நாள், பக்குமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், தேக நல னில் அக்கறை காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் உருவாகும் வாய்ப்புண்டு, சயனசுகக் குறைகள் ஏற்படலாம், உங்கள் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம்.

**மகரம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பல தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்

**கும்பம்:** அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள் போசன சுகமுண்டு.

**மீனம்:** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அரை குறையாக இருந்த பணிகளை மிதியும் செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சுஜீவா வைத்தியசாலை

(சுஜீவா தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுர் வேத வைத்தியசாலை )

வைத்தியசாலை பதிவு இல. ஆயு/ யாப/ மசா/ 63

முன்னைய கிளைகள்:-அநுராதபுரம், களத்தாவ தருமபுரம், நேரியகுளம், ஈரப்பெரியகுளம், வவுனிக்குளம், காரைநகர்

தற்போதைய முகவரி:- 579, நாச்சிமார் கோவிலடி, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.

கலட்டி அம்மன் வீதி. , K.K.S.வீதி, யாழ்ப்பாணம்

சேவை நேரம்:-காலை 7.00 மணி முதல் மதியம் 12.00 வரை, மாலை 3.00 முதல் மாலை 5.00 வரை, வெள்ளிக்கிழமை விடுமுறை நாள், வெளிமாவட்ட மக்கள் வருவதற்கு முன் கட்டாயமாக T.P யில் தொடர்பு கொண்டு வரவும்.

**T.P:-0775594147, 0215685333**

| | | |
|---|---|---|
| Dr.ஜெ.ஜெயலன் (DAM RIMP)<br>அரச பதிவு இல.13461<br>27 ஆவது பரம்பரை | Dr.ச.ஜெயலன் (DAM RIMP)<br>அரச பதிவு இல.12128<br>25 ஆவது பரம்பரை<br>(முன்னாள் விரிவுரையாளர், லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி) | Dr.K.O.இராஜரட்ணம் (RIMP)<br>அரச பதிவு இல.6067<br>24 ஆவது பரம்பரை |

பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது 23 தலைமுறைகளுக்குரிய ஓலைச் சுவடிகளிலுள்ள வைத்திய நுணுக்கங்கள் எமக்குக் கிடைத்த பல வைத்திய மேதைகளின் (நல்லூர் அரசர்கள், செகராஜசேகரன், பரராஜசேகரன் உட்பட) கைகண்ட வைத்திய முறைகள் யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி ஆசான்கள் கற்பித்தவை. அதிசிறந்த சித்த ஆயுள்வேத நூல்களில் உள்ளவை. நவீன முறைகள் மூலமாகவும் எம்மால் தயாரிக்கப்பட்ட மருந்துகள், இலங்கை, இந்திய, சித்த ஆயுர்வேத மருந்துகளில் ஆய்வு செய்யப்பட்டு சிறந்ததென தெரிவு தெரிந்தெடுக்கப்பட்ட பக்கவிளைவற்ற (ISO,GMP முத்திரை பெற்ற நிறுவன தயாரிப்புகள்) இயற்கை மருந்துகள் மூலமாகவும் மாற்றமுடியாது எனக் கருதி கைவிடப்பட்ட வியாதிகளை (வாதம், மூட்டு, மாறா சளி, வயிற்றுப்புண் மூலம் பாரிசவாதம், சிறுநீரக பை கற்கள், சருமநோய் (சோயாசிஸ்) உட்பட்ட உடல்பருமன், தலைமுடி உதிர்தல், நரம்பு வியாதிகள் உட்பட) நீக்குவதில் பெயர்பெற்றதுடன் விசேடமாக குழந்தையின்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கி பிரபலமடைந்துள்ளது.

**இலங்கையில் மாபெரும் வெற்றி கண்ட குழந்தையின்மைக்கான சுதேச வைத்திய சிகிச்சை**

❖ஆங்கில மருந்துகளால் பலவித பக்கவிளைவுகள் உண்டாகும் போது பக்கவிளைவற்ற இயற்கை வைத்தியத்தை விரும்புபவர்களுக்காக
❖வேறு மனிதர்கள் விந்து, முட்டை, வாடகைத்தாய், சத்திரசிகிச்சை என்பவற்றை விரும்பாதவர்களுக்காக
❖IVF,ICSI Blastocyst முதலான சத்திரசிகிச்சைகள், Laprascopy முதலிய பரிசோதனைகளின் வேதனை, மனச்சோர்வு என்பவற்றை அனுபவிக்க விரும்பாதவர்களுக்காக
❖இந்தியா மற்றும் இலங்கையில் அதிநவீன சிகிச்சைகளால் குணப்படுத்தமுடியாது கைவிடப்பட்டு குழந்தைகளுக்கு ஏங்கும் தம்பதிகளுக்காக

**இங்கு நீக்கப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான குறைகள்:**பரம்பரை/ பிறவிக்குறைபாடுகள்/வயதுவந்தும் பருவமடையாமை/ மாதவிடாய் குறித்த காலத்தில் வராமை/ அதிக மற்றும் குறைந்த குருதிப்போக்கு/ வயிற்றுவலி/ இயல்புக்கு மாறான கருப்பை/ சூலக கருப்பைக் கட்டிகள்/ முட்டை பலோப்பியன் குழாய், கருப்பைக் கழுத்துக் குறைபாடுகள்/ கொழுப்பு /நோய்த்தொற்று/ கருச்சிதைவு/ கருக்கலைப்பு மற்றும் அறுவைச் சிகிச்சை என்பவற்றாலுண்டான அழற்சிகள்/ வெள்ளைபடல்/ உளவியற் காரணங்கள்/ ஓமோன் சமச்சீரின்மை/ பெண்ணில் ஆணியல்புகள் (முக உரோமம்)/ உடலுறவில் நாட்டமின்மை, உடல்சூடு/ உடலுறவில் வலி, நோ, எரிவு, விந்து இல்லாமை, எண்ணிக்கை குறைவு, உருவ அமைப்பு பிழைகள், ஓடும் திறன் குறைவு / நோய்த்தொற்று/ விதையில் தடித்த நாளங்கள்(Various vein) சுருங்கிய குழாய்கள்/ நோயெதிர்ப்பு பொருள்/ ஆண் குறி சிறுத்தல்/விறைப்புத்தன்மை குறைவு/ விரைவான விந்து வெளியேற்றம்/ சிறுநீருடன் அல்லது தன்பாட்டில் விந்து வெளியேறுதல்.

**சிகிச்சை முறைகள்**

1.பண்டைய, நவீன பரிசோதனைகள் மூலம் இரத்தம் விந்து, முட்டை பிழைகளை சரிப்படுத்தும் எமது பரம்பரை முறைகளையும் பல நாடுகளில் ஆய்வு செய்யப்பட்ட சித்த ஆயுர் வேத மருந்துகள்/ உணவுகள்/ யோகாசனம்/ வர்ம புள்ளி தூண்டல் /சூரிய,நிற,மணி,மந்திர சோதிட சிகிச்சைகளை ஒருங்கிணைந்து பாவித்தல்.(பரிசோதித்து ஆய்வு செய்து பின் வழங்கல்)

2. சோதனைகளின் பின் இருவர் பிரச்சினைகளில்லை என்று கூறுகின்ற போதும் வயதுசெல்கின்ற போதும், விரைவாக குழந்தையுண்டாக வேண்டும் என நினைப்பவர்களுக்காக ஆய்வுகளுக்கு அப்பாற்பட்டதும் பல வைத்தியர்களினால் பயன்படுத்தப்பட்டதும் குழந்தை இல்லையென்றால் ஆணுக்கும்,பெண்ணுக்கும் வழங்குமாறு ஓலைச்சுவடிகளில் எழுதியுள்ளதுமான எமது பரம்பரை மருந்துகளை,நுணுக்கங்களை பாவித்தல்.

**சுஜீவா வைத்தியசாலை, 579, நாச்சிமார் கோவிலடி, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அமரர் இளையவி பார்வதி



ஏழாலை மேற்கு, கோட்டைக்காடு மல்லாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி பார்வதி 18.12.2014 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மைலு - இளையவியின் அன்பு மனைவியும், புனிதவதி, இரத்தினம், திரவியபுஸ்பம், திருமுருகன், சந்திரமூர்த்தி, சசிரேகா, சாந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.12. 2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோட்டைக்காடு,
சுன்னாகம்.

தகவல் :
குடும்பத்தினர்

(சி-9428)

## சண்முகம் ரவீந்திரன் (ரவி)



சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வன்னிவிளாங்குளம் மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் ரவீந்திரன் (ரவி) கடந்த 13.12.2014 சனிக்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் சண்முகம் இராசமணி தம்பதியினரின் மூத்த மகனும் அரியமலரின் (ரதி) அன்புக்கணவரும் நவீன், கவீன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காரைநகர் வேலுப்பிள்ளை பூமணி தம்பதியினரின் மருமகனும், சாரதா (வன்னிவிளாங்குளம்), சந்திரா (பிரான்ஸ்), ரஞ்சன் (வன்னிவிளாங்குளம்), பாஸ்கரன் (ஆசிரியர், மு/கரிப்பட்டமுறிப்பு அ.த.க பாடசாலை), பிரபாகரன் (உந்துருளி திருத்துநர், ஆனைக்கோட்டை), கிருபாகரன் (கிருபா) (உந்துருளி திருத்துநர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியநாதன், புஸ்பராசா (பிரான்ஸ்), பவானி, சத்தியரூபி, சங்கீதா ஆகியோரின் மைத்துனரும், பிருந்தன், பிரவீன், யதுசன், டினோசன், ரேனுஷன், கிந்துஷன், பானுஷன், தாருஷன், சாருகா ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மூன்றுமுறிப்பு வீதி, வன்னிவிளாங்குளம், மாங்குளம் என்ற முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வன்னிவிளாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் :
ச.ரஞ்சன் (சகோதரன்)
வன்னிவிளாங்குளம்,
மாங்குளம்

தொ.பே:
0773105102

(சி-9434)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

## G.C.E A/L 2017

### கணித, உயிரியல் பிரிவு

| தமிழ் மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| PHYSICS | PHYSICS |
| திரு. S.சோதிலிங்கம் | Mr.S.SOTHILINGAM |
| திரு. N.கபிலன் | Mr.K.SELVAN |
| திரு. K. செல்வன் | CHEMISTRY |
| திரு. G.பிரபா | Mr.S.MAHESWARAN |
| CHEMISTRY | Mr.G.BENO |
| திரு. K.சிவத்திரன் | BIOLOGY |
| திரு. N.மகேஸ்வரன் | *OUR USUAL TEACHER* |
| திரு. G.BENO | Mr.T.THAMBIRAJAH |
| திரு. T.சுசாந்தன் | Mr.R.KUGANANTHAN |
| திரு.ரஞ்சித்காந் | COM.MATHS |
| BIOLOGY | Mr.S.SIVAKARAN |
| திரு. T.தம்பிராஜா | தொழில்நுட்பவியல் கற்கைநெறி |
| *வழமையான ஆசிரியருடன்* | + பொறியியற் தொழிநுட்பவியல் |
| திரு. T.கெங்காதரன் | + விஞ்ஞானம் தொழிநுட்பவியல் |
| COM.MATHS | + உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல் |
| திரு. S.செந்தில்ராஜ் | |
| திரு. P.செந்தில்நாதன் | |
| திரு. S.சிவகரன் | |

(சி-9427)

**ஆரம்பம் : -22.12.2014**
**திங்கள் காலை 9.30**


## தேர்தல்...

தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற எதிரணியின் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக, வடக்குக் கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினர் மத்தியில் படைத்தளபதி லெப்.ஜெனரல தயா ரத்நாயக்க பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இது தேர்தல் விதிமுறைகளை மீறுகின்ற செயல். இது தொடர்பில் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் முறைப்பாடு செய்யப்படும். படையினரை அரசியல் வேலையில் ஈடுபடுத்துவது, சீருடையின் கௌரவத்தை அழிக்கின்ற செயலாகும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.(எ-11)

## சண்மாஸ்...

த்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.நா.விசாரணைகளுக்கு ஆவணங்களை சேர்க்கின்றனர் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தேடப்பட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்ட ஆழ்வாப்பிள்ளை விஜேந்திரகுமாரின் (சண்மாஸ்டர்) மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுளளனர்.

நேற்றுக் காலை இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று விமான நிலையத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

சண்மாஸ்டரின் மனைவியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், தனது கணவர் இந்தியாவில் உள்ளார் என்றும் அவரிடமே தாம் செல்லவிருந்தனர் என்றும் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது. (எ-11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## அம்பிகை புத்தக நிலையம்

**பாலர் முதல் பாடசாலை உயர்வகுப்பு வரை உள்ள மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்ய உதயமாகியுள்ளது.**

2015 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக்கப்பட்ட பாடப்புத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள், மற்றும் அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், காகிதாதிகள் பொருட்களையும் அனைத்து இந்திய வெளியீடுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து புத்தகங்களுக்கும் 20%, பாடசாலை உபகரணங்களுக்கு 10%, அப்பியாசக் கொப்பிகளுக்கு 30 - 40% விசேட விலைக் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். (சி-9431)

**அம்பிகை புத்தக நிலையம்**
246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகாமையில்) (கொட்டடிப்பக்கம்)
தொடர்புகளுக்கு :
021 - 561 9294, 077 8875357,
077 8349507

## வடக்கு மாகாணத்தில் உங்கள் நம்பிக்கையின் சிகரம் வழங்கும்
## UK, Australia, New Zealand, Switzerland, Canada, Malaysia
### Student Visa – Work Visa – Visit Visa – Skilled Migration



**New Skilled Migration**
Canadaவில் சுமார் 2 இலட்சம் பேர் வரையிலானோர், தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை பெற 50க்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புக்கள்
கனடா அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற விசா சேவை முகவர் ஊடான 100% நம்பிக்கையான சேவை எம்மிடம் மட்டுமே உண்டு!

**Work Visa with PR**
Australia: 644 Occupations
New Zealand: 101 Occupations
Denmark/Sweden/Finland: Doctors/Dentists/All Masters Graduates, Engineers, IT Specialists, Financial Controller etc.

**Student Visa**
UK, Australia, New Zealand, Switzerland, Canada, Malaysia, Singapore, Sweden, Spain, USA முன்னணி பல்கலைக்கழகங்களில் அனுமதி மற்றும் விசா ஏற்பாடுகள்
Switzerland, Malaysia, Singaporeல் வருமானத்துடன் கூடிய Hotel Management

**Visit Visa**
| | |
|---|---|
| Australia | France |
| New Zealand | Sweden |
| Canada | Germany |
| Netherlands | UK |
| China | Italy |
| Norway | USA |
| Denmark | Japan |
| Switzerland | |

(சி-9436)

**Visa Rejection Appeals**
Canada SUPER VISA
Temporary Residence Visa

முழுமையான விபரங்களுக்கு
www.sikaram.lk
ஒரு 'க்ளிக்'
உங்கள் வாழ்க்கையையே மாற்றலாம்

**SIKARAM**
Education Abroad, Work & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.,
No.275-2/1, Clock Tower Road, Jaffna
(யாழ் வைத்தியசாலை பின்புறம்)
தொ.பே.: 021 222 00 11, 077 36 16 798, 0777 324 004


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.